
Australia: $2.50 Canada: $ 2.00 Europe € 1.20 India: Rs.15.00 Norway. Kr.15.00 Sri Lanka: Rs.50.00 Switzerland: Fr.2.50 United Kingdom: £1.00

FEBRUARY 2009

# நாழிகை

NAZHIKAI
London

International Tamil Newsmagazine



## திருப்பமும் எதிர்பார்ப்பும்


SOLD
RED CARPET.
Thinking of
Buying or Selling
Real Estate
RED CARPET.
Royal Realty Ltd., Brokerage
INDEPENDENTLY OWNED AND OPERATED
Canada - Toronto வுக்கு
அண்மித்த பகுதியில்......
Real Estate Service
வீடு, வியாபாரம் வாங்க, விற்க.....
Karu Kandiah FRI. CRES,
Real Estate Broker / President
* 20 Years Real Estate Experience
* Multi Award Winner
Dir: 416-284-5698
Bus: 416-284-5555
880 Ellesmere Road, Suite 204, Toronto, ON., M1P 2W6


ஸ்ரீ ஐஸ்வர்யா சேலைகளின்
ஹன்சிகா கலெக்ஷன்ஸ்!
இங்கிலாந்தில் முதல் முறையாக
நம்பமுடியாத விலையில் முதல் தரமான
வைர ஆபரணங்கள்,
Exclusive Embroidery புடவைகள்
அறிமுகப்படுத்துகிறோம்.
பட்டு புடவைகள், சில்க்காட்டன், பாலிகாட்டன்,
காட்டன் புடவைகள், வேட்டி மற்றும் சுவாமி துண்டுகள்
WHITE FIRE UK LTD
#63, Victoria Road, Ruislip Manor,
Middx, HA49BH
Mobile: 077 80975142 Ph : 01895636462
Fax : 01895634422



ஐரோப்பிய, மத்திய கிழக்கு நாடுகளில்
24 மணிநேரமும் ஒளிரும் தமிழ் தொலைக்காட்சி
DEEPAM
★ செய்திகள் ★ காலைக்கதிர் ★ சின்னத்திரைத் தொடர்கள்
★ அரசியல் ஆய்வு விவரணங்கள் ★ மகளிர், சிறுவர் நிகழ்ச்சிகள்
★ நீங்களும் நாங்களும் இணையும் பல நிகழ்ச்சிகள்
★ இசை, நடன நிகழ்ச்சிகள் ★ புத்தம் புதிய திரைப்படங்கள்
உலகத் தமிழருக்கு ஒரு தொலைக்காட்சி
சந்தா விசேட சலுகைகளுக்கு தொடர்புகொள்ளுங்கள்
DEEPAM TV
EAST WEST BROADCAST LTD
UNIT 1, EBURY BUSINESS CENTRE
161-163 STAINES ROAD, HOUNSLOW, MIDDLESEX, TW3 3JB, UK
Tel: + 44 (0)208 814 6565, Fax: + 44 (0)208 814 1144
Email: info@deepamtv.tv Web: www.deepamtv.tv



12 | அட்டை செய்தி
ஆம்; முடியும்
வரலாற்றில் திருப்பமும் எதிர்பார்ப்பும்





20 | உலக விவகாரம் - சிம்பாப்வே
நெருக்கடிக்குள் ஒரு நாடு
பரவும் காலரா நோயில் இரண்டாயிரத்துக்கும் அதிகமானோர் மரணம்

26 | 2008இல் உலகம்
ஒரு மீள்குறிப்பு

16 | இலங்கை
கிளிநொச்சி வீழ்ச்சி
புலிகள் கெரில்லா யுத்தமுறைக்கு செல்வர்?

32 | பொருளாதாரம்
உலகை உலுக்கும் நிதி சூறாவளி

34 | இலங்கை
அச்சுறுத்தும் மத்தியகிழக்கு வருமானம்

23 | பங்களாதேஷ்
புத்தாண்டில் மலர்ந்த புதிய நம்பிக்கை
அவாமி லீக்கின் வெற்றி

44 | விளையாட்டு-கிரிக்கெட்
'ரெஸ்ற்' ஆட்டத்தில் அழிபடும் எல்லைக்கோடு

40 | சிறுகதை
தட்டாட்டம்

48 | சினிமா



36 கலை
சென்னையில் இசைவிழா






“செய்தி: மு. க. ஸ்டாலின் கட்சிப் பொருளாளராகிறார் – தி. மு. க. செயற்குழு”

வாசக நேயர்களுக்கு,

பதினோர் ஆண்டுகள்!

‘நாழிகை’ மாத சஞ்சிகையின் கடைசி இதழ் 1998 ஜனவரியில் வெளிவந்தது. அதன்பின்னர் வெளிவரும் இதழ் இது.

ஜனவரியில் பொங்கலுடன் வெளியிடவிருந்தபோது, சில தாமதங்களில் பெப்ரவரி இதழாக வெளிவருகிறது.

எனின், அடுத்த இதழ் அடுத்த ஒரு தசாப்தத்தின் பின்னரா?

பாரதி சொன்னது: “... வாராது போலவந்த மாமணியைத் தோற்போமோ...”

ஆசிரியர்

**Nazhikai** International Tamil Newsmagazine ISSN 1357-6933 Vol: IV, No: 1
**Editor:** S Mahalingasivam **Published by:** Pannews 123 Twyford Road Harrow Middx. HA2 0SJ UK
**Tel: 00 44 208 422 5699 Fax: 00 44 208 426 4105 Email: pannews@hotmail.co.uk**
**Editorial:** editor@nazhikai.com / letters@nazhikai.com

# அமெரிக்காவும் இலங்கையும்

உலக ஒழுங்கில் அவசியமானதாகவிருந்த மாற்றத்துக்கு கட்டியம் கூறப்பட்டுள்ளது.

பராக் ஹுசெயின் ஒபாமா அமெரிக்காவின் ஜனாதிபதியாக பதவியேற்றிருக்கிறார். அவருடைய பதவியேற்பையடுத்து, ஜனநாயக ஆட்சியில் ஒரு புதுயுகம் உதயமாகியிருக்கிறது.

"அறுபது ஆண்டுகளுக்கு முன்னர் உள்ளூர் உணவகம் ஒன்றில்கூட வேலைக்கு அநுமதிக்கப்பட்டிராத தந்தையொருவரின் புதல்வர், இன்று இந்த அதி புனிதமான சத்தியப்பிரமாணத்தை உங்கள் முன் செய்துகொள்கிறேன்" என்று அமெரிக்க சரித்திரத்தில் சரித்திரம்படைத்து, இரண்டு லட்சம் மக்கள்முன் ஒபாமா கூறினாலும், முதலாவது கறுப்பின ஜனாதிபதி என்பதைத்தான் அவரின் முக்கியத்துவமாக உலகம் பார்க்கவில்லை.

'கறுப்பு இனத்தவர்' என்பதும் இருந்தாலும், முன்னர் இப்பதவிக்கு போட்டியிட்டவர்களைப்போல அந்த விவகாரத்தை மாத்திரம் அவர் தேர்தலின்போது தனது வெற்றிக்கு முன்னிலைப்படுத்தவில்லை. ஹிலறி கிளின்ரனன்றி, பராக் ஒபாமாவைத் தமது வேட்பாளராக ஜனநாயக கட்சி தேர்ந்தெடுத்தால், ஜனநாயக கட்சியின் ஆதரவாளர்கள்கூட முழுமையாக அவருக்கு வாக்களிக்கமாட்டாத நிலையில், ஜனாதிபதி பதவிக்கான வாய்ப்பையே ஜனநாயக கட்சி இழந்துவிடும் என்றுதான் ஆரம்பத்தில் பொதுவாக நம்பப்பட்டது. ஆனால், ஒபாமா தேர்ந்தெடுக்கப்பட்டமையும், அவருடைய பதவியேற்பும், கடந்த அரை நூற்றாண்டில் உலகம் வெகு உன்னிப்பாக அவதானித்த நிகழ்ச்சியொன்றாக அது ஆகியதும் அமெரிக்காவிலும் உலக அரங்கிலும் அவரது வருகையின் முக்கியத்துவத்தையும் எதிர்பார்ப்பையும் துல்லியமாக்கும்.

மனித வரலாற்றில், முற்றிலும் ஒரு ஜனநாயக சாதனையின் மிகப்பெரும் கொண்டாட்டமாகவே அன்றைய தினத்தின் நிகழ்வுகள் உணரப்படுகின்றன. 'பரஸ்பர அக்கறையுடனும், மதிப்புடனும் ஒரு புதிய பாதையில் முன்னேறுவோம்' என்று, பதவியேற்ற பின்னர் அவர் கூறியது, உலகம் முழுவதிலும் ஒரு புதிய நம்பிக்கைக்கு வலுவூட்டுகிறது. அரசியல் நடவடிக்கைகளிலும் பொருளாதாரத்திலும் புஷ் நிர்வாகம் ஏற்படுத்திய சீர்கேடுகள் உலகம் முழுவதிலுமே பாதிப்பை ஏற்படுத்தியுள்ளவேளையில் ஏற்பட்ட திருப்பம் இது.

இந்தப் பின்னணியில்தான் இலங்கையிலும், பொதுவில் எதிர்பார்த்திராதவிதத்தில், சம்பவங்கள் நிகழ்கின்றன. முன்னைய அரசாங்கங்கள் நம்பிக்கைகொள்ளாத, துணியாத அல்லது அவற்றால் முடியாதுபோன விவகாரத்தில் மஹிந்த ராஜபக்ஷ அரசு துணிவுடன் செயல்படுகிறது. வடக்கு கிழக்கு மாகாணங்களில் பெரும் பகுதியை தமது கட்டுப்பாட்டுக்குள் வைத்து, தங்களுடைய ஓர் அரசாங்கத்தை நிர்வகித்துவந்த தமிழீழ விடுதலைப் புலிகள், தங்கள் பிரதேசங்களை இழந்து, முல்லைத்தீவில் ஒரு சிறு பகுதிக்குள் தள்ளப்பட்டுவிட்டனர். இதனை எழுதிக்கொண்டிருந்தபோது இருந்த இந்த நிலைமையில், எந்நேரமும் பெரும் மாற்றங்கள் நிகழ்ந்துவிடலாமென்றே தோற்றுகிறது.

விடுதலைப் புலிகளின் இந்த நிலைக்கு என்ன காரணம் என்ற 'மரண விசாரணை' இப்போது வேண்டியதில்லை. ஆனால், இலங்கை அரசாங்கம் இதில் வெற்றிவாகை சூடிக்கொள்கிறதா? என்பதுதான் இப்போது எழும் கேள்வி.

அமெரிக்காவின் 'செப்ரெம்பர் 11' சம்பவத்தையும், விடுதலைப் புலிகளின் நடவடிக்கைகள் சிலவற்றையும் சர்வதேச அரங்கில் சாதகமாக்கி, ஜோர்ஜ் புஷ்ஷின் 'பயங்கரவாதத்துக்கு எதிரான யுத்தத்தில்' இலங்கை அரசும் இதனை சாதிக்கிறது.

இலங்கைத் தமிழ் மக்கள் அவர்களது சுயநிர்ணய உரிமையின் அடிப்படையில் தமது சுதந்திரத்தையும் இறைமையையும் மீட்டெடுப்பதற்கான ஒரு மக்களாணையை 1977 பொதுத் தேர்தலில் அளித்தார்கள். இலங்கை சுதந்திரமடைந்ததிலிருந்து மாறிமாறி ஆட்சிக்குவந்த அரசாங்கங்கள் தமிழ்மக்கள்மீது மேற்கொண்ட பல்வேறு இனபாரபட்ச நடவடிக்கைகளின் விளைவாகவும், இவற்றைத் தீர்க்க மேற்கொண்ட பல்வேறு முயற்சிகளின் தோல்வியின் விளைவாகவுமே அவர்கள் இத் தீர்மானத்துக்கு தள்ளப்பட்டிருந்தார்கள். அந்தத் தேர்தலில் மிகப் பெரும்பான்மை பலத்தோடு ஆட்சியை அமைத்த ஜே. ஆர். ஜயவர்த்தன, அரசாங்கத்தின் கொள்கை விளக்கவுரையில்; "தமிழ் பேசும் மக்கள் ஏராளமான பிரச்னைகளை எதிர்கொள்வதை எனது அரசாங்கம் ஏற்றுக்கொள்கிறது. அவர்களின் பிரச்னைகளுக்கு ஒரு தீர்வு காணப்படாததில், அது, தனிநாடு ஒன்றை உருவாக்கும் ஓர் அமைப்புக்கு அவர்கள் தமது ஆதரவை அளிக்கவைத்திருக்கிறது. முழு நாட்டினதும் பொருளாதார அபிவிருத்திக்கு அவசியமான தேசிய ஒருமைப்பாட்டையும் ஐக்கியத்தையும் பேணும்விதத்தில் இப் பிரச்னைகள் தீர்க்கப்படவேண்டும் என்பதையும், காலதாமதமின்றி எல்லாத் துறைகளிலும் இவர்களின் மனத்தாங்கல்களைப் போக்க சகல நடவடிக்கைகளும் எடுக்கப்படவேண்டும் என்பதையும் அரசாங்கம் உணர்கிறது" என்று கூறினார்.

ஆனால், ஜயவர்த்தனவுக்குப் பின்னர் ரணசிங்க பிரேமதாச, டி. பி. விஜேதுங்க, சந்திரிகா குமாரதுங்க, தற்போது மஹிந்த ராஜபக்ஷ ஆகியோர் ஜனாதிபதிகளாகி, மற்றொரு முப்பது ஆண்டுகள் கழிந்துவிட்டன. முதல் முப்பது ஆண்டுகள் சாத்வீக போராட்டத்திலும் அடுத்த முப்பது ஆண்டுகள் வன்முறை நடவடிக்கைகளிலும் 70 ஆயிரத்துக்கும் மேலான உயிர்கள் பலியாகியுள்ளன.

விடுதலைப் புலிகளுடைய தோற்றத்துக்கும் எழுச்சிக்கும் காரணமான தமிழ் மக்களின் அடிப்படைப் பிரச்னைகளுக்கு தீர்வு காணாது, புலிகள் மீதான தற்போதைய வெற்றியை ஜனாதிபதி வெற்றியாக கருதினால், அது, மேலும் பல தசாப்தங்களுக்கு நாட்டைப் பிரச்னைகளுள்ளேயே தத்தளிக்கவைக்கும் 'அரசியல் வெற்றி'யாகவே அமையும்.

விடுதலைப் புலிகள் விடயத்தில் இந்தியாவுக்கு சில நிலைப்பாடுகள் இருக்கலாம். ஆனால், இலங்கைத் தமிழர்களின் தற்போதைய மனிதாபிமான பிரச்னையிலும், அவர்களின் கௌரவமான அரசியல் தீர்விலும் இந்தியாவுக்குள்ள தார்மீக பொறுப்பில் இந்தியா விலகிவிடமுடியாது. அமெரிக்காவில் ஏற்பட்ட ஜனநாயக சாதனை, ஜனநாயக ரீதியில் முதன்முதலாக எதிர்க்கட்சித் தலைவர் பதவிக்கு வந்த தமிழர்மீது நம்பிக்கையில்லாப் பிரேரணை கொணர்ந்த இலங்கையிலும் மாற்றத்தை ஏற்படுத்தட்டும்.



## இங்கிலாந்து

### 800 ஆண்டுகளில் கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழகம்

கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழகம் நிறுவப்பட்ட 800 ஆண்டுகள் நிறைவு உலகெங்கும் கொண்டாடப்படுகிறது.

ஒக்ஸ்போர்ட் பல்கலைக்கழகத்து கல்விமான்கள் சிலர், இப் புராதன ரோம வர்த்தக நகரில், தாங்கள் சேர்ந்து கற்பதற்காக 1209ஆண்டில் நிறுவியதுதான் இன்று உலகப் பிரசித்தியையும் கீர்த்தியையும்பெற்று திகழ்கிறது.

ஒலிவர் குரொம்வெல், ஐசாக் நியூட்டன், சார்ள்ஸ் டாவின், ஸ்ரீபன் ஹோகிங் போன்ற அரசியல், விஞ்ஞான, கல்வித்துறை மேதைகளோடு, நோபல் பரிசைப் பெற்றவர்களில் மிகப்பெரும்பாலோரை உருவாக்கியதும் இதுதான்.

அணுவைப் பிரிப்பதும், பரம்பரை அலகின் அமைப்பைக் கண்டதுமான பல விஞ்ஞான புதுமைகள் வரலாற்றில் இங்குதான் தோற்றின.

1209இல் ஆரம்பிக்கப்பட்டாலும், சரியான தேதி, மாதம் தெரியவில்லை. ஒக்ரோபரில், எண்ணக் கருவூல விழாவொன்றுக்கும் நவம்பரில் நிறைவு விழாவுக்கும் எற்பாடுகள் நடைபெறுகின்றன.

18 ஆயிரம் மாணவர்கள் பயிலும் கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழகத்தில் வருட வருமானம் கிட்டத்தட்ட ஒரு பில்லியன் ஸ்ரேர்ளிங் பவுண்கள்.



## இந்தியா

### மறையும் பாரம்பரியம்

இந்தியாவில், தலைநகர் புதுடில்லியில் ஆண்டுதோறும் நடைபெறும் இராணுவ அணிவகுப்பில் இடம்பெற்றுவந்த யானைகள் அணிவகுப்பு இனி நடைபெறமாட்டாது.

கடந்த மூன்று தசாப்தங்களாக தொடர்ந்த இப் பாரம்பரியம், விலங்கு உரிமைவாதிகள் எழுப்பிய எதிர்பைத் தொடர்ந்து, நிறுத்தப்படுவதாக அதிகாரிகள் தெரிவிக்கின்றனர். அத்துடன், கடந்த ஆண்டு அணிவகுப்பில் இரண்டு யானைகளை ஜனாதிபதி அமர்ந்திருந்த மேடையருகே பீதிகொண்டு மிரண்டதையடுத்து, பாதுகாப்பும் இதில் கருத்தில்கொள்ளப்படுவதாக அவர்கள் கூறுகின்றனர். இந்த அணிவகுப்பு யானைகளில் குதூகலத்துக்காக குழந்தைகளும் ஏற்றிச்செல்லப்படுவது வழக்கம்.

அணிவகுப்புக்கான யானைகள் தனியார்களான யானைப் பாகர்களிடம் பாதுகாப்பு அமைச்சினால் வாடகைக்கு பெறப்பட்டுவந்தன. இரண்டாயிரம் இந்திய ரூபா (சுமார் 40 அமெரிக்க டொலர்கள்) வாடகைப் பணமாக வழங்கப்பட்டது.

இந்தியாவில் யானைகள், மத வைபவங்களிலும் சுமைகளைத் தூக்குவதிலும் பொதுவாக பயன்படுத்தப்படுகின்றன. பல தடவைகளில், குறிப்பாக கேரள மாநிலத்தில், வைபவங்களின்போது யானைகள் பீதியடைந்து, உயிராபத்துக்கள் ஏற்பட்டிருக்கின்றன.

இராணுவ அணிவகுப்பில் இனி, குழந்தைகள் திறந்த இராணுவ ஜீப்புகளில் ஏற்றிச்செல்லப்படுவார்கள்.

ஈராக்

## பிரிட்டிஷ் படை வாபஸ்



'தமது இலக்கை நிறைவேற்றி' பிரிட்டிஷ் படைகள் இந்த ஆண்டு யூலை மாத இறுதிக்குள் ஈராக்கைவிட்டு வெளியேறும் என்று பிரிட்டிஷ் பிரதமர் கோர்டன் பிரவுனும் ஈராக் பிரதமர் நூறி அல்-மாலிக்கியும் தெரிவித்திருக்கின்றனர். பாக்தாத்தில் இரு தலைவர்களுக்குமிடையே நடைபெற்ற பேச்சுவார்த்தையின் பின்னர் வெளியிடப்பட்ட அறிக்கையில் இது தெரிவிக்கப்பட்டது. இரு நாடுகளுக்குமிடையேயான ஒத்துழைப்பு எப்பொழுதும் தொடரும் என்றும் இவர்கள் தெரிவித்துள்ளனர்.

பிரிட்டிஷ் படைகள் ஈராக்கில் தங்கியிருக்கும் காலத்தை மேலும் நீடிக்க ஈராக் அரசு கோரும் விதத்திலும் உடன்பாட்டில் வகைசெய்யப்பட்டிருப்பதை ஈராக் பிரதமர் உறுதிசெய்தாலும், அப்படியான ஒரு தேவை ஏற்படமாட்டாதென்று இரு தலைவர்களும் நம்பிக்கை தெரிவித்தனர்.

2007 யூனில் கோர்டன் பிரவுண் பிரதமராகப் பதவியேற்றபின்னர் நான்காவது தடவையாக மேற்கொண்ட இரகசிய ஈராக் விஜயத்தில் இந்த உடன்படிக்கை மேற்கொள்ளப்பட்டது. ஈராக்கின் தென்பகுதி நகரான பாஸ்ராவில் சுமார் நாலாயிரம் பிரிட்டிஷ் படையினர் தற்போது நிலைகொண்டுள்ளனர்.

2003இல் ஈராக்மீதான ஆக்கிரமிப்பின்போது அமெரிக்காவுக்கு மிகப்பெரும் ஆதரவாகவிருந்த பிரிட்டன், 46 ஆயிரம் பிரிட்டிஷ் இராணுவத்தினரை அங்கு அனுப்பியிருந்தது. இவர்களில், 178 பேர் அங்கு உயிரிழந்தனர்.

2006 - 2007 நிதியாண்டு வரை 5 பில்லியன் ஸ்ரேர்லிங் பவுண்களை (7.6 பில்லியன் அமெரிக்க டொலர்) ஈராக் யுத்தத்தில் பிரிட்டன் செலவிட்டுள்ளது.



இங்கிலாந்து

## துணை சபாநாயகராக இந்தியர்

இந்தியாவில் பிறந்தவரான ஸ்வராஜ் போல் பிரபு , பிரிட்டிஷ் பிரபுக்கள் சபையின் துணை சபாநாயகராக நியமிக்கப்பட்டிருக்கிறார். இதன்மூலம், இந்திய இனத்தவரான ஒருவர் முதன்முதலாக இப்பதவிக்கு நியமிக்கப்பட்டிருக்கிறார்.

தனது மகளின் மருத்துவ சிகிச்சைக்காக 1966இல் இங்கிலாந்து வந்த ஸ்வராஜ் போல், மகள் மரணமுற்ற பின்னரும், இங்கிலாந்தின் உருக்கு வர்த்தகத்தில் பிரபல்யம் வாய்ந்த ஒருவராக உயர்ந்தார். 1978இல் மகாராணியால் 'சேர்' பட்டம் வழங்கிக் கௌரவிக்கப்பட்ட இவர், வாழ்நாள் சீமானாகி, 1996இல் பிரபுக்கள் சபை உறுப்பினரானார்.


'இந்தியாவின் சுதந்திர போராட்ட குடும்பத்தில் பிறந்த ஒருவருக்கு வழங்கப்பட்ட கௌரவம் இது' என்று தனது நியமனம் குறித்து சுவராஜ் போல் பிரபு தெரிவித்தார். பிரிட்டனில் ஆசிய, கறுப்பு இனத்தவர் உள்ளிட்ட இன சிறுபான்மையினர் 10 சதவீதத்தினராகவிருந்தபோதும், பாராளுமன்றத்தில் 3 சதவீதத்தினரே பிரதிநிதித்துவம் வகிக்கின்றனர்.

தென் ஆபிரிக்கா

## சிம்பாப்வே மீதான துரோகம்

சிம்பாப்வே அதிபர் றொபர்ட் முகாபே மீதான நடவடிக்கைகளில் தென்னாபிரிக்கா தனது தார்மீக பொறுப்புடன் செயல்படவில்லை என்று ஆர்ச்பிஷப் டெஸ்மன்ட் டுற்று குற்றம் சுமத்தியுள்ளார். சமாதானத்துக்கான நோபல் பரிசைப்பெற்ற ஆர்ச்பிஷப் டுற்று, முகாபேயை அகற்றுவதற்கான ஒரேவழி பலாத்காரமே என்றும் கூறுகிறார்.

சிம்பாப்வே மக்களின் பக்கம் அவர்களுக்கு ஆதரவாக தனது நாடு இல்லாதது தமக்கு மிகுந்த கவலையை அளிப்பதாகவும், தென் ஆபிரிக்க அபிவிருத்தி சமூகத்தின் தலைமைப் பதவியை தென்னாபிரிக்கா வகிப்பதால், ஒரு தலைமைத்துவ பங்கை தென்னாபிரிக்கா கொண்டிருந்தபோதும், ஐக்கிய நாடுகள் சபை மேற்கொள்ளும் உறுதியான நடவடிக்கைகளுக்குத் தடையாக தென்னாபிரிக்கா துரோகமிழைக்கிறது என்றும் அவர் கூறியிருக்கிறார்.



சீனா

## பால்மா ஊழலில் மரண தண்டனை



சீனாவில், நஞ்சூட்டப்பட்ட குழந்தைகள் பால்மா ஊழலில், இருவருக்கு மரணதண்டனை விதிக்கப்பட்டுள்ளது. இந்த ஊழலுடன் பெரிதும் தொடர்புபடுத்தப்பட்டிருந்த 'சன்லூ' பாலுணவுப்பொருள் தயாரிப்பு நிறுவனத்தின் முன்னாள் அதிபருக்கு நீதிமன்றம் ஆயுள் தண்டனை விதித்துள்ளது.

பால்மாவில் புரதச்சத்தை அதிகரித்துக் காண்பிப்பதற்காக மெலாமைன் என்ற இரசாயனப் பதார்த்தம் ஒன்றை பாலில் சேர்த்து நடைபெற்ற இந்த ஊழலின் விளைவாக, ஆறு குழந்தைகள் மரணமுற்றதுடன் சுமார் மூன்று லட்சம் குழந்தைகள் நோய்வாய்ப்பட்டன. இதனால், உலகம் முழுவதும் இந்த பால்மா விற்பனையிலிருந்து திரும்பப் பெறப்பட்டது.

செப்ரெம்பரில் இந்த ஊழல் அம்பலமாகியபோது, சன்லூ நிறுவனம் பால்மாவில் நச்சுத்தன்மை இருப்பது தெரிந்திருந்தும் 900 தொன் பால் மாவைச் சந்தைக்கு அனுப்பியிருந்தது தெரியவந்தது. நியூசிலாந்திலுள்ள இதன் கூட்டு நிறுவனம் ஒன்று பின்னர் இதில் தலையிட்டதிலேயே உற்பத்தி நிறுத்தப்பட்டது.

குற்றத்தை ஒப்புக்கொண்ட சன்லூ அதிபர் தியன் வென்ஹூவா வுக்கு ஆயுள் தண்டனையுடன் 20 மில்லியன் யென் (2.9 மில்லியன் அமெரிக்க டொலர்) அபராதமும் விதிக்கப்பட்டுள்ளது.

மரண தண்டனை விதிக்கப்பட்டவர்கள், பண்ணை உரிமையாளர் ஒருவரும் பால் விற்பனையாளர் ஒருவரும் ஆவர்.

கினி

## 'இரும்பு அதிபர்' லன்சானா மறைவு



கினியில் அதிபர் லன்சானா மரணத்தையடுத்து, அரசாங்கம் கலைக்கப்பட்டு, அரசியலமைப்பு இடைநிறுத்தம் செய்யப்பட்டுள்ளதாக இராணுவம் அறிவித்துள்ளது.

1984இலிலிருந்து அதிபர் லன்சானா கினியில் இரும்புப்பிடி ஆட்சியொன்றை மேற்கொண்டிருந்தார். பலவருடகால கொடூரமான நெருக்கடிகளின் பின்னர் அண்டைநாடுகளான லைபீரியா, சியரா லியோன், ஐவரி கோஸ்ற் என்பன ஒப்பீட்டளவில் ஒரு ஸ்திர நிலையை எய்தியுள்ளபோது, கினியில் ஏற்படும் அமைதியின்மை எல்லைகளைத் தாண்டி பரவவும், துணைக்கண்டத்தில் மீண்டுமொரு குழப்பநிலை உருவாகவும் சாத்தியமாகலாம் என்ற அச்சம் எழுந்துள்ளது.

அதிபர் லன்சானாவின் மரணத்தை பாராளுமன்ற சபாநாயகர் அறிவித்த சிலமணித்தியாலங்களில் இராணுவ அதிகாரி கமரா, ஆட்சியை இராணுவம் பொறுப்பேற்றுள்ளதாக அரச வானொலியில் அறிவித்தார். அடுத்த சில தினங்களில் அமைக்கப்படவிருக்கும் ஆலோசனைச் சபையில் இன சமத்துவத்துக்கேற்ப பொது மக்களும், இராணுவத்தினரும் இடம்பெறுவர் என்றும் அதன் பின்னர், அந்தச் சபை இராணுவத் தலைவர் ஒருவரை நாட்டின் அதிபராகவும் பொதுமக்களில் ஒருவரை பிரதமராகவும் அறிவிக்கும் என்றும் அவர் தெரிவித்தார்.

பிரான்சிடமிருந்து 1958இல் கினி சுதந்திரமடைந்ததிலிருந்து அதிபராகவிருந்த செக்கு ரோறே 1984இல் சடுதியாக மரணமுற்றதையடுத்து, இராணுவ சதியொன்றில் இராணுவ தலைவரான லன்சானா, ஆட்சியைக் கைப்பற்றினார். பொதுமக்கள் ஆட்சியென்பதைக் காண்பிக்க மூன்று தடவைகள் அவர் தேர்தலில் வெற்றிபெற்றாலும், அத் தேர்தல்கள் சுதந்திரமாகவும் நேர்மையாகவும் நடத்தப்படவில்லை என்றே கூறப்படுகிறது. நீரிழிவு நோயுடன், அதீதமான புகைக்கும் பழக்கமும் கொண்ட லன்சானா, கடந்த சுமார் ஐந்து ஆண்டுகளாகவே சுகவீனமுற்றிருந்தபோது, யார் அரசை நிர்வகித்தார்கள் என்பது துல்லியப்படவில்லை. எதிர்க்கட்சி அரசியல் தலைவர்கள் அதிகாரிகளால் மிரட்டப்பட்டதுடன் சிறையிலும் அடைக்கப்பட்டார்கள். சிறையிலிருந்து விடுவிக்கப்பட்டபின்னர் பிரான்சில் தஞ்சம் புகுந்திருந்த, அநுபவம் மிகுந்த எதிர்க்கட்சி அரசியல்வாதியான அல்பா கொன்டே, லன்சானாவின் மரணத்தையடுத்து நாடு திரும்பியிருக்கிறார்.

ருவான்டாவின் கனிம வளமும் செழிப்பான மண்ணும் அடிப்படையில் ஆபிரிக்காவின் அதி செல்வந்த நாடுகளில் ஒன்றாக ருவான்டாவை ஆக்கினாலும், அங்கு வாழும் எட்டு மில்லியன் மக்கள் அந்தப் பிராந்தியத்தின் மிகவும் வறிய மக்களாகவே வாழ்கிறார்கள்.

சிம்பாப்வே

## பேச்சுக்கள் தோல்வி



அதிபர் முகாபே, எதிர்க்கட்சித் தலைவர் மோர்கன் ஸ்வங்கராய் ஆகியோருக்கிடையேயான 12 மணிநேர பேச்சுவார்த்தைகள் பலன் எதனையும் அளிக்கவில்லை.

செப்ரெம்பரில் ஏற்பட்ட அதிகார பகிர்வு உடன்படிக்கையில், ஸ்வங்கராய் பிரதமராகவும் முகாபே தொடர்ந்து அதிபராகவுமிருக்க ஏற்பாடானது. எனினும், முக்கிய பொறுப்புக்களை முகாபே தன்வசமே வைத்திருப்பதாக ஸ்வங்கராய் குற்றஞ்சுமத்துகிறார். ஆனால், முடிந்த சலுகைகள் அனைத்தும் வழங்கப்பட்டுள்ளதாக முகாபே தெரிவிக்கிறார்.

தென்னாபிரிக்க, மொசாம்பிக் தலைவர்களின் அநுசரணையுடனான அதிகார பகிர்வு உடன்படிக்கை இதனால் ஸ்தம்பிதநிலையில் உள்ளது.

இங்கிலாந்து

## கார் குண்டுவெடிப்பில் மருத்துவருக்கு சிறைத் தண்டனை



பெருமளவிலான உயிர்ச்சேதத்தை ஏற்படுத்தும் சதியில் ஈடுபட்டதாகக் பிரிட்டனில் பணியாற்றும் ஈராக்கிய மருத்துவர் ஒருவருக்கு, குறைந்தது 32 வருடகால சிறைத்தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

2007இல், கார் குண்டுவெடிப்புகள் மூலம் உயிர்ச் சேதத்தை விளைக்க, கபீல் அஹ்மட் என்பவருடன் உடந்தையாக சதிசெய்ததாக 29 வயதான பிலால் அப்துல்லா குற்றஞ்சாட்டப்பட்டிருந்தார்.

லண்டனின் நெருக்கடி மிகுந்த பகுதியில், வீதியொன்றிலும் இரவு விடுதி ஒன்றின் முன்பாகவும் கடந்த யூன் 29ஆம் தேதி கார் குண்டுகளை வைத்தபோது, அவை வெடிக்கத் தவறிவிட்டன. மறுநாள், வாயு வெடிபொருள்கள் நிரப்பப்பட்ட எரியும் ஜீப் வண்டியொன்றை, ஸ்கொட்லாந்தின் கிளாஸ்கோ விமான நிலையத்தினுள் ஓட்டிச் சென்றதில் அஹ்மட் எரிகாயங்களுடன் மரணமானார்.


மத தீவிரவாத வெறிபிடித்த அப்துல்லா, பிரிட்டிஷ் மக்களுக்கு பாரதூரமான தீங்கிளைக்கும் மனோநிலையில் இருப்பதாக நீதிபதி மக்கே தீர்ப்பில் தெரிவித்தார்.

மூன்றாவது நபராக குற்றஞ்சாட்டப்படிருந்த ஜோர்டான் நாட்டவரான மருத்துவர் முஹமட் ஆஷா குற்றச்சாட்டுகளிலிருந்து விடுவிக்கப்பட்டாலும், அவரை நாடுகடத்துவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

பிரிட்டனில் பிறந்தவரான அப்துல்லா, பிரிட்டிஷ் சட்டத்தில் விதிக்கப்பட்டபடி, தான் ஒரு 'பயங்கரவாதி'யே என்றும், ஆனால், ஈராக் மீதான நடவடிக்கையில் பிரிட்டிஷ் அரசும் இராணுவமும் இதே பயங்கரவாத குற்றச்சாட்டுக்கு உரியனவென்றே தான் நம்புவதாகவும் நீதிமன்றத்தில் தெரிவித்தார்.

குற்றச்சாட்டுக்களிலிருந்து விடுவிக்கப்பட்டபின்னரும், தான் தடுத்துவைக்கப்பட்டிருப்பது பெரும் ஏமாற்றத்தை அளிப்பதாக டாக்டர் ஆஷா தெரிவித்தார்.

அதி உயர் நிபுணத்துவ குடிவரவு விசாவில், ஸ்ரபோர்ட்ஷயர் வடக்கு பல்கலைக்கழக மருத்துவ மனையில் பணிபுரிந்துகொண்டிருந்த டாக்டர் ஆஷா, பிரிட்டனின் மிகச் சிறந்த மூளைநரம்பு வைத்திய நிபுணராக மதிக்கப்பட்டால் ஆச்சரியப்படுவதற்கில்லை என்று, சாட்சியமளித்த வைத்திய நிபுணர் ஒருவர் நீதிமன்றத்தில் தெரிவித்தார்.



யப்பான்

## 71 ஆண்டுகளின் பின்னர் வருமானத்தில் இழப்பு

யப்பானின் மிகப்பெரும் கார் உற்பத்தி நிறுவனமான 'ரொயற்றா', 71 ஆண்டுகளில் முதன்முதலாக அதன் வருடாந்த வருமானத்தில் இழப்பை எதிர்நோக்குகிறது. ஊசலாடும் விற்பனையும், யப்பானிய நாணயம் யென்னின் பெறுமதி ஏற்றமும் 150 பில்லியன் யென் (11 பில்லியன் ஸ்ரேர்லிங் பவுண்) இழப்பை அதன் வருடாந்த நிகர லாபத்தில் ஏற்படுத்தும் என்று ரொயற்றா அறிவித்திருக்கிறது.


ஆனாலும், கடந்த ஆண்டில் அதன் நிகர லாபமான 17 ரில்லியன் யென்னுடன் பார்க்கையில் இந்த இழப்பு சொற்பமானதே.

யென்னின் பெறுமதி உயர்வும் மோட்டார் விற்பனைச் சந்தையில் எதிபார்த்ததைவிட விரைவான சுருக்கமும் இந்த வருமான இழப்புக்குக் காரணம்.

அமெரிக்க டொலர் கடந்த 13 ஆண்டுகளுக்குப் பின்னர் மிகப் பெரும் வீழ்ச்சியை அடைந்ததில் அமெரிக்கா உள்பட, முக்கிய வெளிநாட்டு சந்தைகள் அனைத்திலும் கார் விற்பனை தளர்ச்சிகண்டதையடுத்து, கடந்த ஆண்டைவிட 4 வீதம் குறைவாக, 8.96 மில்லியன் கார்களை இந்த ஆண்டு உலக சந்தையில் விற்க ரொயற்றா எதிர்பார்க்கிறது.

யென்னின் பெறுமதி ஏற்றம், யப்பானிய கார் உற்பத்தி நிறுவனங்கள் அனைத்தினதும் வெளிநாட்டு வருமானத்தைச் சிதைத்து, அவற்றின் லாபத்தையும் பாதித்துள்ளது. 'ஹொன்டா' நிறுவனம் அதன் வருமானம் 67 வீதத்தால் குறையும் என்று எதிர்பார்க்கிறது.

யென்னின் பெறுமதி உயர்ந்ததால், யப்பானின் மொத்த ஏற்றுமதி 26.7 வீதத்தால் கடந்த ஆண்டைவிட வீழ்ச்சியடைந்திருக்கிறது.


Nalli
80
YEARS
SINCE 1928
First and the Finest
NALLI CHINNASAMI CHETTY
Opposite Panagal Park
9 Nageswaran Road, T. Nagar
Chennai - 600 017
Tel: 24344115 / 42604567
Email: inquiry@nalli.com Web:www.nalli.com

# மும்பாய்: சில கேள்விகள்; ஒரு கவலை



தாக்கப்பட்டது மும்பாய் அல்ல; இந்தியா. தாக்கியவர்களை வளர்த்துவிடுவது பகைநாடுகள் மட்டுமல்ல, நாமும்தான். வெடிகுண்டுகளின் இரத்தத்தை பேனா மையினால் துடைத்துவிட முடியும் என்று நினைத்து, அறிக்கைகளை மட்டுமே பதிலாகக் கொடுத்துவந்த இந்தியா, இந்த முறை இராணுவத்தை அழைத்தது.

பிணைக் கைதிகளைக் காப்பாற்றித் தீவிரவாதிகளைப் பிடிக்கவேண்டும் என்று தேசிய பாதுகாப்புப்படை அரும்பாடுபட்டும் சில பிணைக் கைதிகள் உயிரிழந்தார்கள். போராட்டத்தில் காவல்துறை, மற்றும் இராணுவ அதிகாரிகள் சிலர் உயிரிழந்தார்கள்; காயமடைந்தார்கள். இதைத் தவிர்த்திருக்க முடியாது. துக்கத்தைக் கொஞ்சம் தொலைவில் வைத்துவிட்டு, இனி எப்படிச் செயல்படுவது என்று யோசித்தால் சில கேள்விகள் எழுகின்றன.

மிக முக்கியமான கேள்வி: கடல்வழியாகத் தாக்குதல் நடக்கும் என்று நவம்பர் 18ஆம் தேதியே தெரிவித்தோம் என்று உளவுத்துறை சொன்னதாகத் தொலைக்காட்சியில் ஒருவரிச் செய்தி வெளியானது.

உளவுத் துறையைச் சேர்ந்த யார், யாரிடம் இதைச் சொன்னார் என்பதில் ரகசியம் காக்கப்படவேண்டியதுதான். இது, பொதுமக்களுக்குத் தெரிந்தாகவேண்டும் என்பதில்லை. ஆனால், இப்படி உளவுத்துறை செய்த எச்சரிக்கையை சம்பந்தப்பட்டவர்கள் காதில் போட்டுக்கொண்டார்களா? செயல்பட்டார்களா? தகவல் கிடைத்ததும் அலட்சியமாக இருந்தவர்கள் யார்? கவனமாக இருந்தும் தீவிரவாதிகள் நுழைந்துவிட்டார்கள் என்றால் நம் பாதுகாப்பு அமைப்பில் 'உதார்' இருக்கும் அளவுக்கு 'உஷார்' இல்லை என்று சொல்லலாமா?

சரி, எதிர்த் தாக்குதலுக்கு தேசிய பாதுகாப்புப்படை ஏன் உடனே அழைக்கப்படவில்லை? தொலைக்காட்சி அமைப்புக்கள் வேகமாகச் சென்ற அளவுக்கு எதிர்த் தாக்குதல் ஏன் வேகம் பிடிக்கவில்லை?

ஒவ்வொரு முறையும் இப்படித் தாக்குதல் நடந்தபிறகு, அமைச்சரவைக் கூட்டம், அதிகாரிகள் கூட்டம், கூட்டுக் கூட்டம் என்று சொற்களே விருந்தாகும் கூட்டங்கள் நடைபெறுமே, அவற்றில் அடுத்தமுறை தாக்குதல் என்றால் இப்படிச் செய்யவேண்டும் என்று முடிவுகளும் எடுத்திருப்பார்களே; இதுமாதிரி விஷயங்களில் Mock Encounter நடைபெறுமே, அப்படி ஏதாவது ஒத்திகைகள் சமீபத்தில் நடைபெற்றனவா?

இன்னது நடந்தால், அடுத்த நொடியிலிருந்து இன்னின்ன நடவடிக்கைகள் என்பதைப் பாதுகாப்பு விஷயங்களில் முடிவுசெய்யவேண்டியது யார்? உள்துறை அமைச்சரா? பிரதமரா? இவர்கள் பொம்மைகள் என்றால் இவர்களை ஆட்டுவிப்பவரா?

வீட்டில் 'சுவிட்ச்' போட்டால் மின் விளக்கு உடனே எரிகிறது. அரசாங்க அமைப்பில் சுவிட்ச் போட்டால் சுவிட்ச் மின்சார கம்பியிடம் பேசுகிறது. மின்சாரக்கம்பி மின் வாரியத் தலைவரிடம் பேசுகிறது. மின்வாரியத் தலைமை, அரசு அதிகாரத் தலைமையிடம் பேசுகிறது. அரசு அதிகாரத் தலைமையோ மெத்தனமாக இருக்கிறது. இந்த லட்சணத்தில் எந்த சுவிட்சைப் போட்டு எந்த விளக்கை எரியவிடுவது? யாருக்கு எப்பொழுது வெளிச்சம் கிடைக்கும்?

எதிர்க்கட்சிகளை வேவு பார்க்ககவும், சொந்தக் கட்சியிலேயே அதிருப்தியாளர்களை வேவுபார்க்கவும், கூட்டணிகளுக்கு நூல்விடவும், கூட்டணி நூல்களை அறுத்துவிடவும் பயன்படுத்தப்படுகிற உளவுத்துறை, மக்கள் பிரச்னைகளை அலச, அறிவிக்க, உரியமுறையில் உடனடியாகச் செயல்பட ஏன் அனுமதிக்கப்படுவதில்லை?

அரசியல்வாதிகளின் பாதுகாப்புக்குக் கோடிகளில் செலவிடும் மத்திய, மாநில அரசுகள் ஏன் மக்கள் பாதுகாப்புப் பணியில் மனமும் பணமும் நேரமும் கவனமும் செலவிடுவதில்லை? மக்கள் பிரதிநிதிகளாகத் தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள் அரசாங்கம் தமக்குமட்டும் இயங்குவதாக நினைக்கிறார்களே, பாதுகாப்பு மக்களுக்கும் தேவை என்பதை உணரமாட்டார்களா?

இந்தக் கேள்விகளுக்கும் தீர்மானங்களுக்கும் மும்பாய் ஒரு முடிவு அல்ல; தொடக்கமே. வீரம் துறந்த ஏமாளிகளாக அரசு வர்க்கம் தொடர்ந்தால் இனியும் இப்படிப்பட்ட தாக்குதல்களை எதிர்கொள்ளவேண்டும்.

மும்பாய் தாக்குதலில் கவனத்துக்கு வரவேண்டிய இன்னுமொரு முக்கிய விஷயம் - குறிப்பாக, ராஜ் தக்கரேயுக்கும் அவரது ஆதரவாளர்களுக்கும் தெரியவேண்டிய விஷயம். மும்பாய்த் தாக்குதலில் மும்பாயைக் காப்பாற்ற உயிரைக் கொடுத்தவர்கள் மகாராஷ்டிர மாநில மக்கள் மட்டுமல்ல; பிற மாநில வீரர்களுமே. இனியாவது ராஜ் தக்கரே, 'மராட்டிய மாநிலம் மராட்டியருக்கே' என்ற கோஷத்தை நிறுத்தட்டும். நமது பலவீனமே பகைவர்களின் பலம் என்று உணர்ந்துகொண்டு, நம்மை நாம் மாற்றிக்கொள்ளாதவரை, பிறரைக் குறைசொல்வதில் ஒரு பயனுமில்லை.

இப்படிப்பட்ட ஆபத்துக் காலங்களில், களத்தில் இறங்கி உடனடியாகச் செயல்படவேண்டிய தேசப் பாதுகாப்பு அமைப்புகளின் தலைமை அதிகாரிகள், செயலர்கள் மூலம் உரிய அமைச்சர்களுக்குத் தகவல்களைத் தெரிவித்துவிட்டு, களத்தில் இறங்குவதற்கு சுதந்திரம் அளிக்கப்படவேண்டும். இதில் ஏற்படும் ஒவ்வொரு நிமிட தாமதமும் பல உயிர்களைப் பறித்துவிடும். இதுவே இப்போதைய படிப்பினை. ■



அட்டை செய்தி

# ஆம்; முடியும்

## இந்த நம்பிக்கையின்மீது நம்பிக்கை வைப்பதைத் தவிர அமெரிக்காவுக்கும் உலகுக்கும் வேறுவழியில்லை

டி. ஐ. ரவீந்திரன்

பராக் ஹுசெயின் ஒபாமா என்ற இந்தப் பெயரைத் தெரியாதவர்கள் இன்று உலகில் எவருமே இருக்கமுடியாது. ஜனவரி 20ஆம் தேதி அமெரிக்காவின் புதிய ஜனாதிபதியாக பதவியேற்றிருக்கும் இவரது பதவியேற்பையொட்டி, பெரும் பரபரப்பும் எதிர்பார்ப்பும் எழுந்திருந்தது. இதற்கு முன்னர் 43 பேர் அமெரிக்காவின் ஜனாதிபதிகளாக இருந்திருக்கிறார்கள். அப்போதெல்லாம் ஏற்பட்டிராத அளவு பரபரப்பும் எதிர்பார்ப்பும் இவரது பதவியேற்பில் ஏற்பட்டது.

பதவியிலிருந்து விலகிய அதிபர் ஜோர்ஜ் புஷ் எட்டு ஆண்டுகளுக்கு முன்னர் பதவி யேற்றபோது, அவர் உண்மையிலேயே உலகின் அதி சத்தி படைத்த ஒரு நாட் டின் அதிபராக பதவியேற்றார். படை பலம், பணபலம் மற்றும் பல்வேறு வசதிகளில் அமெரிக்காவுக்கு அணித்தான நாடு என்று அப்போது எதுவும் இருக்கவில்லை.

ஆனால், இன்று நிலைமை வேறு. அமெரிக்க பொருளாதாரம் எதிர்பாராத சரிவைச் சந்தித்திருக்கிறது. அமெரிக்காவின் படைபலம், ஆயுதங்கள், நிபுணத்துவம் போன்ற எதுவும் அமெரிக்காமீது குறிவைக்கும் தீவிரவாதிகளை அடக்கிவிடமுடியவில்லை. தன்மீதான பயங்கரவாதத் தாக்குதலுக்கு எதிர்வினையாக அது நடத்திய போர், உலக அரங்கிலும் உள்நாட்டிலும் அதிருப்தியைத்தான் ஏற்படுத்தியது. பொருளாதார ரீதியில் உலகச் சந்தையில் அமெரிக்காவின் இடத்தைப் பங்குபோட்டுக்கொள்ள சீனா, பிரேசில், இந்தியா போன்ற நாடுகள் வந்துவிட்டன. போதாததற்கு, ஐரோப்பிய ஒன்றியமும் வலுவானதாக ஆகிக்கொண்டிருக்கிறது. ஏனவே, கேள்விக்கு அப்பாற்பட்ட ஒரு வல்லரசின் - வலுவான ஒரு நாட்டின் அதிபராகும் அதிருஷ்டம் ஒபாமாவுக்குக் கிட்டவில்லை. எனின், எதற்காக அவரது தேர்வு இந்த அளவில் கொண்டாடப்படுகிறது?

இதற்கு முதல் காரணம், அவரது பின்னணி. அவரது தந்தை பராக் ஒபாமா சீனியர் ஒரு முஸ்லிம்; அதுவும் ஆபிரிக்கர். ஆரம்பத்தில், அமெரிக்காவுக்கு மற்றைய இனத்தவர்கள் வந்ததைப்போல கறுப்பு இன மக்கள் வரவில்லை. மற்றைய இனத்தவர்கள் புதுவாழ்வு, வளம் தேடி, தாங்களாகவே வந்தார்கள். ஆனால், கறுப்பின மக்கள் அப்படி தாமாக வரவில்லை; அழைத்துவரப்பட்டனர். அதுவும், அடிமைகளாக அழைத்துவரப்பட்டனர். காலப்போக்கில், அடிமை வாழ்வு என்னும் களங்கம் அவர்களைவிட்டு நீங்கினாலும், தொடர்ந்து அவர்கள் அங்கு இரண்டாந்தர குடிமக்களாகவே நடத்தப்பட்டார்கள். 1967 வரையில்கூட, அதாவது, அமெரிக்கா குடியரசாகி பல வருடங்களாகியும், கறுப்பின மக்களுக்கு வாக்குரிமை இருக்கவில்லை. இன்று, அதே இனத்தைச் சேர்ந்த பராக் ஒபாமா அமெரிக்க அதிபராகியிருக்கிறார்.

இரண்டாவது காரணம், அவரது நடுப் பேயர் ஹுசெயின். ஒபாமா கிறிஸ்தவராக மாறிவிட்டாலும், இவரது தந்தைவழி மரபினர் இன்றும் முஸ்லிம்கள்தான். அவரது தாயார்தான் வெள்ளை இன கிறிஸ்தவர். அவரது பெயர் ஸ்ரான்லி ஆன் டன்ஹாம். இவர் இரண்டு தடவைகள் திருமணம் செய்துகொண்டவர். இருவருமே முஸ்லிம் கள்தான். இரண்டாவது கணவர் லோலோ சேரொறோ ஓர் இந்தோனேஷிய முஸ்லிம். இதனால்தான், பராக் ஒபாமா தனக்கு மூன்று கண்டங்களிலும் அதாவது, அமெரிக்கா, ஆபிரிக்கா, ஆசியா ஆகியவற்றில் இரத்த உறவுகள் இருப்பதாக கூறுவார். இந்தப் பின்னணி, உலக முஸ்லிம்களிடத்தில் ஓர் எதிர்பார்ப்பை ஏற்படுத்தியுள்ளது.

உலகின் இன்றைய நிலையில், கிறிஸ்தவம், இஸ்லாம் மதங்களுக்கிடையில் உருவெடுத்திருக்கும் மதம் சார்ந்த மோதல், இரு நாகரிகங்களுக்கு இடையிலான மோதலாகி, பெரும் அழிவில் முடியலாம் என்ற அச்சம் கிறிஸ்தவ அறிஞர் மத்தியில் ஏற்பட்டிருக்கிறது. இந்த மோதலைத் தடுக்கவும், இரு தரப்பினரிடையேயும் உருவாகியிருக்கும் கொந்தளிப்பு உணர்வுகளை வலுவிழக்கச் செய்வதற்குமான அவாவின் ஒருவித வெளிப்பாடு என்றுகூட ஒபாமாவின் தேர்வைப் பார்க்கமுடியும். மேற்கு உலகம் 'இஸ்லாமிய பயங்கரவா தத்தின்' அச்சுறுத்தலுக்கும், இஸ்லாமியர்கள் மேற்குலகின் சந்தேகத்துக்கும் பகைமைக்கும் ஆளாகியிருக்கும் நிலையில், முஸ்லிம்களின் வழித்தோன்றலான ஒரு கிறிஸ்தவர் அமெரிக்காவின் அதிபராவது, ஒருவிதத்தில் இந்தப் பகைமை உணர்வை நீர்த்துப்போக வைக்கக்கூடிய நிகழ்வு எனவும் கொள்ளலாம். உலக முஸ்லிம்களின் மனங்களில் கிறிஸ்தவர்கள் பற்றிய நம்பிக்கையை ஏற்படுத்துவதில் இந்த நிகழ்வு கணிசமான பங்கேற்றக்கூடும் என்பதில் சந்தேகமில்லை.

மூன்றவதாக, ஒபாமா தன் இளமைப் பருவத்தில் இடதுசாரிக் கொள்கைகளைக் கொண்டிருந்தார். மாணவப் பருவத்தில் இருந்தபோது, அமெரிக்காவின் பெரும்பாலான நடவடிக்கைகள் சோவியத்தை மையமாக வைத்து நிகழ்ந்ததை எதிர்த்திருக்கிறார். வியட்நாம் போர், அதன் விளைவுகள் போன்றவற்றையும் எதிர்த்திருக்கிறார். இதுகுறித்த தனது கருத்துக்களை தனது நூலான 'தி ஓட சிற்றி ஓஃவ் ஹோப்' (The Audacity of Hope) என்ற நூலில் பதிவுசெய்துமிருக்கிறார்.

**அமெரிக்காவின் படைபலம், ஆயுதங்கள், நிபுணத்துவம் போன்ற எதுவும் அமெரிக்காமீது குறிவைக்கும் தீவிரவாதிகளை அடக்கிவிட முடியவில்லை. தன்மீதான பயங்கரவாதத் தாக்குதலுக்கு எதிர்வினையாக அது நடத்திய போர், உலக அரங்கிலும் உள்நாட்டிலும் அதிருப்தியைத்தான் ஏற்படுத்தியது**

இப்படி, வித்தியாசமான பன்முகத் தன்மை கொண்ட பின்னணி அமெரிக்காவின் வேறு எந்த அதிபருக்கும் இருந்ததில்லை. 216 ஆண்டுகளுக்கு முன்னர் கறுப்பின அடிமைகளைக்கொண்டு கட்டப்பட்ட வெள்ளைமாளிகையில், கறுப்பினத்தவர் ஒருவர் அதிபராக வாசஞ்செய்வது, ஆபிரிக்கர்களைப் பொறுத்த வரையில் 'ஓர் இனிமையான பழி வாங்கல்' என்று சொல்லலாம்.

இவை ஒருபுறமிருக்க, அமெரிக்க இராணுவபலம் அந்நாட்டில் ஏற்படும் மாற்றங்களை உலகளாவிய முக்கியத்துவம் பெற்றவையாக ஆக்கிவிடுகிறது. பொருளாதார ரீதியான சரிவு, ஈராக் யுத்தம் முதலான நடவடிக்கைகளால் அமெரிக்கா எதிர்கொள்ளும் விமர்சனங்கள் ஆகியவற்றைவைத்து, உலக அளவில் அதன் ஆளுமையைக் குறைத்து மதிப்பிட்டுவிடமுடியாது. 'யானை படுத்தாலும் குதிரை மட்டம்' என்பதுதான் அமெரிக்காவின் நிலை. உலகில் இருக்கும் 192 சுதந்திர நாடுகளில் 150 நாடுகளில் உதவி, பாதுகாப்பு, பல்வேறு நடவடிக்கைகள், ஒப்பந்தம் போன்ற பல காரணங்களையிட்டு அமெரிக்க இராணுவம் தனது படைகளை அனுப்பி, தளங்களை அமைத்துள்ளது. உலகில் அமெரிக்காவுடன் இராஜதந்தர உறவு வைத்துக்கொள்ளாத நாடுகள் என்று பார்த்தால், பூட்டான், கியூபா, ஈரான் மற்றும் வட கொரியா ஆகியவை மட்டுமே. மேற்படி 150 நாடுகளில் இருக்கும் அமெரிக்க படைகளில் உள்ள துருப்புக்களின் எண்ணிக்கை மட்டும் சுமார் மூன்று லட்சத்து 69 ஆயிரம். இது, அமெரிக்காவின் மொத்தப் படைகளின் எண்ணிக்கையான 13 லட்சத்து 79 ஆயிரத்து 551இல் கிட்டத்தட்ட 17 வீதம். இவ்வளவு பெரும் இராணுவ பலமும், இவ்வளவு நாடுகளில் இராணுவத் தளங்களும் கொண்டுள்ள ஒரு நாட்டில் ஏற்படும் மாறுதல்கள், உலகம் முழுவதும் முக்கியத்துவம் பெறுவது இயல்பானதுதான். ஆக, இந்தக் காரணமும் ஒபாமா அதிபராகும் நிகழ்வை உலகளாவிய முக்கியத்துவம்கொண்ட நிகழ்வாக மாற்றியது.

உலகமும் அமெரிக்காவும் ஒபாமாவை உன்னிப்பாக எதிர்நோக்கியிருக்

கின்றன. இவரால் அமெரிக்காவின் பொருளாதாரப் பிரச்னையைச் சீர்படுத்தமுடியுமா? ஈராக் விஷயத்தில் இவர் என்ன முடிவு எடுப்பார்? இந்தியா-பாகிஸ்தான் விவகாரத்தில் இவரது அணுகுமுறை என்னவாக இருக்கும்? அமெரிக்காவை உலக பொலிஸ்காரராக மாற்ற விரும்பும் அணுகுமுறையை இவர் மாற்றுவாரா அல்லது வலுப்படுத்துவாரா? முஸ்லிம்கள் விடயத்தில் அமெரிக்காவின் அணுகுமுறையை மாற்ற இவர் முயற்சிகள் எடுப்பாரா? ஆபிரிக்க அமெரிக்கர்களின் வாழ்வும் உரிமைகளும் மேம்பட என்ன செய்யப்போகிறார்?

இப்படி, தன்னைச் சுற்றிலும் எழுந்திருக்கும் இதுபோன்ற எதிர்பார்ப்புக்களை ஒபாமாவால் எதிர்கொண்டு நிறைவேற்றமுடியுமா?

ஒபாமா உடனடியாக கவனிக்க வேண்டிய உலக பிரச்னைகள், அதுவும் அமெரிக்கா நேரடியாக தொடர்புடையவை என்றுபார்த்தாலே, பத்துக்கும் மேற்பட்ட பிரச்னைகளைக் குறிப்பிடலாம். ஈராக், ஆப்கானிஸ்தான், ஈரானுடனான பிரச்னை; ரஷ்ய உறவில் ஏற்பட்டிருக்கும் இறுக்கம்; சீனாவின் வளர்ச்சி; ஐரோப்பிய ஒன்றியத்தின் தலையெடுப்பு, பாலஸ்தீன பிரச்னை, இஸ்ரேலின் கொக்கரிப்பு, இந்திய - பாகிஸ்தான் விவகாரம்; ஆபிரிக்காவில் சூடான், சோமாலியா, கொங்கோ, சிம்பாப்வே பிரச்னைகள்; உலகில் பரவும் பயங்கரவாதம். இவைதவிர, சுற்றுப்புறச் சூழல், பருவநிலை மாற்றம் என்று இப்படி பட்டியல் நீள்கிறது.

மற்றொருபுறம் உள்நாட்டுப் பிரச்னைகள். பொருளாதார சரிவு, பெருகும் வேலையில்லாத் திண்டாட்டம், சுகாதார காப்புறுதி, மற்றும் சமூக பாதுகாப்பு ஆகியவற்றை விரிவாக்குவதற்கான கோரிக்கைகள், வெளிநாடுகளுக்கு வேலைவாய்ப்புகள் செல்வதைத் தடுப்பது குறித்த பிரச்னை, அரசாங்கம்மீது அமெரிக்க மக்களிடையே இருக்கும் கோபம், இப்படியே போனால் என்ன வாகுமோ என்ற அச்ச உணர்வு போன்ற பல விஷயங்கள் உள்ளன.

இவை அனைத்தையும் ஒபாமாவால் ஒரே நாளில் அல்லது ஒரே ஆண்டில் தீர்க்க முடியாது என்பது எல்லோருக்கும் தெரியும். ஆனால், இவரால் இவற்றைச் செய்யமுடியும் என்ற எதிர்பார்ப்பு பரவியிருப்பதை மறுக்கமுடியாது. இந்த நம்பிக்கையை விதைத்தவரே இவர்தான். இவரது தேர்தல் கோஷமே 'ஆம், நம்மால் முடியும்' (Yes; we can) என்பதுதான். இந்தக் கோஷமும், அது சொல்லப்பட்ட சந்தர்ப்பமும் சொல்லப்பட்ட விதமும் மக்களுக்கு நம்பிக்கையை ஏற்படுத்தியிருக்கிறது. இன, நிற வேறுபாடுகள் இன்றி, இதை நம்பி, அமெரிக்கர்கள் இவரைத் தேர்ந்திருக்கின்றனர்.

இந்தப் பிரச்னைகளைத் தீர்ப்பதற்கான திட்டங்களை ஒபாமா வைத்திருக்கிறாரா என்பதுதான் முக்கியமான கேள்வி. பதவியில் சில மாதங்கள் சென்ற பின்னர்தான் இதுகுறித்த அநுமானங்களை யதார்த்தமான தளத்தில் நாம் உருவாக்கிக்கொள்ள முடியும் என்றாலும், இதுவரையிலுமான ஒபாமாவின் போக்குகளில் இதற்கு விடை கிடைக்கிறதா?

ஒபாமா தனது பிரச்சாரத்தின் ஆரம்பத்தில் தனது மனதைக் கவர்ந்த தலைவர்கள் என்று மகாத்மா காந்தி, மார்ட்டின் லூதர் கிங் ஆகியோரைக் குறிப்பிட்டிருந்தார். இந்த இருவருமே எதையும் பேசி, உடன்பாட்டுக்கு வருவதன்மூலம் பிரச்னைகளைத் தீர்க்கலாம் என்பதில் நம்பிக்கை உடையவர்கள். ஒபாமாவும் உலகத்தினை - அமெரிக்காவைப் பாதிக்கும் பல பிரச்னைகளையும் பேச்சுவார்த்தைகள்மூலம் தீர்க்கலாம் என்று கூறிவந்திருக்கிறார். இது, அவரது அணுகுமுறையை உணர்த்தக்கூடியதாக இருக்கலாம்.

ஈராக்கிலிருந்து படைகளைத் திரும்பப்பெறுவது பற்றி உறுதியளித்திருப்பது; மத்திய கிழக்குப் பகுதியில் அமைதி திரும்ப இரு தரப்பினரிடையேயும் பேச்சுவார்த்தை நடத்தவைப்பது; ஆபிரிக்க நாடுகளில் உள்ள பிரச்னைகளையும் பேச்சுவார்த்தைமூலம் தீர்க்க உதவுவது; பருவநிலை மாறுபாட்டுப் பிரச்னையைத் தீர்க்கப் பல கோடிகளை ஒதுக்க ஒப்புக்கொண்டது; உள்நாட்டு பிரச்னைகளுக்கு திடீர்த் தீர்வுகளைச் சொல்லாமல், நிதானப் போக்குடன் பதில்களைக் கூறியது என்பதான அவரது அணுகுமுறைகளைப் பார்த்தால், அமைதியாகவே பல விஷயங்களைத் தீர்க்க முடியும் என்பதை இவர் நம்புவதாகத் தெரிகிறது.

நிதர்சனமாகப் பார்த்தால், மகாத்மா காந்திக்கும் மார்ட்டின் லூதர் கிங்குக்கும் இல்லாத படைபலம், பணபலம் மற்றும் செல்வாக்கு ஆகியவை ஒபாமாவின் அமெரிக்காவுக்கு இருக்கின்றன. இன்றைய உலகச் சூழலில் சமாதானம் பேசவும் பேசவைக்கவும் இவை மிக முக்கியமானவை. ஒபாமா அமைதிப் புறாவாகப் பேசினாலும், அமெரிக்க அரசுச் சின்னமான வல்லூறையும் அவர் மறக்கவில்லை; மறுக்கவும் இல்லை. ஒரு வேளை சமாதான முயற்சிகள் சரிவரவில்லையென்றால் மோதலுக்குத் தயார் என்பதையும் தெரிவித்திருக்கிறார். குறிப்பாக, பாகிஸ்தான் மற்றும் ஈரானைப் பற்றிக் குறிப்பிடுகையில் அவர்களுடன் பேசவும், அது முடியவில்லையென்றால் பலத்தைப் பிரயோகம் செய்யவும் தயாராக இருப்பதை வெளிப்படையாகவே கூறியிருக்கிறார். சாம, தான, பேத, தண்டம் என்னும் அணுகுமுறை புதிது அல்ல என்றாலும், தண்டப் பிரயோகத்தினாலேயே பீதியையும் கசப்புணர்வையும் சம்பாதித்துக்கொண்டிருக்கும் ஒரு நாட்டின் தலைவர், பலப் பிரயோகம்பற்றிப் பேசும்போது சமாதானத்தையும் சகவாழ்வையும் விரும்புபவர்களுக்கு வருத்தம் ஏற்படாமல் போகாது. எனவே, ஒபாமாவின் மனதில் இருக்கும் காந்தியும் லூதர் கிங்கும் வலுவுடன் விளங்கவேண்டும் என்றே உலகம் விரும்புகிறது.

ஒபாமா என்னதான் மாற்றம்பற்றிப் பேசினாலும் எல்லா அமெரிக்கர்களையும்போலவே, அமெரிக்க நலன் என்பதுதான் அவரது பிரதான நோக்கமாக இருக்கும் என்றும், உலக அரங்கில் அமெரிக்காவின் நடவடிக்கைகள் சார்ந்த நிலைப்பாடுகளில் கணிசமான மாற்றம் எதையும் அவரிடமிருந்து எதிர்பார்க்க முடியாது என்றும் ஒரு கருத்து நிலவுகிறது. அமெரிக்க அதிபர் அமெரிக்க நலன்கள் சார்ந்து இயங்குவது இயல்பானதும் தவிர்க்கமுடியாததும் ஆகும். ஆனால், இதற்காக அமெரிக்காவின் வெளிநாட்டுக் கொள்கைகளில் மாற்றம் இருக்காது என்று சொல்லிவிட முடியாது. மாற்றம் வேண்டும் எனும் குரலை ஒபாமா கடந்த சில ஆண்டுகளாகவே எழுப்பிவருகிறார். அமெரிக்க மக்கள் அவருக்கு ஆதரவு அளித்துள்ளதை, அவர் கொண்டுவர விரும்பும் மாற்றங்களுக்கான ஆதரவாகவே பார்க்கலாம்.


தவிர, 'பயங்கரவாதத்துக்கு எதிரான போர்', ஈராக் மீதான தாக்குதல்ஆகிய விஷயங்களில் ஒலித்த ஒபாமாவின் விமர்சனக் குரல், ஒற்றைக் குரல் அல்ல. அமெரிக்காவில் ஏற்பட்டுவரும் மாற்றங்களின் அடையாளம். ஈராக் யுத்தம் முதலான நடவடிக்கைகளுக்கு அமெரிக்க மக்களிடமிருந்தே அதிருப்தியும் எதிர்ப்


**'ஆம், நம் மால் முடியும்' என்ற இந்தக் கோஷமும், அது சொல்லப்பட்ட சந்தர்ப்பமும் சொல்லப்பட்ட விதமும் மக்களுக்கு நம்பிக்கையை ஏற்படுத்தியிருக்கிறது**

பும் எழுந்துள்ளது. ஒபாமாவின் குரல் அந்த மாற்றத்தைப் பிரதிபலிக்கிறது. எனவே, ஒபாமாவால் அமெரிக்காவின் வெளிநாட்டுக் கொள்கைகளிலும் அணுகுமுறைகளிலும் மாற்றம் கொண்டுவர முடியும் என்று நம்ப இடமிருக்கிறது.

இதுபோன்ற காரணிகளையும் அணுகுமுறைகளையும் வைத்துப் பார்க்கும்போது, பன்முக அடையாளங்களைக் கொண்ட இந்த 47 வயது 'இளைஞர்' உலகின் மிகச் சக்திவாய்ந்த ஒரு பொறுப்புக்கு வந்திருப்பது நம்பிக்கை அளிக்கக் கூடியதாகவே இருக்கிறது. அதுவும், தனது பலம் மற்றும் பலவீனம் ஆகியவற்றை வெளிப்படையாக ஒப்புக்கொள்பவர் பதவியேற்றிருப்பது, முதலில் அமெரிக்காவுக்கும், அதன்பின்னர் உலகுக்கும் நல்லது என்றுதான் கூறமுடிகிறது. இந்த நம்பிக்கை பொய்த்துப் போவதற்கான வாய்ப்புக்கள் கணிசமாக இருந்தாலும், இப்போதைக்கு இந்த நம்பிக்கையின்மீது நம்பிக்கை வைப்பதைத் தவிர அமெரிக்காவுக்கும் உலகுக்கும் வேறுவழியில்லை.

# ஒபாமா குடும்பம்





தாய் ஸ்ரான்லி ஆன் சோரொறோ, அமெரிக்காவின் கன்சாஸ் மாநிலத்தில் பிறந்தவர். இவரின் பெற்றோர் ஸ்ரான்லி, மெடலின் டன்ஹாம். அமெரிக்க வெள்ளை இனத்தவர்களான இவர்கள், ஆங்கிலேய - ஐரிஷ் வம்சாவழியினர்

அவருடைய அந்தக் காலத்தில், துணிச்சல்காரியான ஆன், மிகுந்த மூளைசாலி. பாடசாலைப் படிப்பை முடித்துக்கொண்டு பெற்றோருடன் ஹவாய்க்கு இடம்பெயர்ந்தார். ஹவாய் பல்கலைக்கழகத்தில் பயின்றுகொண்டிருந்தபோது அங்கு, கெனியாவைச் சேர்ந்த, புலமைப்பரிசில் பெற்ற வெளிநாட்டு மாணவர் ஒருவரான ஒபாமாவின் தந்தை பராக் ஒபாமா சீனியரை 1960இல் சந்தித்தார். 1961 பெப்ரவரி 2ஆம் தேதி இருவரும் மணம்புரிந்துகொண்டனர். 1961 ஒகஸ்ற் நான்காம் தேதி, ஆனுக்கு 18 வயதாக இருக்கும்போது ஒபாமா பிறந்தார். ஒபாமாவுக்கு இரண்டு வயதாகியபோது தம்பதியர் இருவரும் பிரிந்துகொண்டனர். பின்னர், இரண்டு ஆண்டுகளில், 1964இல் விவாகரத்துப் பெற்றுக்கொண்ட ஆன், லோலோ சோரொறோ என்ற இந்தோனேஷிய மாணவர் ஒருவரை மறுமணம் புரிந்தார்.

கெனியா திரும்பிவிட்ட ஒபாமாவின் தந்தை, 1982இல் கார் விபத்து ஒன்றில் மரணமாவதற்கு முன்னர், ஒரேயொரு தடவை புதல்வர் ஒபாமாவைப் பார்த்திருக்கிறார்.

1967இல் இந்தோனேஷியாவில் சுஹார்ட்டோவின் இராணுவ ஆட்சி ஏற்பட்டபோது, வெளிநாட்டு மாணவர்கள் அனைவரும் திருப்பி அழைக்கப்படவே, சோரொறோ குடும்பம் இந்தோனேஷியா சென்றது. பத்து வயதுவரை ஒபாமா, இந்தோனேஷிய தலைநகர் ஜஹார்த்தாவிலேயே பள்ளிப்படிப்பை மேற்கொண்டார். பின்னர், ஹவாயில் தாய்வழி பேரர்களுடன் தங்கி, கல்வியைத் தொடர்ந்தார்.





1980இல் சோரொறோவும் ஆனும் விவாகரத்து பெற்றுக்கொண்டனர். மானுடவியலில் கலாநிதி பட்டம் பெற்ற ஆன், இந்தோனேஷியாவில் மதிப்புமிக்க ஒரு நுண்பொருளியல் நிபுணராக திகழ்ந்தார். 1994இல் ஹவாய் திரும்பிய அவர், 1995இல் புற்றுநோயால் மரணமுற்றார்.

ஒபாமாவுக்கு ஒரு வயதாக இருக்கும்போது ஹாவார்ட் பல்கலைக்கழகத்தில் பட்டப்படிப்புக்காகச் சென்ற ஒபாமாவின் தந்தை, பெரும் கனவுகளுடன் கெனியா திரும்பினார். ஆனால், அரசியல் குழப்பங்களும், இன பேதங்களும், மதுப் பழக்கமும் அவரது கனவுகளை நனவாக்கவில்லை. ஒபாமா 10 வயதாகவிருந்தபோது, ஒருதடவை அவர் ஹவாய்க்கு மீண்டும் சென்றார். அவருக்கு மூன்று மனைவிகளாவது இருந்தனர்.

பெற்றோர்கள் மூலம் ஒபாமாவுக்கு ஏழு சகோதர, சகோதரிகள் உலகின் பலபாகங்களிலும் இருக்கிறார்கள். இவர்களில், தாயின் புதல்வியான மாயா சோரொறோ, தந்தையின் முதல் மனைவியின் புதல்வியான ஓமா ஒபாமா ஆகியோருடன் ஒபாமா நெருக்கமான உறவைக் கொண்டிருக்கிறார். ஓமாவின் சகோதரர் மாலிக், ஒபாமாவின் திருமணத்தின்போது மாப்பிள்ளைத் தோழனாகவிருந்தார். கெனியாவில் வசிக்கும் ஒபாமாவின் தந்தையின் தாயிடம் ஒபாமா பல தடவைகள் சென்றுவந்திருக்கிறார்.

ஹாவார்ட் பல்கலைக் கழகத்தில் சட்டப்படிப்பை முடித்து, 1989இல் சிக்காக்கோ சட்ட நிறுவனம் ஒன்றில் பணியாற்றிக்கொண்டிருக்கையில், மனைவி மிச்சலை ஒபாமா சந்தித்தார். ஒபாமாவின் ஆலோசகராக அவர் நியமிக்கப்பட்டிருந்தார். 1991இல் பதிவு செய்துகொண்ட அவர்களின் திருமணம், 1992 ஒக்ரோபர் 3ஆம் தேதி நடைபெற்றது. சிக்காக்கோ பல்கலைக்கழகத்தில் இருவரும் நீண்டகாலம் பணியாற்றினார்கள்.

புதல்விகள் மாலியா ஆன் 1998இலும், நற்ரஷா 2001இலும் பிறந்தனர்.



இலங்கை

## கிளிநொச்சி வீழ்ச்சி

# புலிகள் 'கெரில்லா' யுத்தமுறைக்கு செல்வர்?

'இலங்கையில் கிளிநொச்சி இருக்கிறதா? அல்லது கிளிநொச்சியில் இலங்கை இருக்கிறதா?' என்று கேட்குமளவுக்கு காடும் காடு சார்ந்ததும், வயலும் வயல் சார்ந்ததுமான கிளிநொச்சிப் பிரதேசம், சர்வதேச கவனத்தைப் பெரிதும் ஈர்த்திருந்தது. கடந்த பத்து வருடங்களுக்கு மேலாக தமிழீழ விடுதலைப் புலிகளின் கோட்டை கொத்தளமாக இருந்துவந்த கிளிநொச்சி, தற்சமயம் அரச படைகளின் வசமாகியுள்ளது.

2002ஆம் ஆண்டு நோர்வே அரசின் அநுசரணையோடு மேற்கொள்ளப்பட்ட யுத்தநிறுத்தத்தையடுத்து முன்னெடுக்கப்பட்ட சமரசப் பேச்சுவார்த்தைகளின்போது கிளிநொச்சிப் பிரதேசம் பிரபல்யமடைய ஆரம்பித்தது.

2002ஆம் ஆண்டிலிருந்து 2006ஆம் ஆண்டுவரை மேற்கொள்ளப்பட்ட சமரசப் பேச்சுவார்த்தைகளில் விடுதலைப் புலிகள் அமைப்பின் அரசியல் ஆலோசகர் காலஞ்சென்ற அன்ரன் பாலசிங்கம், அவ்வமைப்பின் அரசியல் பிரிவுப் பொறுப்பாளராகவிருந்த காலஞ்சென்ற எஸ். பி. தமிழ்ச்செல்வன் ஆகியோர், ஏறத்தாள உலகின் அனைத்துப் பகுதிகளிலுமிருந்து வந்த அரசியல் பிரமுகர்கள், ராஜதந்திரிகள் ஆகியோரைச் சந்தித்துப் பேச்சுக்களை நடாத்திய மையமாகவும் கிளிநொச்சி விளங்கியது.

இலங்கையின் தலைநகர் கொழும்பையடுத்து, அதிக அளவில் குறிப்பிடப்படும் ஒரு பிரதேசமாக கிளிநொச்சி இருந்துவந்தது. ஹெலிகொப்டர்கள் சர்வதேச பிரமுகர்களை கிளிநொச்சிக்கு கொண்டுசென்றன. கிளிநொச்சியின் பிரமாண்டமான இரணைமடு குளத்தில், விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கத்தையும் அவரது துணைவியார் அடேல் பாலசிங்கத்தையும், நீரில் இறங்கக்கூடிய விமானங்களும் ஏற்றிச்சென்று இறக்கின.


புலிகளது பொலிஸ் நிர்வாகம், நீதிமன்ற நிர்வாகம், புலிகளால் நடத்தப்பட்ட பத்திரிகை, வானொலி, தொலைக்காட்சி சேவைகள் உள்பட, வர்த்தக மையங்கள் என்பவைகூட கிளிநொச்சியில் இயங்கியதோடு, தமிழீழம் அமையும் பட்சத்தில் எவ்வாறு அதன் செயல்பாடுகள் காணப்படும் என்பதை விளக்குவதாக கிளிநொச்சியில் அனைத்து நடவடிக்கைகளும் இருந்தன.

ஆனால், தற்போது கிளிநொச்சி ஒரு 'சுடுகாடு'போல, இடிந்து சிதைந்த கட்டடங்களுடன் காணப்படுகிறது.

கிளிநொச்சியைக் கைப்பற்றும் முயற்சியில் வெற்றிகண்ட ஆயுதப் படையினர், அந் நகரில் 2009ஆம் ஆண்டு ஜனவரி 2ஆம் தேதி இலங்கையின் தேசியக் கொடியைப் பறக்கவிட்டிருந்தனர்.

இதனையடுத்து, ஜனவரி 5ஆம் தேதி நாடளாவிய ரீதியில் கிளிநொச்சியின் வெற்றி ஒரு தேசிய விழாவாகவும் தென்னிலங்கையில் கொண்டாடப்பட்டது.

2005ஆம் ஆண்டில், வடக்கே 'சூரியக்கதிர்' இராணுவ நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டதையடுத்து, புலிகள் அங்கிருந்தும் வாபஸ்பெற்று கிளிநொச்



**விடுதலைப் புலிகள் பத்து ஆண்டுகள் அரசோச்சிய வன்னி இராசதானி இலங்கை இராணுவத்திடம் வீழ்ந்துவிட்டது. புலிகள் இயக்கத்துக்கு இலங்கை அரசு தடையும் விதித்திருக்கிறது. புலிகளின் நிலை; அடுத்த கட்ட நடவடிக்கை என்ன?**

தண்டாயுதன்

**யுத்தநிறுத்தத்தைக் கொண்டுவர உதவிய நோர்வே, யப்பான் உள்ளிட்ட, இலங்கைக்கு உதவி வழங்கும் நாடுகள், வன்னி யுத்தம் உக்கிரமடைந்தபோது மௌனம் சாதித்தே வந்தன. இம் மௌனம், புலிகள் பலவீனப்படுத்தப்பட வேண்டும் என்ற எண்ணத்தை, சமரசப் பேச்சுக்களை ஆதரித்த நாடுகள் கொண்டிருந்தனவோ என்று எண்ணத்தோன்றுகிறது**

சிக்கு வந்தனர். இதனையடுத்து, பலதடவைகள் அரச படையினர் கிளிநொச்சியைக் கைப்பற்றும் முயற்சியில் ஈடுபட்டனர்.

'ஒப்பரேஷன் தீச்சுவாலை' என்ற இராணுவ நடவடிக்கைமூலம் வடக்கேயிருந்து ஆனையிறவூடாக கிளிநொச்சிக்குள் பிரவேசிக்கும் முயற்சி முகமாலைப் பகுதியில் புலிகளால் முறியடிக்கப்பட்டது.

வவுனியாவிலிருந்து 'ஜயசிக்குறு' எனப் பெயரிடப்பட்ட மற்றொரு படைநகர்வு கிளிநொச்சியை நோக்கி மேற்கொள்ளப்படவிருந்த நிலையில், ஓமந்தையில் புலிகள் அதனை வெற்றிகரமாக முறியடித்தனர். இதுதவிர, ஆனையிறவு இராணுவத் தளத்தை வெற்றிகொண்டமை, முல்லைத்தீவில் பாரிய இராணுவ முகாமொன்றைத் தகர்த்தமை போன்றவை, புலிகள் கிளிநொச்சிக்குள் பிரவேசித்த பின்னர் அவர்களுக்கு இராணுவ ரீதியாகக்கிடைத்த முக்கிய வெற்றிகள்.

இந்த வெற்றிகளின் பின்னணியில் பலமடைந்த நிலையிலேயே புலிகள் அரசியல் பேச்சுக்களுக்கும் 2002ஆம் ஆண்டு, யுத்தநிறுத்தத்தோடு முன்வந்திருந்தனர்.

ஆனால், தற்சமயம் அனைத்துமே தலைகீழாகி, கிளிநொச்சியிலிருந்து இராணுவ ரீதியாக ஓரங்கட்டப்பட்ட நிலையில், அரசாங்கத்தினால் ஜனவரி 7ஆம் தேதி அறிவிக்கப்பட்ட தடையையடுத்து, அரசியல் ரீதியாகவும் புலிகள் இலங்கையில் ஓரங்கட்டப்பட்டுள்ளனர்.

இந்தியா முதன்முதலாக புலிகள் மீதான தடையை, ராஜீவ் காந்தியின் கொலையையடுத்து, சுமார் பதினைந்து வருடங்களுக்கு முன்னர் அறிவித்தது. இதனையடுத்து அமெரிக்கா, பிரிட்டன், கனடா, ஐரோப்பிய ஒன்றியம் உள்பட 31 நாடுகள் சர்வதேச ரீதியாக புலிகளைத் தடைசெய்துள்ளன.

உலக நாடுகள் புலிகள்மீதான தடையை அறிவித்தபோது, இலங்கை மட்டும் தடை எதனையும் கொண்டுவருவதைத் தவிர்த்தேவந்தது. பேச்சுவார்த்தைகளில் ஈடுபட விடுதலைப்புலிகளுக்கு சந்தர்ப்பத்தை அளிக்கும் வகையிலேயே தடையெதனையும் மேற்கொள்ளவில்லையென இலங்கை அரசதரப்பு தெரிவித்துவந்தது. இலங்கையின் முன்னாள் ஜனாதிபதி ரணசிங்க பிரேமதாச உள்பட, அரசியல் பிரமுகர்கள் பலரும் புலிகளால் கொல்லப்பட்டபோதுகூட, அவ்வமைப்புமீதான தடை அரசாங்கத்தினால் கொண்டுவரப்படவில்லை.

ஆயினும், தற்போது கிளிநொச்சியைப் புலிகளின் பிடியிலிருந்து கைப்பற்றியதையடுத்து, ஜனவரி 7ஆம் தேதி முதல் புலிகள் மீதான தடை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவினால் அறிவிக்கப்பட்டுள்ளது. இந்தத் தடையையடுத்து, விடு தலைப் புலிகளுடனான அனைத்து தொடர்புகளுக்கும் இலங்கையிலும் சர்வதேச ரீதியிலும் தடை அறிவிக்கப்பட்டுள்ளது.

எனவே, புலிகள்மீது இலங்கை அரசு கொண்டுவந்துள்ள தடை வடக்கு - கிழக்கு பிரச்னை தொடர்பில் ஒரு முக்கிய திருப்பமாகவே உள்ளது. இத்தடையை அறிவித்திருப்பதன்மூலம் புலிகள் அமைப்புடனான எதிர்காலப் பேச்சுவார்த்தைகளுக்கு இடமில்லை என்பதையும் அரசுதரப்பு கோடிட்டுக் காட்டியுள்ளது.

இருப்பினும், புலிகள் ஆயுதங்களைக் கைவிட்டு சரணடையும் பட்சத்தில் அவ்வமைப்புடன் பேசத் தயாராக இருப்பதாக அரசாங்கத்தின் முக்கிய அமைச்சரான மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார். கடந்த வாரங்களில் கிளிநொச்சியைக் கைப்பற்றுவதற்கான வன்னிப் பெருநில யுத்தம் மும்முரமடைந்தபோது, யுத்தநிறுத்தமொன்றைக் கொணர இந்தியா உதவும் என எதிர்பார்க்கப்பட்டது. ஆனால், அந்த எதிர்பார்ப்பு நிறைவேறவில்லை.

2002ஆம் ஆண்டு யுத்தநிறுத்தத்தைக் கொண்டுவர உதவிய நோர்வே மற்றும் யப்பான் உள்ளிட்ட, இலங்கைக்கு உதவி வழங்கும் நாடுகள், வன்னி யுத்தம் உக்கிரமடைந்தபோது மௌனம் சாதித்தே வந்தன. இம் மௌனம், புலிகள் பலவீனப்படுத்தப்படவேண்டும் என்ற எண்ணத்தை, சமரசப் பேச்சுக்களை ஆதரித்த நாடுகள் கொண்டிருந்தனவோ என்று எண்ணத்தோன்றுகிறது.

கிளிநொச்சியைக் கைப்பற்றிய நிலையில், அடுத்த இலக்காக ஆனையிறவு, முகமாலை ஆகிய பிரதேசங்களையும் கைப்பற்றிய படையினர், இப்போது தமது படைபலத்தை முல்லைத்தீவு பிரதேசத்தில் குவித்துள்ளனர்.

இப்பிரதேசமும் முழுமையாக வீழ்ச்சிகாணும் பட்சத்தில், வடக்கே படையினரின் கை ஓங்குவதோடு 2006ஆம் ஆண்டு மூடப்பட்ட ஏ-9 நெடுஞ்சாலை மீளவும் திறக்கப்படுமெனவும் எதிர்பார்க்கப்படுகிறது.

ஆயினும், புலிகளது எதிர்ப்புகள் எவ்வளவு தூரம் படையினரால் சமாளிக்கப்படும் என்பதும், எதிர்காலத்தில் 'கெரில்லா' போர்முறையைப் புலிகள் கையாளக்கூடிய நிலையில், அதனை எதிர்கொண்டு படையினரால் வன்னி பெருநிலப் பரப்பில் நிரந்தரமாக நிலைகொள்ள முடியுமாவென்பதும் கேள்விக் குறியாகவே இருக்கிறது.

அதேசமயம், புலிகளது பலம் தற்சமயம் எப்படி இருக்கிறது? அரசாங்கம் முதல்தடவையாக அதன்மீது தடையை அறிவித்துள்ள நிலையில், அரசியல் ரீதியாக அதன் நடவடிக்கைகள் எவ்வாறு அமையும் என்பதுகூட புரியாத புதிராகவே இருக்கிறது.

ஆனால், ஒன்றுமட்டும் தெளிவு; அரசுக்கும் புலிகளுக்குமான இழுபறி இலகுவில் ஓயப்போவதில்லை. அந்த இழுபறி 'மழைவிட்டும் தூவானம் ஓயாததுபோல' தொடரும் என்றே எதிர்பார்க்கமுடிகிறது.



# Selection
# Select.gb.com
# Selected

Do you want to
**Rent, Buy, Sell, Mortgage
or Insure your
Property** Look no further

We've got it all covered.

## Free EPC

Free energy performance certificate
for properties instructed on full management.
Typical price of an EPC is £ 60.00+ VAT

# 0845 470 1500




சிம்பாப்வே

# நெருக்கடிகளுள் ஒரு நாடு

**வேலையின்மை, வறுமை, காலரா நோய், பணவீக்கம் என்று தத்தளிக்கும் நாடு, அரசியலிலும் ஸ்தம்பிதமடைந்துபோயுள்ளது**

தனஞ்ஜெயன்




'கல்கி'யின் புகழ்பெற்ற வரலாற்று நாவலான 'பொன்னியின் செல்வ'னி'ல் இறந்துபோன இளவரசன் ஆதித்த கரிகாலனின் சடலத்தை அவனது தாத்தாவிடம் ஒப்படைத்துவிட்டு, வந்தியத்தேவன் இவ்வாறு சொல்வான்: "விதியாலும் சதியாலும் கொல்லப்பட்ட உங்கள் பேரப் பிள்ளையைப் பெற்றுக்கொள்ளுங்கள்!" கிட்டத்தட்ட ஆதித்த கரிகாலனின் நிலையில்தான் சிம்பாப்வே என்னும் நாடு இன்று இருக்கிறது. ஒரு வித்தியாசம், உயிர் இன்னமும் பிரியவில்லை; ஊசலாடிக்கொண்டிருக்கிறது.

சிம்பாப்வேயில்வேலைவாய்ப்பு இல்லாதவர்கள் 80 சதவீதம். சத்துணவு கிடைக்காமல் அவதிப்படுபவர்கள் 30 சதவீதம். எச். ஐ. வி. யால் பாதிக்கப்பட்டவர்கள் 20 சதவீதம். பெண்களின் அதிகபட்ச வயது 34. பணவீக்கம் 1000 சதவீதம் அதிகரித்துவிட்டது. கடந்த ஆண்டு இங்கு தோன்றிய காலரா நோயால் இதுவரை 42ஆயிரத்துக்கும் அதிகமானோர் பாதிப்புற்று இரண்டாயிரத்து 200க்கும் அதிகமானோர் இறந்துவிட்டனர்.

இங்கு இந்த நிலை எப்படி உருவாயிற்று? இதனை அறிந்துகொள்ள அந்த நாட்டின் வரலாற்றை திரும்பிப் பார்க்க வேண்டும். சிம்பாப்வே என்னும் நாடு உருவானது 19ஆம் நூற்றாண்டில்தான். இதன் ஆதி குடிமக்கள் அதாவது, இப்பகுதியில் முதன்முதலாக குடியேறியவர்கள் ஷோனா இன ஆபிரிக்கர்கள். இவர்

களது மொழியின் பெயர்தான் இனத்தின் பெயராகவும் உள்ளது. இவர்கள் இங்கே சென்று அங்குள்ள கனிமங்களை அடையாளம் கண்டுகொண்டார்கள். சுரங்கம் தோண்டி கனிமங்களை எடுத்துப் பயன்படுத்துவது; விற்பனைசெய்வது போன்றவற்றில் ஈடுபட்டார்கள். இதில் முக்கிய கனிமம் தங்கம். ஷோனா இனத்தவர் கற்களைக் குடைவது, மற்றும் கட்டுமானங்களில் சிறந்தவர்கள். தாங்கள் குடியேறிய பகுதிக்கு 'சிம்பாப்வே' அதாவது, 'கல் வீடு' என்று பெயரிட்டுக்கொண்டனர். (ஜம்பேசி நதிக்கரையில் இருப்பதால் சிம்பாப்வே என்ற பெயர் ஏற்பட்டது என்று சொல்பவர்களும் உண்டு)

19ஆம் நூற்றாண்டின் ஆரம்ப காலத்தில் பிரிட்டிஷ்காரர்களின் கவனம் இந்தப் பகுதிக்கு திரும்பியது. காரணம், தங்கம்! இங்கும் அவர்கள் நேரடியாக செல்லவில்லை. இந்தியாவுக்கு ஒரு கிழக்கு இந்திய கம்பனிபோல, சிசில் ரோட்ஸ் தென் ஆபிரிக்க நிறுவனம்தான் இங்கே உள்ளே நுழைந்தது. அப்போதிருந்த ஷோனா இனத்து மன்னரான லோபங்குலாவிடம் ஒப்பந்தம் செய்து கொண்டது. இதன்படி, சுரங்கம் வெட்டி தங்கம் எடுக்கும் உரிமை, அதற்கான நில உரிமை, இவற்றைப் பாதுகாக்க பிரிட்டிஷ் படைகள், தனிப்படைகள் வைத்துக்கொள்ளும் உரிமை என்பன ரோட்ஸ் நிறுவனத்துக்கு கிடைத்தது. பிரிட்டிஷ் படைகள் சிம்பாப்வேக்கு 'பாதுகாப்பு' அளிக்கும்; இதை மன்னர் ஏற்றுக்கொண்டார். ஆனால், வெகு விரைவிலேயே சிம்பாப்வே 'ரொடீஷியா'வாக ஆனது. அனைத்துப் பகுதிகளும் தங்களுக்கேயென்று பிரிட்டிஷார் கூறினர். இதனை எதிர்த்த மன்னர் லோபங்குலா தோற்கடிக்கப்பட்டார்.

1847இலிருந்து பிரிட்டிஷ் அரசுதான் இங்கு ஆட்சிபுரிந்தது. 1911இல் இதை வட ரொடீஷியா மற்றும் தென் ரொடீஷியா என்று பிரிட்டிஷார் பிரித்தனர். வடக்குப் பகுதி சாம்பியா என்றும் தெற்குப் பகுதி சிம்பாப்வே என்றும் ஆனது. தென்பகுதியில் கறுப்பின மக்களுக்கு எவ்வித உரிமையும் இல்லாது ஆக்கப்பட்டது.

இந்த நிலைதான் 1950களின் ஆரம்பம் வரை இருந்துவந்தது. 1953இல் முதல் எதிர்ப்பு ஏற்பட்டு, சிம்பாப்வே 'ஆபிரிக்க மக்கள் யூனியன்' (சாபு) உருவாகியது. 1961இல் தடைசெய்யப்பட்ட இந்த இயக்கம், 'சிம்பாப்வே நஷனல் யூனியனா'க (சானு) பெயர் மாற்றப்பட்டு இயங்கியது. சானுவின் தலைவர்களில் ஒருவர்தான் இன்றைய அதிபர் றொபர்ட் முகாபே. இவர் கெரில்லா போர் முறைகளில் ஈடுபட்டுவந்தார். சிறிது காலத்துக்

**தனது பதவியைக் காப்பாற்றிக்கொள்வதில் மட்டுமே குறியாகவுள்ள முகாபே, சிம்பாப்வே மக்களின் பொது எதிரியான வெள்ளையர்கள்மீது மக்களின் வெறுப்பை, கோபத்தை சாதுரியமாகத் திருப்பிவிட்டு, அதில் குளிர்காய்ந்தார்**



மோர்கன் ஸ்வங்கராய்

**சிப்பாப்வே டொலர்கள் இரவு பகலாக அச்சடிக்கப்பட்டன. ஆனால், அவை போதவில்லை. அதனால் ஏற்பட்ட பலன்களைவிட, பிரச்னைகளே அதிகம். அச்சிடுவதற்கு ஆகும் செலவின் மதிப்புகூட அந்தத் தாளுக்கு இல்லை என்ற நிலை விரைவிலேயே உருவாகியது**



குப் பின்னர் சாபு மற்றும் சானு ஆகியவை ஒன்றாக இணைந்தன. இதன் பின்னர் வெள்ளையர்களுக்கு எதிரான போர் 1976ஆம் ஆண்டுவரை நடைபெற்றது. 1976இல் ரொபர்ட் முகாபேயும் மற்றும்சில கட்சியினரும் இணைந்து தேசபக்த முன்னணியை உருவாக்கினர். 1980இல் முகாபேயின் சானு மற்றும் தேசபக்த முன்னணி (பி. எவ்) வெற்றிபெற்றன. அதன்பின்னர், 1985இல் ரொபர்ட் முகாபே தனியாக வெற்றிபெற்றார். இன்றுவரை இவர்தான் இங்கு அதிபர் பதவியிலிருக்கிறார். இவருக்கு இப்போது வயது 84.

23 ஆண்டுகளாக பதவியிலிருக்கும் முகாபே, மக்களின் முன்னேற்றத்துக்கான திட்டங்களை வகுத்துச் செயல்படுத்தாமல், தன் பதவியைக் காப்பாற்றிக்கொள்வதில் மட்டுமே குறியாக இருப்பதாக அவர்மீது விமர்சனங்கள் இருக்கின்றன. சிம்பாப்வே மக்களின் பொது எதிரியான வெள்ளையர்கள்மீது மக்களின் வெறுப்பை, கோபத்தை சாதுரியமாகத் திருப்பிவிட்டு, அவர் அதில் குளிர்காய்ந்தார். இதன் ஒருபகுதியாக, 1991இல் நிலச்சீர்திருத்தம் கொண்டு வந்தார். அதாவது, நில மறுவிநியோகத் திட்டம். மறு விநியோகம் என்றால் வெள்ளையர்களின் நிலங்களைச் சுவீகரித்து, கறுப்பின மக்களுக்கு பங்குபோட்டுக் கொடுப்பது. இதற்கு கிராமப்புறங்களில் மிகப்பெரும் வரவேற்பு இருந்தது. ஆனால், திட்டம் அறிவிக்கப்பட்டதே தவிர, அரசு இதை அமுல்படுத்த போதிய நிதி ஒதுக்கப்படவில்லை. இதையடுத்து, கறுப்பு இன மக்கள் சட்டத்தைத் தங்கள் கையில் எடுத்துக்கொண்டு வெள்ளையர்களின் பண்ணை வீடுகளைத் தாக்கினர். பெரும் கலவரம் வெடித்து, வெள்ளையர்கள் படுகொலைசெய்யப்பட்டனர். கறுப்பின மக்களில் பலம்பொருந்திய கும்பல்கள் நிலக்கொள்ளைகள் போன்றவற்றில் ஈடுபட்டன. வெள்ளையர்களுக்கு எதிராக முகாபே முன்னெடுத்த பல நடவடிக்கைகள் சிம்பாப்வேயின் பூர்வகுடி மக்கள்மீது வெள்ளையர்கள் செலுத்திய ஒடுக்குமுறைக்குப் பதிலடியாக மேற்கொள்ளப்படவில்லை. தன் பதவியைக் காப்பாற்றிக்கொள்ள வெள்ளையர்மீதான வெறுப்பை அவர் பயன்படுத்திக்கொண்டார்.

1997இல் நாட்டில் பெரும் பிரச்னை எழுந்தது; பெரிய ஊழல் ஒன்று அம்பலமாகியது. அதாவது, சுதந்திர போராட்டத் தியாகிகள், அவர்களது சந்ததியினர் ஆகியோருக்கு ஒதுக்கப்பட்ட நிதியை ஆளும் கட்சியினர் கபளீகரம் செய்துவிட்டனர் என்பதுதான் அக் குற்றச்சாட்டு. அரசு இதனை மறுத்தாலும்,

அதற்காக ஒதுக்கப்பட்ட நிதி அரசிடம் இல்லை என்பதை மறுக்கவில்லை. ஆனால், நிதி திரட்டவேண்டும்; அந்த நிதியை மறுபடியும் நிரப்பவேண்டும் என்ற கட்டாயத்துக்கு அரசு தள்ளப்பட்டதால், பல்வேறு விதங்களில் வரிகளை ஏற்றியது. இதனை எதிர்த்து 1998இல் மிகப்பெரும் போராட்டம், தொழிலாளர் வேலைநிறுத்தம், கலவரங்கள், மரணங்கள் நிகழ்ந்தன.

ஆபிரிக்க கண்டத்தில் பெரும் ராஜதந்திரியாக தான் பார்க்கப்படவேண்டும் என்று விரும்பிய முகாபே, அப்பிராந்தியத்தில் நடக்கும் விவகாரங்களில் அவ்வப்போது தலையிட்டுவந்தார். இதில் ஒன்றுதான் கொங்கோ நாட்டு விவகாரம். இரண்டாம் கொங்கோ போரில் சிம்பாப்வே நாட்டுப் படைகள் கலந்துகொண்டன. முடிவுகள் எதிர்பார்த்ததுபோல் இல்லை என்பதுமட்டுமன்றி, நாடு மிகப்பெரிய பொருளாதார வீழ்ச்சிக்கு உள்ளானது. சிப்பாப்வே டொலர்கள் இரவு பகலாக அச்சடிக்கப்பட்டன. ஆனால், அவை போதவில்லை. அதனால் ஏற்பட்ட பலன்களைவிட, பிரச்னைகளே அதிகம். அச்சிடுவதற்கு ஆகும் செலவின் மதிப்புகூட அந்தத் தாளுக்கு இல்லை என்ற நிலை விரைவிலேயே உருவாகியது.


வறுமை என்பது சிம்பாப்வே நாட்டின் மற்றோர் அடையாளம் என்று கூறும் அளவுக்கு ஆரம்பத்திலிருந்தே மக்கள் வறுமையின் பிடியில் சிக்கித் தவித்துவருகிறார்கள். குறிப்பாக, கடந்த ஆறு ஆண்டுகளாக இந்நாடு பல்வேறு பிரச்னைகளைச் சந்தித்துவருகிறது. மழையின்மையால் ஏற்படும் கடும் பஞ்சம், எச்.ஐ.வியால் மக்கள் பெருமளவில் உயிரிழக்கும் நிலை ஆகியவை இங்கு நிலவுகின்றன. அரசும் தனது பங்குக்கு பிரச்னைகளைக் கூட்டியது. மேலை நாடுகளில் அந்தந்த தட்பவெட்ப நிலைக்கு ஏற்றவாறு பயன்படுத்தப்படும் 'துரித விவசாய' முறையை சிம்பாப்வேயிலும் அமுல்படுத்தியது. அதிக, மற்றும் விரைவான விளைச்சலுக்கு ஆசைப்பட்டு, மண்ணின் வளத்தை அடியோடு பறிகொடுத்த பரிதாபம் அங்கு அரங்கேறியது.

எது எப்படியிருந்தாலும், தனது பதவியை மட்டும் விட்டுக்கொடுக்காமல் பிடித்துக்கொண்டுவரும் முகாபே, 2005இல் தேர்தலை அறிவித்தார். நகர்ப்புறங்களில் எதிர்க்கட்சிக்கு அதிக வாக்குகள் கிடைத்தன. இதையடுத்து, நகர்ப்புறங்களைச் 'சுத்தம்'செய்யும் பணியை அரசு மேற்கொண்டது. அதாவது, ஆக்கிரமிப்புக்களை அகற்றுவது என்ற பெயரில்நடவடிக்கை ஆரம்பமாயிற்று. இதற்குப் பெயர் 'குப்பைகள் வெளியேற்றம்' எனப்பட்டது. ஒருசில நாள்களில் 7 லட்சத்து 50 ஆயிரம் மக்கள் தங்களது வீடுகள், தொழில்செய்யுமிடங்கள் மற்றும் உடைமைகளை இழந்து நின்றார்கள்.

2008இல் அதிபர் தேர்தல் நடந்தது. இதில், நாட்டின் பிரதமரான மோர்கன் ஸ்வங்கராயிடம் முகாபே 43 - 48 என்ற விகிதாசாரத்தில் தோற்றுப்போனார். அந்த நாட்டு சட்டத்தின்படி, வெற்றிபெறும் கூட்டணி 50 வீதத்துக்கு மேல் வாக்குகள் பெறாவிட்டால், மறுபடியும் இறுதிச்சுற்றுத் தேர்தல் நடக்கவேண்டும். இம்முறை முகாபே மிப்பெரும் முயற்சிகள் செய்தும்கூட மீண்டும் மோர்கன் ஸ்வங்கராய் வெற்றிபெற்றார். ஆனால், வாக்குகள் வித்தியாசம் மிகவும் குறைவு. இதனைச் சுட்டிக்காட்டிய முகாபே, தனது தோல்வியை ஒப்புக்கொள்ளவில்லை. ஆபிரிக்க கண்டத்திலுள்ள ஏனைய நாடுகளும் மேலை நாடுகளும் சேர்ந்து முகாபே - ஸ்வங்கராய் இருவருக்குமிடையே சமாதானத்தை ஏற்படுத்தியுள்ளன. இதன்படி, முகாபே தொடர்ந்து அதிபராக இருப்பார். ஸ்வங்கராய் அதிபராகத் தொடர்வார். இரு கட்சிகளுக்கும் அமைச்சரவையில் சம வாய்ப்புகள் கிடைக்கும். பிராந்தியங்களின் ஆளுநர்கள் நியமனத்தில் சரிசமனான வாய்ப்பு, தேசிய பாதுகாப்பு சபை உருவாக்கம் போன்றவை இந்த ஏற்பாட்டில் அடங்கும்.

**அண்மையில்**
**100 ரில்லியன் டொலர் நோட்டுக்களை அரசு அறிமுகம்செய்திருக்கிறது**

**இதன் பெறுமதி சுமார் 30 அமெரிக்க டொலர்கள்**




அரசியல் சிக்கல்களால் பொருளாதாரம் கடுமையாக பாதிக்கப்பட்டிருக்கிறது. முன்னர் குறிப்பிட்டதுபோலவே பணவீக்கம் 1000 சதவீதம் அதிகரித்துவிட்டது. இதைச் சமாளிக்க அரசு சமீபத்தில் 500 மில்லியன் டொலர் பண நோட்டுகளை அச்சடித்து வெளியிட்டது. (இது அமெரிக்க டொலரில் 10 டொலருக்கு சமம்). பின்னர் இப்போது 100 ரில்லியன் டொலர் நோட்டுக்களை அறிமுகம் செய்திருக்கிறது (இது ஏறத்தாழ 30 அமெரிக்க டொலர்கள்). இதை வைத்துக் கொண்டு சிம்பாப்வேயின் இன்றைய நிலைமையில் ஒரு நாளைக்கூடவேனும் கடத்தமுடியாது. தண்ணீர் விநியோகக் குழாய்களில் பெரும் உடைவு ஏற்பட்டு கழிவு நீருடன் குடிநீர் கலந்ததால் காலரா தொற்றுநோய் பெருமளவில் ஏற்பட்டிருக்கிறது. இதுவரை 42 ஆயிரத்துக்கும் அதிகமானோர் பாதிப்புற்று, இரண்டாயிரத்து 225 பேர் மரணமடைந்துள்ளபோது, மேலும் ஆயிரத்து 550 பேர் தினமும் புதிதாக பாதிக்கப்படுகின்றனர்.

நாட்டிலுள்ள 10 பிராந்தியங்களில் ஒன்பது பிராந்தியங்களிலுள்ள மருத்துவமனைகளில் மருந்து, மருத்துவர், தாதியர் போதுமான எண்ணிக்கையில் இல்லை. உபகரணங்கள் இல்லை. காலரா நோய்க்கான மருந்துகளும்கூட இல்லை. நிலைமை இப்படியே நீடித்தால் மிக விரைவிலேயே 1.4 மில்லியன் மக்கள் பாதிப்படையலாம். ஆரம்பத்தில், 12.8 மில்லியன் மக்களைக்கொண்டிருந்த சிம்பாப்வேயில் இப்போது 10.2 மில்லியன் மக்களே இருக்கிறார்கள். இதற்கெல்லாம் வேலைவாய்ப்பின்மை, மருத்துவ வசதியின்மை, அடிக்கடி நிகழும் கலவரங்கள் ஆகியவையே காரணம்.

முதலில், ஆங்கிலேயர்களின் பேராசையும் நிறபேத அணுகுமுறையும் சிம்பாப்வேயைச் சீரழித்தன. பின்னர், றொபர்ட் முகாபேயின் பதவி ஆசையும், ஊழலும், திறமையின்மையும் நாட்டைச் சின்னாபின்னப்படுத்தத் தொடங்கின. அதையடுத்து, தேர்தலும், அரசியல் ஸ்திரமின்மையும் நிர்வாகத்தை முடக்கின. இப்படி, வெளியிலிருந்தும் உள்ளேயிருந்தும் அடிமேல் அடிவாங்கிக் கொண்டு உயிர் ஊசலாடிக்கொண்டிருக்கும் சிம்பாப்வே நாடு மேம்படுவதற்கான தீர்வு என்ன என்பது பெரும் கேள்விக்குறியாகவே இருக்கிறது. ■



பங்களாதேஷ்

# புத்தாண்டில் மலர்ந்த புதிய நம்பிக்கை

**அவாமி லீக் வென்றுள்ள மிகப்பெரும் பாராளுமன்ற பலத்தை சரியானவிதத்தில் அது பயன்படுத்துமா?**

சாரங்கன்

**1971** இல் கிழக்கு பாகிஸ்தான் என்ற தேசம் பங்களாதேஷாக உதயமானதிலிருந்து, நெருக்கடி மேகங்களே அந்த நாட்டைத் தொடர்ந்து சூழ்ந்துகொண்டிருக்கின்றன. அந்த மேகங்கள் கலைந்து ஒளிபரவும் ஒரு வாய்ப்பு அண்மையில் நடைபெற்று முடிந்த பொதுத் தேர்தலில் ஏற்பட்டிருக்கிறது. முன்னாள் பிரதமர் ஷேக் ஹசினா, அவரே எதிர்பார்த்திராத விதத்தில், நாடளாவிய அமோக வெற்றியை ஈட்டியிருக்கிறார். இராணுவ அநுசரணையுடனான இருவருட இடைக்கால ஆட்சியின் பின்னர், புத்தாண்டில் மலர்ந்த இந்த ஜனநாயகத்தை நோக்கிய மாற்றம், மக்கள் மத்தியில் மிகப்பெரும் எதிர்பார்ப்பையும் நம்பிக்கையையும் தோற்றுவித்திருக்கிறது.

300 ஆசனங்களைக்கொண்ட பாராளுமன்றத்தில் ஹசினாவின் அவாமி லீக், இதற்குமுன்னர் பிரதமராகவிருந்த பேகம் காலிதா ஷியாவின் பங்களாதேஷ் தேசிய கட்சியை (பிஎன்பி) படுதோல்வியடையச் செய்து, மூன்றில் இரண்டு பெரும்பான்மையுடன் வெற்றிபெற்றுள்ளது. பி.என்பி 29 ஆசனங்களை மட்டுமே பெற்றுள்ளது. அதன் கூட்டணிக் கட்சிகள் மேலும் இரு ஆசனங்களைப் பெற்றுள்ளன.

ஹசீனாவின் பிஎன்பி தலைமைக் கூட்டணி மீதான பெரும் ஊழல், அதி

கார துஷ்பிரயோகம், தீவிரவாதிகளுக்குத் தஞ்சம் போன்ற குற்றச்சாட்டுகளை ஊர்ஜிதப்படுத்தி, வாக்காளர்கள் துல்லியமான ஆணையொன்றை அளித்திருக்கிறார்கள். பங்களாதேஷ் பிரிவினையை எதிர்த்து பாகிஸ்தான் இராணுவம் 1971இல் மேற்கொண்ட இனப் படுகொலையின்போது, பாகிஸ்தான் இராணுவத்துக்கு துணைநின்ற ஜமாத்-ஏ-இஸ்லாமி என்ற இஸ்லாமிய மத தீவிரவாத கட்சியுடன் பிஎன்பி சந்தர்ப்பவாத கூட்டும் சேர்ந்திருந்தது.

1975 ஆகஸ்டில் இராணுவ கிளர்ச்சியொன்றில் படுகொலைசெய்யப்பட்ட பங்களாதேஷின் தேசபிதாவும் முதலாவது ஜனாதிபதியுமான முஜிபுர் ரஹ்மானின் புதல்வியான ஹசீனா, கடினமானதெனினும் மாற்றமொன்றுக்கான சாசனத்தை விரும்புகிறார். தாய், மூன்று சகோதரர்கள் உள்பட, நெருங்கிய உறவினர்கள் அனைவருமே தந்தையுடன் படுகொலைசெய்யப்பட்டபோது, ஜேர்மனியில் தங்கியிருந்த ஹசீனாவும் அவரது சகோதரியும் உயிர் தப்பினார்கள்.

“அவர் காணவிரும்பும் மாற்றத்துக்கான சாசனம் எமக்கு ஒரு சுபீட்சத்தைக் காண்பித்ததில், அந்த மாற்றத்தை மக்கள் விரும்பித் தேர்ந்தார்கள். இப்போது, அதனை நிறைவுசெய்யும் பொறுப்பு அவருடையது” என்று மக்கள் கூறுகிறார்கள். பிஎன்பி. யின் தோல்விகளுக்கு எதிராக மக்கள் அளித்த ஆணை இதுவென்று அவர்கள் குறிப்பிடுகிறார்கள்.

இடைக்கால அரசு மேற்கொண்ட ஊழல் ஒழிப்பு நடவடிக்கையில் பிஎன்பி. யின் முக்கிய தலைவர்கள் பிடிபட்டதும், ஷியாவின் செல்வாக்குமிக்க மூத்த புதல்வரான தாரிக் ரஹ்மான் நாட்டைவிட்டு ஓடியதும் அவாமி லீக்கின் இந்த வெற்றிக்கு வழிகோலியது.

தேர்தல்மூலம் தெரிவுசெய்யப்படாத இந்த இடைக்கால அரசாங்கம், வாக்காளர் பட்டியலில் இருந்த 13 ஆயிரம் போலி வாக்காளர்களை பட்டியலிலிருந்து நீக்கி, கணனிமயப்படுத்தப்பட்ட புதிய அடையாள அட்டைகளையும் வழங்கி மேற்கொண்ட தேர்தல் மோசடி ஒழிப்பு நடவடிக்கை, பெரும் பாராட்டுக்குரியது.

ஐந்து ஆண்டுகால ஆட்சியை நிறைவுசெய்து 2006 ஒக்ரோபரில் ஷியா பதவியிறங்கினார். பின்னர், தேர்தல் மோசடிகள் தொடர்பான குற்றச்சாட்டுக்களில் எழுந்த அரசியல் வன்முறைகளையடுத்து, அவசரகாலச் சட்டத்தின்கீழ் இராணுவ உதவியுடன் இடைக்கால அரசு ஒன்று நிறுவப்பட்டது. இதனால், 2007 ஜனவரியில் நடைபெறவிருந்த பொதுத்தேர்தல் பின்போடப்பட்டது.



பேகம் காலிதா

**மூன்றில் இரண்டு பெரும்பான்மை என்பது தெற்காசிய நாடுகளில் அரசாங்கங்கள் எதிர்க்கட்சிகளின் மாறுபட்ட கருத்துக்களையும் பத்திரிகைகளின் விமர்சனங்களையும் ஏற்றுக்கொள்வதில் பெரும்பாலும் தோல்வியையே தோற்றுவித்திருக்கின்றன**

முஜிபுர் ரஹ்மானின் படுகொலைக்குப் பின்னர், ஷியாவின் கணவர் ஷியாவுர் ரஹ்மான் நாட்டை ஆண்டபோது, 1981ஆம் ஆண்டு சதி ஒன்றில் அவரும் படுகொலைசெய்யப்பட்டார். 1991இல் மீண்டும் பாராளுமன்ற ஜனநாயகம் அறிமுகப்படுத்தப்படும்வரை, இடைப்பட்ட இக் காலத்தில் இராணுவ சர்வாதிகாரிகளே பங்களாதேஷை ஆட்சிபுரிந்தார்கள்.

அதன்பின்னர், பெண் வைரிகளான ஷியாவும், ஹசீனாவும் ஆட்சிபுரிந்தார்கள். ஷியா 1991 - 1996 காலப்பகுதியிலும், பின்னர் 2001 - 2006 காலப்பகுதியிலுமாக இரு தடவைகள் பிரதமராக ஆட்சியிலிருந்தார்.

புதிய அரசு, ஊழலுக்கு எதிரான போராட்டத்துடன், அத்தியாவசிய பொருள்கள் விலையேற்றம், வறுமையொழிப்பு ஆகியவற்றில் தொடர்ந்து தீவிரமாக செயல்படவேண்டுமென்று அவதானிகள் கருதுகின்றனர். 150 மில்லியன் சனத்தொகையைக்கொண்ட பங்களாதேஷில் 40 வீதத்துக்கு அதிகமானோர் ஓர் அமெரிக்க டொலருக்கும் குறைவான தினசரி வருமானத்திலேயே வாழ்கின்றனர். உணவுப் பொருள்கள் விலையேற்றம் பெருந்தொகையான மக்களை வறுமைக்கோட்டின்கீழ் தள்ளிவிட்டிருக்கிறது.

வறுமையை ஒழிப்பதும் அடிப்படைவாத வன்முறைக்கு எதிராக போரிடுவதுமே, தான் எதிர்கொள்ளும் பிரதான சவால்கள் என்று, தேர்தல் வெற்றியின் பின்னர் செய்தியாளர்களிடம் ஹசீனா தெரிவித்திருக்கிறார்.

அவாமி லீக்குக்கு சாதகமான விதத்தில் வாக்கு மோசடிகள் நடைபெற்றிருப்பதாகவும், இந்தத் தேர்தல் முடிவுகள் ஏற்றுக்கொள்ளக்கூடியவை அல்ல என்றும் தேர்தல் முடிவுகளின் பின்னர் ஷியா தெரிவித்தார். ஆனால், தேர்தல் மோசடி தொடர்பான சந்தேகத்துக்கு இடமில்லை என்று சர்வதேச கண்காணிப்பாளர்கள் தெரிவித்துள்ளபோது, தேர்தல் முடிவுகள் குறித்து தனது கட்சி கடும்போக்கு எதனையும் மேற்கொள்ளப் போவதில்லை என்றும், ஹசீனாவுக்கு ஆட்சிக்கான ஒரு சந்தர்ப்பத்தை வழங்குவே தாம் விரும்புவதாகவும் ஷியா பின்னர் தெரிவித்திருக்கிறார்.

1971 இனப் படுகொலையின்போது பாகிஸ்தான் இராணுவத்துக்கு துணையாகவிருந்தவர்களை நீதி விசாரணைக்குட்படுத்தக்கோரும் மக்களின் பேராதரவை ஹசீனா பெருமளவில் பெற்றுள்ளபோது, இந்த யுத்த குற்றச்செயல் விடயங்களைச் சமாளிப்பதே அவருக்கு மிகக் கடினமான பணியாகப்போகிறது. இந்த இனப்படுகொலையில் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கைபற்றி கருத்து வேறுபாடுகள் இருப்பினும், 20ஆம் நூற்றாண்டில் இடம்பெற்ற முதல் ஐந்து பெரும் இனப்படுகொலைகளில் ஒன்றாக 'கின்னஸ்' புத்தகத்தில் பதிவாகியிருக்கிறது. குறைந்தது இரண்டு லட்சம் பேராவது இதில் கொல்லப்பட்டிருக்கலாமென்று பொதுவாக ஏற்றுக்கொள்ளப்படுகிறது.

யுத்த குற்றவாளிகள் தொடர்பான விசாரணைக்கு பங்களாதேஷ் அரசு உத்தியோகபூர்வமாக கோரிக்கைவிடுத்தால், விசாரணைக்கான ஏற்பாடுகளில் ஐ. நா. ஒத்துழைப்பு நல்கும் என்று, டாக்காவுக்கு விஜயம்செய்த ஐ.நா.வின் நேபாள விசேட பிரதிநிதி, ஹசீனாவுக்கு உறுதியளித்துள்ளார்.

இதேவேளை, 'இந்த மிகப்பெரும் பாராளுமன்ற பலத்தை சரியானவிதத்தில் பயன்படுத்துவதுதான் அவாமி லீக்குக்குள்ள மிகப்பெரும் சவால்' என்று பங்களாதேஷ் தினசரி 'நியூ ஏஜ்' ஆசிரிய தலையங்கத்தில் குறிப்பிட்டுள்ளது.

'மூன்றில் இரண்டு பெரும்பான்மை என்பது, பங்களாதேஷிலும் ஏனைய தெற்காசிய நாடுகளிலும் அரசாங்கங்கள் ஜனநாயக ரீதியில் நடந்துகொள்வதில் - குறிப்பாக, எதிர்க்கட்சிகளின் மாறுபட்ட கருத்துக்களையும் பத்திரிகைகளின் விமர்சனங்களையும் ஏற்றுக்கொள்வதில் - பெரும்பாலும் தோல்வியையே தோற்றுவித்திருக்கின்றன' என்றும் 'நியூ ஏஜ்' குறிப்பிட்டுள்ளது. ■


TIME TRAVEL
& Tours
ucanfly.co.uk
KINGFISHER
AIRLINES
JET AIRWAYS
THE JOY OF FLYING
SriLankan
Airlines
KUWAIT AIRWAYS
QATAR
AIRWAYS القطرية
297 Rayners Lane
Pinner
Middx. HA5 5EH
Tel: 020-8429 8333
www.timetraveluk.com



# 2008இல் உலகம்

## இந்திய துணைக்கண்டத்தில் துயரில் தொடங்கி கொதிப்பில் முடிவுற்றது

மாலி

**ஜனவரி:** உலக அரசியலில் பல மாற்றங்களுக்கு வழி சமைத்து ஆரம்பித்தது கடந்த ஆண்டு. தெற்காசிய அரசியலில் ஒரு கணிசமான மாற்றம் எதிர்பார்க்கப்பட்ட வேளையில் பெனாஸிர் புட்டோ கொலைசெய்யப்பட்டதையடுத்து, பாகிஸ்தானில் அவருடைய 19 வயது புதல்வர் பிலாவால் புட்டோ சர்தாரி, புட்டோ குடும்பத்தின் அரசியல் வாரிசாக நியமிக்கப்பட்டார். ஜோர்ஜியா, அதிபர் மிக்காயில் சாகஸ்விலியை மீண்டும் தேர்ந்தெடுத்தது. அமெரிக்காவில், ஜனாதிபதி தேர்தலுக்கான பிரசாரங்கள் உச்சநிலையை அடைந்தன. சியரா லியோனில் மேற்கொண்ட கொடூரங்களுக்காக லைபீரிய முன்னாள் அதிபர் சார்ள்ஸ் ரெய்லர், ஹேக்கில் சர்வதேச குற்ற நீதிமன்றத்தில் விசாரணைக்குட்படுத்தப்பட்டார். இதுதவிர, அரசியல் தலைவர்கள் சிலரின் சொந்த வாழ்விலும் மாற்றங்கள் நிகழ்ந்தன. பிரெஞ்சு அதிபர் நிக்கொலஸ் சாகோசி, அவரது முன்னைய காதலி கார்லா புரூணியை விவாகம் செய்வதற்கு முன்னதாகவே, அவருடன் ஜோர்டானுக்கு விஜயம் செய்தார். கெனியாவில் அதிபர் உம்வை கிபகியின் சர்ச்சைக்குரிய மீள் தெரிவையடுத்து நாட்டில் ஏற்பட்ட இனக் கலவரத்தில் ஆயிரத்துக்கும் அதிகமானோர் கொலையுண்டதுடன், லட்சக் கணக்கானோர் தமது வீடுகளைவிட்டு வெளியேற நிர்ப்பந்திக்கப்பட்டனர். காஸாவில் கமாஸ் இயக்கத்தினர் எகிப்துடனான எல்லைச் சுவரைத் தகர்த்து, ஆயிரக்கணக்கான பாலஸ்தீனர்கள் எல்லையைக் கடந்து எகிப்தில் தமக்குத் தேவையான உணவு மற்றும் பொருள்களை வாங்கிவர வழிசெய்தனர். இவர்கள் பின்னர் சிலதினங்களில் கலகம் அடக்கும் பொலிசாரால் திருப்பி விரட்டப்பட்டனர். ஒரு சகாப்தத்தின் முடிவாக, இந்தோனேசியாவின் முன்னாள் அதிபர் சுகார்ட்டோவின் மரணச் சடங்குகள் அரச மரியாதைகளுடன் சோலோவில் நடைபெற்றன. இமயத்தின் சிகரத்தை எட்டிய முதலாவது சரித்திர புருஷர் சேர் எட்மன்ட் ஹிலறிக்கு நியூசிலாந்தில் நூற்றுக் கணக்கானோர் இறுதி அஞ்சலியைச் செலுத்தினர்.

**பெப்ரவரி:** சீனாவில் ஏற்பட்ட கடும் பனி, போக்குவரத்தை ஸ்தம்பிதமடையவைத்ததில் லட்சக்கணக்கானோர் பாதிப்புக்குள்ளாயினர். அமெரிக்க ஆதரவாளரான சைபீரிய அதிபர் பொறிஸ் ராடிக் நூலிழையில் மீண்டும் தெரிவான போது, ஐரோப்பிய ஒன்றியத்துடான நாட்டின் எதிர்கால நெருக்கத்தின் அவசியத்தை உறுதிப்படுத்திக்கொண்டார். கொலை முயற்சி ஒன்றில் உயிர் தப்பிய கிழக்கு திமோர் அதிபர் ஜொசே ரமோஸ்-ஹோர்ரா, அவசர சிகிச்சைக்காக அவுஸ்திரேலியா

**தெற்காசிய அரசியலில் ஒரு கணிசமான மாற்றம் எதிர்பார்க்கப்பட்ட வேளையில் பெனாஸிர் புட்டோ கொலைசெய்யப்பட்டார்**



**பிரெஞ்சு அதிபர் நிக்கொலஸ் சாகோசி, அவரது முன்னைய காதலி கார்லா புரூணியை விவாகம் செய்தார்.**



**இமயத்தின் சிகரத்தை எட்டிய சரித்திர புருஷர் சேர் எட்மன்ட் ஹிலறிக்கு நியூசிலாந்தில் நூற்றுக் கணக்கானோர் இறுதி அஞ்சலியைச் செலுத்தினர்.**



வுக்கு கொண்டுசெல்லப்பட்டார். சேர்பியாவிலிருந்து சுதந்திர பிரகடனம்செய்து, கொசொவோ அரசியல் தலைவர்களும் மக்களும் கொண்டாடியபோது, பெல்கிரேட்டில் அமெரிக்க தூதரகத்துக்கு முன்பாக மோதல்களும் நிகழ்ந்தன. டிசம்பரில், பெனாஸிர் புட்டோ கொலையையடுத்து ஒத்திவைக்கப்பட்ட பாகிஸ்தான் தேர்தலில், ஐந்து ஆண்டுகள் ஆட்சியிலிருந்த அதிபர் பெர்வேஷ் முஷாரபின் கட்சி தோல்வியைத் தழுவியது. தீவிரவாதிகளை அடக்கும் நடவடிக்கை; அதிபர் புஷ்ஷுடனான அந்நியோன்யம்; பிரதம நீதியரசர் செளத்திரி பதவி நீக்கம் என்பனவற்றுக்கான கண்டனமாக முஷாரப்புக்கு எதிரான தேர்தல் முடிவுகள் கருதப்பட்டன. கியூபாவில், பிடெல் காஸ்ரோவின் 49 ஆண்டு கால அதிபர் பதவியை அவரது சகோதரர் ராகுல் உத்தியோகபூர்வமாக ஏற்றுக்கொண்ட அதேதினத்தில், சைப்பிரசின் புதிய அதிபராக கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர் டெமெற்றிஸ் கிறிஸ்ரோபியஸ் பதவியேற்றார். பதினேழு மாத வெளிநாட்டு தஞ்சத்தின் பின்னர் தாய்லாந்தின் முன்னாள் பிரதமர் தாக்சின் ஷினாவற்றா நாடுதிரும்பினார். பிணையில் அவர் விடுதலைபெற்றிருந்தாலும், தன்மீதான நடவடிக்கைகள் அரசியல் நோக்கானவை என்கிறார். கெனியாவில் தேர்தலுக்குப் பின்னரான நெருக்கடிகளை ஒரு முடிவுக்குக்கொண்டுவரும் விதத்தில், இரண்டு துணைப் பிரதமர்களையும்கொண்ட - புதியதான பிரதமர் பதவியொன்றை உருவாக்க, தீவிரமடையும் இனக்கலவரத்தினிடையே தமது கருத்து முரண்பாடுகளைப் புறந்தள்ளி, அதிபர் உம்வை கிபாகியும் எதிர்க்கட்சித் தலைவர் றெய்லா ஓடிங்காவும் ஆட்சியைப் பகிர்ந்து கொள்ளும் உடன்பாடொன்றைக் கைச்சாத்திட்டார்கள். இளவரசர் ஹரி, ஆப்கானிஸ்தான் ஹெல்மன்ட் பகுதியில் டிசம்பரிலிருந்து தனது படைப்பிரிவினருடன் சேவைபுரிவதாக பிரிட்டிஷ் பாதுகாப்பு அமைச்சு உறுதிப்படுத்தியது.


**மார்ச்:** ரஷ்யா, சீனா, அமெரிக்கா ஆகிய நாடுகளில் அரசியல் நடவடிக்கைகள் உத்வேகம் கொண்டன. விளடிமிர் புற்றின் தேர்ந்தெடுத்த வேட்பாளர் திமித்றி மெட்வெடெவ், ரஷ்ய அதிபர் தேர்தலில் மிகப் பெரும்பான்மை வாக்குகளுடன் வெற்றிபெற்றார். நாட்டின் பொருளாதாரம், சுற்றுச்சூழல் மற்றும் ராஜதந்திர நடவடிக்கைகள் குறித்து கலந்தாலோசிப்பதற்காக சுமார் ஆயிரம் சீன பிரதிநிதிகள் பீஜிங்கில் கூடினார்கள். அமெரிக்காவில், அதிபர் ஜோர்ஜ் புஷ், குடியரசுக் கட்சியின் வேட்பாளராக ஜோன் மக்கெயினை அறிவித்தார். இதேவேளை, மலேசியாவிலும் ஸ்பெயினிலும் அரசியல் வெற்றிகள் பெரும் உவப்பை அளிக்கவில்லை. மலேசிய பிரதமர் அப்துல்லா அஹ்மட் படாவி இரண்டாவது தடவையாக பதவியேற்றாலும், அவரது தோழமைக்கட்சி மூன்றில் இரண்டு மடங்கு ஆசனங்களை எதிர்க்கட்சியிடம் தோற்றது. ஸ்பெயினில் சோஷலிஸ்ட் பிரதமர் ஜொசே லூயிஸ் றொட்றிக் ஷபற்றரோ பொதுத் தேர்தலில் வெற்றிபெற்றாலும், அவருக்கு அறுதிப் பெரும்பான்மை கிட்டவில்லை. நியூ யோர்க்கில் சீன தூதரகம் முன்பாகவும், சீனாவின் மேற்கு மாகாணங்கள் பலவற்றிலும் திபெத்திய ஆதரவாளர்கள் மேற்கொண்ட ஆர்ப்பட்டங்கள் பொலிசாருடன் மோதல்களை ஏற்படுத்தின. சீனாவில் நூற்றுக்கும் மேற்பட்ட திபெத்தியர்கள் இந்த மோதலில் விளைந்த கலவரங்களில் கொல்லப்பட்டதாக திபெத்திய தலைவர்கள் தெரிவித்தபோதும், சீன அதிகாரிகள் அதனை மறுத்தனர். ஈராக் மீதான அமெரிக்க ஆக்கிரமிப்பு ஐந்து ஆண்டுகளாகையில், பாக்தாதில் பெரும் பாதுகாப்புடனான பச்சை பாதுகாப்பு வலயத்தில் மேற்கொள்ளப்பட்ட தொடர் மோட்டார், எறிகணைத் தாக்குதல்களையடுத்து, ஈராக்கில் பலியான அமெரிக்கர்களின் எண்ணிக்கை 4 ஆயிரத்தைத் தாண்டியது. பூட்டானில் முதன்முதலாக நடைபெற்ற ஜனநாயக தேர்தலில் பூட்டான் மன்னருடன் நெருங்கிய தொடர்புடையவரென்றாலும், சாதாரண மக்களுடன் அவர்களுள் ஒருவராகவே கருதப்படும் ஜிக்மி தின்லே எதிர்பாராத வெற்யைப் பெற்றார். தேர்தலில் தெரிவான பூட்டானின் முதலாவது பிரதமர் இவர். பெரிதும் ஆவலைத் தோற்றுவித்த லண்டன் ஹீத்துறு விமானநிலையத்தின் 5ஆவது விமான தரிப்பு நிலையம் திறந்துவைக்கப்பட்டபோது பொதிகளைக் கையாள்வதில் ஏற்பட்ட தடங்கல்களும், வாகன தரிப்பில் எற்பட்ட சிக்கல்களும், விமான சேவைகளின் ரத்தும் பெரும் குழப்ப நிலையையும் அபகீர்த்தியையும் தோற்றுவித்தது. சிம்பாப்வேயில் மாற்றமொன்றுக்குத் தவிக்கும் மக்கள் தேர்தலில் அளித்த வாக்கு, அதிபர் றொபேர்ட் முகாபேயின் 28 ஆண்டுகால ஆட்சிக்கு பெரும் சவாலை ஏற்படுத்தியது.

**ஏப்ரல்:** ஒலிம்பிக் சுடர் ஐரோப்பாவை அடைந்ததும் திபெத் ஆதரவு ஆர்ப்பாட்டக்காரர்கள் லண்டன், பாரிஸ் மற்றும் நகரங்களில் ஆர்ப்பாட்டங்களை அஞ்

கியூபாவில், பிடெல் காஸ்ரோவின் 49 ஆண்டு கால அதிபர் பதவியை அவரது சகோதரர் ராகுல் உத்தியோகபூர்வபூர்வமாக ஏற்றுக்கொண்டார்



இளவரசர் ஹரி, ஆப்கானிஸ்தானில் தனது படைப்பிரிவினருடன் சேவைபுரிவதாக பிரிட்டிஷ் பாதுகாப்பு அமைச்சு உறுதிப்படுத்தியது




சல் ஓட்டத்தின்போது மேற்கொண்டனர். இஸ்ரேலிய ராணுவ தாக்குதலில் றொய்ரர் செய்தி நிறுவனத்தின் காமிரா நிபுணர் பெடெல் ஷானாவும் பாலஸ்தினர் இருவரும் கொல்லப்பட்டனர். ஆயிரக்கணக்கான பத்திரிகையாளர்களும் பொதுமக்களும் கலந்துகொண்ட ஷானாவின் மரண ஊர்வலத்தில், சிதைக்கப்பட்ட அவரின் காமிராவும் இரத்தக் கறை தோய்ந்த கவச அங்கியும் அந்தக் கொடூரத்தின் சாட்சியங்களாய் தெரிந்தன. காபூலில் ஆப்கான் அதிபர் ஹமிட் கார்சாய் உத்தியோகபூர்வ வைபவம் ஒன்றில் கலந்துகொண்டபோது மேற்கொள்ளப்பட்ட கொலைமுயற்சியில் உயிர் தப்பினார். பத்து ஆண்டுகால வன்முறைக் கிளர்ச்சியை கைவிட்டு மாவோ தீவிரவாதிகள் நேபாள அரசுடன் மேற்கொண்ட ஒப்பந்தத்தையடுத்து, தேர்தலில் லட்சக்கணக்கான நேபாள மக்கள் வாக்களிக்கத் திரண்டனர். மொத்தம் 240 ஆசனங்களில், மாவோயிஸ்டுகள் 120 ஆசனங்களை வென்றனர். 2006இல் பதவியிழந்த சில்வியோ பேர்லுஸ்கோனி, கூட்டுத் தேர்தலில் வெற்றிபெற்று மூன்றாவது தடவையாக இத்தாலியின் பிரதமராக பதவியேற்றார். தன்னுடைய சொந்த மகளை 24 ஆண்டுகள் சூரிய ஒளி புகாத நிலக்கீழ் அறையில் 'சிறைவைத்து', அவர் பெற்றெடுத்த ஏழு பிள்ளைகளுக்கும் தானே தந்தையானதை 73 வயதான ஒஸ்ரிய நாட்டவர் ஒருவர் ஒப்புதல் செய்தார். பிள்ளைகளில் ஒன்று சுகவீனமுற்று மருத்துவமனையில் சேர்க்கப்பட்டபோது, பிள்ளையின் தாயை அவசரமாக மருத்துவமனையுடன் தொடர்புகொள்ளும்படி வைத்தியர்கள் விடுத்த வேண்டுதலையடுத்து சம்பவம் வெளிச்சத்துக்கு வந்தது.

**மே:** அமெரிக்கர்வில் உணவுப்பொருள்களின் விலையேற்றம் சமூக கொந்தளிப்பை எற்படுத்தும் விதத்திலான அச்சுறுத்தலாகியபோது அதிபர் புஷ் 700 மில்லியன் அமெரிக்க டொலர்களை உணவுப்பொருள் விலையேற்றத்தைக் கட்டுப்படுத்த ஒதுக்கீடுசெய்தார். எரிபொருள் விலையேற்றமும் ஏதென்ஸ், பிரிட்டனின் மஞ்செஸ்டர் மற்றும் பல நகரங்களில் எதிர்ப்பு நடவடிக்கைகளை தூண்டியது. மியன்மாரில் ஏற்பட்ட பெருஞ்சூறாவளியில் ஐந்து பகுதிகள் இராணுவ அரசாங்கத்தால் அழிவுப் பிரதேசங்களாக பிரகடனப்படுத்தப்பட்டன. மூன்று தசாப்தங்களின் பின்னர் சீனாவில் ஏற்பட்ட நிலநடுக்கத்தில் 32 ஆயிரத்துக்கும் அதிகமானோர் உயிரிழந்ததுடன், ஆயிரக்கணக்கானோர் இடிபாடுகளுள் புதையுண்டனர். தென்னாபிரிக்காவில் வெளிநாட்டவர்மீதான வெறுப்புணர்வுத் தாக்குதல்களைக் கட்டுப்படுத்தி அமைதியை நிலைநாட்டுவதில் பொலிசார் பெருமுயற்சிகொண்டனர். லெபனான் பாராளுமன்றம் இராணுவ தளபதி மைக்கல் சுலைமானை அரசுத் தலைவராக தெரிவுசெய்தது.

**யூன்:** பாகிஸ்தானில் டென்மார்க் தூதரகத்துக்கு வெளியே தற்கொலைக் குண்டுதாரி ஒருவர் கார் ஒன்றை வெடிக்கவைத்ததில் ஆறு பேர் உயிரிழந்ததுடன் இருபத்தைந்துக்கும் மேற்பட்டோர் காயமுற்றனர். ரோமில் உணவு உச்சி மாநாடு ஒன்றுக்காக உலக தலைவர்கள் தயாராகிக்கொண்டிருந்த வேளையில், ஐரோப்பிய ஒன்றியத்தில் உணவுப் பொருள்களின் விலையேற்றம் பணவீக்கத்திலும் பார்க்க இரண்டு மடங்காகியது. அமெரிக்காவின் முதல் பெண் ஜனாதிபதி என்ற சாதனை முயற்சியை முடித்து, ஹிலறி கிளின்டன், பராக் ஒபாமாவை அங்கீகரித்தார். ரொக்கியோவின் நெருக்கடிமிகுந்த கடைத்தெருவொன்றில் ஒன்பதுபேரை கத்தியால் குத்திக் கொலைசெய்த மனிதனை ரொக்கியோ பொலிசார் கைதுசெய்தனர். கார்ட்டூமில் சூடான் விமானசேவை விமானம் ஒன்று தரையிறங்கியபின்னர் தீப்பற்றிக்கொண்டதில் விமானத்தில் பயணம்செய்த 127 பேரில் 120 பேர் மாண்டனர். உலக அரசியலில் ஐரோப்பிய ஒன்றியத்தின் செல்வாக்கை வலுப்படுத்தும் லிஸ்பன் உடன்படிக்கையை, ஒன்றியத்தின் 27 அங்கத்துவ நாடுகளில் ஒரேயொரு நாடாக அயர்லாந்து சர்வசன வாக்கெடுப்பின்மூலம் நிராகரித்தது. நிகழ்ந்துகொண்டிருக்கும் வன்முறைச் சூழலில் சுதந்திரமானதும் நேர்மையானதுமான வாக்களிப்பு சாத்தியமற்றது என்று தெரிவித்து சிம்பாப்வே எதிர்க்கட்சித் தலைவர் மோர்கன் ஸ்வங்கராய், அதிபர் றொபர்ட் முகாபேக்கு எதிரான தேர்தல் போட்டியிலிருந்து விலகினார்.

**யூலை:** பாலஸ்தீன கட்டட நிர்மாண தொழிலாளி ஒருவர் புல்டோசர் ஒன்றை ஜெருசலத்தின் சனநெருக்கடி மிகுந்த வீதியொன்றில் பஸ் வண்டிகள்மீதும் கார்கள் மீதும் மோதியதில் மூன்று இஸ்ரேலியர்கள் கொல்லப்பட்டு, 40க்கும் அதிகமானோர் காயமுற்றபோது, அத் தொழிலாளி பின்னர் சுட்டுக்கொல்லப்பட்டார். கொலம்பிய கெரில்லாக்களால் பணய கைதிகளாக்கப்பட்ட பிரெஞ்சு கொலம்பிய அரசியல்வாதி இங்ரிட் பெற்றன்கோட்டும் மற்றும் பதினான்கு பேரும் விடுதலை

ஜிக்மி தின்லே, பூட்டானின் முதலாவது பிரதமராக தேர்தலில் தெரிவானார்



ஹீத்துறு விமானநிலையத்தின் 5ஆவது விமான தரிப்பு நிலையம் திறந்துவைக் கப்பட்டபோது ஏற்பட்ட தடங்கல்களும் சிக்கல்களும், பெரும் குழப்ப நிலையையும் அபகீர்த்தியையும் தோற்றுவித்தது.



மூன்று தசாப்தங்களின் பின்னர் சீனாவில் ஏற்பட்ட நிலநடுக்கத்தில் 32 ஆயிரத்துக்கும் அதிகமானோர் உயிரிழந்ததுடன், ஆயிரக்கணக்கானோர் இடிபாடுகளுள் புதையுண்டனர்.



செய்யப்பட்டார்கள். பெற்றன் கோட்டுக்கு பிரான்சில் அதிபர் நிக்கொலஸ் சாக்கோசியும் அவரது மனைவியும் செங்கம்பள வரவேற்பு அளித்தனர். காபூலில் இந்திய தூதரகத்துள் நுழைந்த இரு ராஜதந்திர மோட்டார் வண்டிகளை இலக்குவைத்து மேற்கொள்ளப்பட்ட தற்கொலைக் குண்டுத் தாக்குதலில் 41 பேர்வரை கொல்லப்பட்டார்கள். 2006ஆம் ஆண்டு எல்லைத் தாக்குதலில் கைப்பற்றப்பட்ட இரு இஸ்ரேலிய இராணுவத்தினரின் சடலங்களை ஹெஸ்புல்லா இயக்கத்தினர் கையளித்ததையடுத்து, இஸ்ரேலில் அதி நீண்டகாலம் சிறைவைக்கப்பட்டிருந்தவரான சாமிர் குவான்ரர் உள்பட, ஐந்து லெபனானியர்கள் இப் பரிமாற்றத்தில் விடுவிக்கப்பட்டனர். பெய்ரூட்டில் இவர்களுக்கு வீர வரவேற்பு அளிக்கப்பட்டது. ஐ. நா. நியமித்த ஜேர்மன் மத்தியஸ்தர் ஒருவரால் ஏற்படுத்தப்பட்ட இந்த உடன்பாட்டில், 2006ஆம் ஆண்டு யுத்தத்தில் கொல்லப்பட்ட எட்டு ஹெஸ்புல்லா போராளிகளின் சடலங்களையும் இஸ்ரேல் கையளித்தது. இதில், 1978 முற்றுகைக்கு தலைமைதாங்கிய பெண் கெரில்லா போராளி டலால் முக்ராபியின் சடலமும் அடங்கும். யூலை 18ஆம் தேதி தென்னாபிரிக்க முன்னாள் அதிபர் நெல்சன் மண்டேலா 90ஆவது வயதை எய்தினார். அவரது பிறந்ததின வைபவங்கள் பல தினங்கள் கொண்டாடப்பட்டன. பேர்ளினில் அமெரிக்க ஜனாதிபதி வேட்பாளர் பராக் ஒபாமாவை லட்சக்கணக்கான ஆதரவாளர்கள் ஆரவாரத்துடன் வரவேற்றனர். ஆப்கானிஸ்தானில் ஸ்திர நிலையை எற்படுத்தவும், காலநிலை மாற்றத்திலிருந்து அணுவாயுத உற்பத்தி வரையிலான மற்றும் பல அச்சுறுத்தல்களை எதிர்கொள்ளவும் ஐரோப்பா அமெரிக்காவுடன் தோள் கொடுக்கவேண்டும் என்று ஒபாமா அறைகூவல்விடுத்தார். ஹொங் கொங்கிலிருந்து மெல்போர்னுக்கு சென்றுகொண்டிருந்த குவான்ரஸ் எயர்வேய்ஸ் விமானம் ஒன்று, விமானத்தில் துளை ஏற்பட்டதனால் மணிலாவில் அவசரமாக தரையிறக்கப்பட்டது. 1992 - 95 கால பொஸ்னிய யுத்தத்தில் யுத்த குற்ற சந்தேகநபரான முன்னாள் அதிபர் றடோவன் கரடிச் போலி வேடத்திலிருந்தபோது கைதுசெய்யப்பட்டு, இனப்படுகொலை குற்றச்சாட்டில் விசாரணைக்காக நெதர்லாந்துக்கு கொண்டு செல்லப்பட்டார். 1995இல் சுமார் 8 ஆயிரம் முஸ்லிம் ஆண்களும் சிறுவர்களும் இங்கு படுகொலைசெய்யப்பட்டனர். இந்திய பாராளுமன்றத்தின் நம்பிக்கை வாக்கெடுப்பில் பிரதமர் மன்மோகன் சிங் 19 வாக்குகளால் வெற்றி பெற்றார். 11 பேர் இந்த வாக்கெடுப்பில் வாக்களிக்கவில்லை. பொதுமக்கள் பாவனைக்கான அணுசக்தி தொழில் நுட்பத்தைப் பெறுவதில் அமெரிக்காவுடன் செய்துகொண்ட பேரத்தை எதிர்த்து, இந்திய கம்யூனிஸ்ட் கட்சிகளின் ஆதரவை சிங் இழந்தார்.

**ஆகஸ்ட்:** வட இந்தியாவில் இந்து ஆலயம் ஒன்றில் 145பேருக்கு மேல் சன நெரிசலில் மாண்டனர். இவர்களில் பெரும்பாலோர் பெண்களும் குழந்தைகளும் ஆவர். பீஜிங்கில் ஒலிம்பிக் போட்டிகள் விந்தைமிகும் வாணவேடிக்கைகளுடன் ஆரம்பமாகியபோது, உலகம் முழுவதும் களிப்புடன் ரசித்தது. அதேதினம், ஜோர்ஜிய அதிபர் மிக்காயில் சாகஸ்விலி பிரிவினைவாதிகளின் தென் ஒசெற்றியா பிராந்தியம் ஜோர்ஜிய பாதுகாப்புப் படைகளின் கட்டுப்பாட்டில் இருப்பதாக அறிவித்தபோது, ரஷ்ய இராணுவ வண்டிகள் தென் ஒசெற்றியா நோக்கி நகர்ந்தன. சதி ஒன்றில் ஆட்சியைக் கைப்பற்றி ஒன்பது ஆண்டுகளின் பின்னர், அமெரிக்காவின் மிக நெருக்கமான சகாவான பாகிஸ்தான் அதிபர் பெர்வேஷ் முஷாரப், தம்மீதான பதவி விலக்கல் குற்றச்சாட்டைத் தவிர்க் கும் விதத்தில் தமது ராஜிநாமாவை அறிவித்து, கடைசி இராணுவ அணிவகுப்பை ஏற்றுக்கொண்டார். பாலஸ்தீன மக்களின் உரிமைகள் தொடர்பான விளிப்புணர்வை வலுப்படுத்தும் விதத்தில் சர்வதேச ஆதரவாளர்கள் இஸ்ரேல் விதித்த கடல் பிராந்திய தடையை மீறி, சைப்பிரசிலிருந்து காஸாவுக்கு படகுகளில் பயணம் செய்தனர்.

**செப்டம்பர்:** மின்னசொற்றா மாநாட்டில் சாரா பாலினைத் தமது துணை ஜனாதிபதி வேட்பாளராக குடியரசுக் கட்சியினர் வரவேற்றனர். 'வாஷிங்டனுக்கு நிரந்தர எதிரிகள் எவருமே இல்லை' என்று அறைகூவி, அமெரிக்காவின் உயர் ராஜதந்திரி கொன்டலீஸா றைஸ், 1953ஆம் ஆண்டுக்குப் பின்னர் லிபியாவுக்கு விஜயம் செய்யும் முதலாவது அமெரிக்க இராஜாங்க செயலாளராக திரிப்பொலி சென்றடைந்தார். பெர்வேஷ் முஷாரபுக்குப் பதிலான புதிய ஜனாதிபதியைத் தெர்ந்தெடுக்க பாகிஸ்தானின் பாராளுமன்ற உறுப்பினர்களும் நான்கு மாகாணசபை உறுப்பினர்களும் வாக்களித்தவேளை, பெஷவாரில், காரில் வைக்கப்பட்ட குண்டு ஒன்று வெடித்ததில் ஐந்து பொலிசார் உள்பட 16பேர் கொல்லப்பட்டனர். முன்னாள் பிரதமர் பெனாஸிர் புட்டோவின் கணவர் அசிஃ

அமெரிக்காவின் முதல் பெண் ஜனாதிபதி என்ற சாதனை முயற்சியை முடித்து, ஹிலறி கிளின்டன், பராக் ஒபாமாவை அங்கீகரித்தார்



நெல்சன் மன்டேலாவின் 90ஆவது பிறந்ததின வைபவங்கள் பல தினங்கள் கொண்டாடப்பட்டன.




அலி ஸர்தாரி புதிய ஜனாதிபதிக்கான வாக்களிப்பில் பெருவெற்றி பெற்றார். ஆங்கிலக் கால்வாயூடான சுரங்க ரயில் பாதையில் ஏற்பட்ட தீயினால் இரு முனைகளிலும் பிரயாணிகள் பெருஞ் சிரமங்களுக்குள்ளாயினர். செப்டம்பர் 11 அமெரிக்க தாக்குதல்பற்றிய தமது கருத்துக்களைக் கலந்துரையாட, அரசியல் வைரிகளான ஜோன் மக்கெயினும் பராக் ஒபாமாவும் ஒரே மேடையில் தோற்றினர். பிரான்சின் அநுசரணையுடனான செப்டம்பர் 15 கால எல்லைக்கு அமைய, ரஷ்ய படைகள் ஜோர்ஜியாவின் கருங்கடல் பொட்டி துறைமுகப் பிராந்தியத்திலிருந்து வெளியேறின. மூன்று தசாப்தகால இரும்பு ஆட்சியில் முதன்முறையாக அதிபர் முகாபே தனது அதிகாரங்கள் சிலவற்றை விட்டுக்கொடுக்கும் சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த அதிகார பகிர்வு ஒப்பந்தமொன்றில், சிம்பாப்வேயின் வைரிகளான அரசியல் கட்சிகள் கைச்சாத்திட்டன. மெரில் லிஞ் நிறுவனத்தை அமெரிக்க வங்கி கையேற்க உடன்பட்டு, அமெரிக்காவின் நான்காவது பெரிய முதலீட்டு வங்கியான லீமன் பிரதர்ஸ் வங்குரோத்து பாதுகாப்புக்கு விண்ணப்பித்து, உலகம் முழுவதும் அதன் ஊழியர்கள் வேலையிழக்க நேர்ந்ததில், உலகளாவி எழும் கடன் நெருக்கடி மேலும் ஆழமாக தாக்கத்தை ஏற்படுத்தியது. சீனாவில் இரு குழந்தைகளின் மரணத்துடனும், ஆயிரத்துக்கும் மேற்பட்ட குழந்தைகளின் ஆரோக்கியமின்மையுடனும் தொடர்புபடுத்தப்பட்ட பால் மா ஊழல், அந்தப் பால்மா அனைத்தையும் மீளப்பெறவும், உற்பத்தி தொடர்பிலான விசாரணைக்கும் இட்டுச்சென்றது. பாதிக்கப்பட்ட குழந்தைகளின் பெற்றோர் நூற்றுக் கணக்கானோர், விளக்கம் கோரியும் நஷ்டஈடு கோரியும் கம்பனியின் முன்னால் திரண்டனர். நேபாளத்தில் மதச் சடங்குகளில் விலங்குகளைப் பலிகொடுப்பதை அரசாங்கம் தடைசெய்ததையடுத்து அங்கு வன்முறைக் கலவரங்கள் தொடர்ந்தன. நாடு, அரசியல் ஸ்திரமின்மையில் மூழ்குவதாக தெரிவித்து தென்னாபிரிக்க அதிபர் தபோ உம்பேகி தனது ராஜிநாமாவைக் கையளித்தார். பின்லாந்து பாடசாலையொன்றில் துப்பாக்கி ஏந்திய 22 வயதான பழைய மாணவன் ஒருவன் மேற்கொண்ட துப்பாக்கிச்சூட்டில், பத்துப் பேர் கொலைசெய்யப்பட்டார்கள். தத்தளிக்கும் வங்கிகளின் சொத்தை திறைசேரி கையேற்று, ஒரு சமரச நிவாரணத்தை அளிக்கும் முயற்சி அமெரிக்க மக்கள் பிரதிநிதிகள் சபையில் 228 - 205 என்ற வாக்கு எண்ணிக்கையில் மறுக்கப்பட்டபோது, உலகம் முழுவதும் பங்குச் சந்தைகளில் பெரும் வீழ்ச்சி ஏற்பட்டது.

**ஒக்ரோபர்:** அமெரிக்க பாராளுமன்ற நிராகரிப்பைத் தொடர்ந்து, பொருளாதாரத்தைப் பாதுகாப்பதற்கு இந்த 700 பில்லியன் டொலர் மீட்புத் திட்டமே ஏற்றதொரு வாய்ப்பு என்று அதிபர் ஜோர்ஜ் புஷ் வற்புறுத்தி, அதனை நிறைவேற்ற வழிசெய்யுமாறு கோரிக்கை விடுத்தார். ஐஸ்லாந்தில் நிதி நெருக்கடி மோசமடைந்ததில் ஐஸ்லாந்து நாணயம் கிரவுண், யூரோவைவிட 30 சதவீதத்தால் வீழ்ச்சியடைந்தது. நிலைமையைச் சமாளிக்க அரசாங்கம் அவசர சட்டங்களை நிறைவேற்றியது. கொங்கோவில், லூரென்ற் என்குண்டாவின் தீவிரவாத படைகளின் நான்கு நாள் தாக்குதலையடுத்து, சுமார் 45 ஆயிரம் இடம்பெயர்ந்த மக்கள் தற்காலிக முகாம்களிலிருந்து கோமாவுக்கு திரும்பிச் சென்றுவிட்டதாக ஐ. நா சபையின் மனித உரிமை ஆணைக்குழு தெரிவித்தது.

**நவம்பர்:** அமெரிக்க வரலாற்றில் பெரும் ஆவலைத் தோற்றுவித்த ஜனாதிபதி தேர்தலில் பராக் ஒபாமா வெற்றி பெற்றார். சுமார் 500 சிறுவர்கள் பாடங் கற்றுக்கொண்டிருந்தபோது, ஹெயிற்றியில் பாடசாலையொன்றின் கட்டம் நிர்மூலமானது. 2002இல், 202 பேர் பலியான பாலி இரவு விடுதிக் குண்டுவெடிப்பில் குற்றவாளியாகக் காணப்பட்ட இமாம் சமுத்ரா, சுடுபடையினால் சுடப்பட்டு அவரது மரணதண்டனை நிறைவேற்றப்பட்ட பின்னர், ஜாவாவில் அவரின் சொந்த ஊரில் சடலம் அடக்கம் செய்யப்பட்டபோது ஆயிரக்கணக்கானோர் கலந்துகொண்டனர். எட்டு ஆண்டுகளின் பின்னர் நிகழ்ந்த மிகப் பெரும் அழிவாக, பசுபிக் சமுத்திரத்தில் ரஷ்ய நீர்மூழ்கிக் கப்பல் ஒன்று விபத் துக்குள்ளானதில் 20 பேர் மரணமடைந்ததுடன் 20க்கும் அதிகமானோர் காயமுற்றனர். சதாம் ஹுசைனை அழித்தொழிப்பதற்காக 2003இல் ஈராக்கை ஆக்கிரமித்த அமெரிக்க படைகள், 2011வரை ஈராக்கில் தங்கியிருப்பதற்கு வகைசெய்யும் விதத்தில் ஈராக்கும் அமெரிக்காவும் ஒப்பந்தமொன்றைக் கைச்சாத்திட்டன. மிகப்பெரும் கடற் கொள்ளையாக, 100 மில்லியன் டொலர் பெறுமதியான எண்ணெயுடன் சவூதி அரேபிய எண்ணெய்க் கப்பலொன்று சோமாலி கடற் கொள்ளையரால் கடத்தப்பட்டு சோமாலிய கரையில் நங்கூரமிடப்பட்டது. தாய்லாந்தில், பிரதமர் சமக் சுந்தரவேஜின் ராஜிநாமாவை வற்புறுத்தி ஆயிரக்கணக்கான ஆர்ப்பாட்டக்காரர்கள் ஸ்வர்ண

பொஸ்னிய முன்னாள் அதிபர் ரடோவன் கரடிச், போலி வேடத்திலிருந்தபோது கைதுசெய்யப்பட்டு இனப் படுகொலைக் குற்றச்சாட்டில் விசாரணைக்காக நெதர்லாந்துக்கு கொண்டுசெல்லப்பட்டார்.





இந்திய பாராளுமன்றத்தின் நம்பிக்கை வாக்கெடுப்பில் பிரதமர் மன்மோகன் சிங் 19 வாக்குகளால் வெற்றி பெற்றார்



1953ஆம் ஆண்டுக்குப் பின்னர் விஜயம் செய்யும் முதலாவது அமெரிக்க இராஜாங்க செயலாளராக, கொன்டலீஸா றைஸ் லிபியாவுக்குச் சென்றார்



பூமி சர்வதேச விமான நிலையத்தை முற்றுகையிட்டதில் விமான சேவைகள் ரத்துச்செய்யப்பட்டன. மும்பாயில், தானியங்கி துப்பாக்கிகள், கைக்குண்டுகளுடனான பெருமளவு ஆயுதங்களுடன் பத்துப்பேரடங்கிய தீவிரவாதிகள், மும்பாயின் அடையாளச் சின்னங்களான முக்கிய ஹோட்டல்கள், புகையிரத நிலையம், மருத்துவமனை, மற்றும் வெளிநாட்டு உல்லாசப் பயணிகள் பெருமளவு காணப்படும் உணவுச் சாலைகளில் பாரபட்சமற்ற திடீர்த் தாக்குதல்களை நிகழ்த்தினர். முற்றுகையைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவர இந்திய படையினருக்கு மூன்று தினங்களாகியபோது, இந்தக் கொடூரத்தில் 170 பேர் உயிரிழந்து, 300க்கும் அதிகமானோர் காயமுற்றனர். ஒருவர் தவிர, ஏனைய தீவிரவாதிகளும் கொல்லப்பட்டனர். நைஜீரியாவில் முஸ்லிம் - கிறிஸ்தவ குழுக்களுக்கிடையேயான மத மோதல்களில் வீடுகள், உடைமைகள் எரித்து தரைமட்டமாக்கப்பபட்டு, நூற்றுக் கணக்கானோர் உயிரிழந்ததுடன், பல்லாயிரக் கணக்கானோர் இடம்பெயர்ந்தனர்.

டிசம்பர்: மும்பாயின் அடையாளச் சின்னங்கள் மீதான தீவிரவாதிகளின் தாக்குதல், பாகிஸ்தான் தீவிரவாதிகளாலேயே மேற்கொள்ளப்பட்டதாக இந்திய அதிகாரிகள் தெரிவித்தனர். ஏற்கனவே பதற்ற நிலையில் இருந்துவந்த இருநாடுகளினதும் உறவை இது மேலும் பதற்றத்துக்குள்ளாக்கியது. பின்லாந்தின் முன்னாள் அதிபரும் தேர்ந்த அரசியல்வாதியுமான மார்ற் அற்றிசாரிக்கு சமாதானத்துக்கான 2008ஆம் ஆண்டு நோபல் பரிசு வழங்கப்பட்டது. உலகின் பல பாகங்களிலும் சமாதானத்துக்கான அவரின் பல தசாப்த கால முயற்சிக்கு அங்கீகாரமாக ஒஸ்லோவில் இது வழங்கப்பட்டது. கனடாவில் மூன்று எதிர்க்கட்சிகள் இணைந்து தமக்குள் கூட்டணியமைத்ததன் விளைவாக பிரதமர் ஸ்ரீபன் ஹெரன்லி, தாம் இரண்டாவது தடவையாக பதவியேற்ற ஏழு வாரங்களிலே பாராளுமன்றத்தை ஜனவரி பிற்பகுதிவரை இடைநிறுத்தி வைத்தார். தம்மீதான நம்பிக்கையில்லாப் பிரேரணையிலிருந்து தப்பித்துக்கொள்ளும் ஒரு நடவடிக்கையாக அவர் இதனை மேற்கொண்டார். அல் பக்டாடியா என்ற கெய்ரோ செய்மதி தொலைக்காட்சியின் நிருபர் ஒருவர், பாக்தாத்தில் நடைபெற்ற பத்திரிகையாளர் மாநாட்டில் அதிபர் புஷ்மீது தனது கால் செருப்பைக் கழற்றி வீசினார். ■

பாகிஸ்தான் அதிபர் பெர்வேஷ் முஷாரப் தம்மீதான பதவி விலக்கல் குற்றச்சாட்டைத் தவிர்க்கும் விதத்தில் தமது ராஜிநாமாவை அறிவித்து, கடைசி இராணுவ அணிவகுப்பை ஏற்றுக்கொண்டார்



தொலைக்காட்சி நிருபர் ஒருவர், பாக்தாத்தில் நடைபெற்ற பத்திரிகையாளர் மாநாட்டில் அதிபர் புஷ்மீது தனது கால் செருப்பைக் கழற்றி வீசினார்.



### அமெரிக்காவில் மையங்கொண்டு

# உலகை உலுக்கும் நிதிச் சூறாவளி

### சீட்டுக்கட்டில் கட்டப்பட்ட மாளிகை கீழே வீழ்ந்திடச் சிறு காற்றுப் போதும்

டி. ஐ. ரவீந்திரன்

'பேராசை பெருநஷ்டம்' என்பது தனிப்பட்ட வாழ்க்கைக்கு மட்டுமல்ல, பெரு நிறுவனங்கள், நாடுகள் என்று அனைத்துக்குமே பொருந்தும். இந்த பழமொழிதான் அமெரிக்காவிலிருந்து தொடங்கி சகல திசைகளிலும் விரிந்து பரவும் பொருளாதார நெருக்கடிக்கு முக்கிய காரணம். இந்த நெருக்கடி பற்றி அமெரிக்காவின் புதிய அதிபர் பராக் ஒபாமா, அவரது தேர்தல் போட்டியில் கூறியது குறிப்பிடித்தக்கது: "கடந்த எட்டு ஆண்டு காலமாக ஜோர்ஜ் புஷ் உருவாக்கிய தவறான பொருளாதாரக் கொள்கையின் இறுதி விளைவு இது." தேர்தல் கோஷம் என்று தள்ளிவிட முடியாத அளவுக்கு உண்மைக்கு மிக அணித் தான கூற்று இது.

அமெரிக்கா முதலாளித்துவ நாடு என்பது எல்லோருக்கும் தெரியும். இதுவரை அமெரிக்காவை ஆட்சிபுரிந்த அதிபர்களிலேயே மிக அதீதமாக முதலாளிகளுக்கு முக்கியத்துவம் கொடுத்து அவர்களுக்கு வரிச்சலுகை, தொழில் சலுகை போன்றவற்றை அவர்களே பிரமிக்கும்படி வாரிவழங்கினார் ஜோர்ஜ் புஷ். அதேசமயம், ஏழைகள், கீழ் நடுத்தர மற்றும் நடுத்தர மக்கள் மிக அதிகமாக வரி செலுத்தும்படியான நிலையை உருவாக்கினார்.

அமெரிக்க மக்கள் தொகையில் ஒரு சதவிகிதமாக இருந்த பணக்காரர்களின் வருவாய் இதனால் ஆண்டுக்கு 20 சதவீதம் என்ற விதத்தில் பெருகிக் கொண்டே சென்றது. அதிபெரும் பணக்காரர்களைத் தவிர புஷ் அரசு யாருக்கும் ஆதரவு அளிக்கவில்லை. இதை அமெரிக்காவின் அதிபெரும் பணக்காரர்களில் ஒருவரான வாரன் பப்பெட் வெளிப்படையாகக் கூறியிருக்கிறார். "வரிவிலக்கு திட்டங்களையோ, வரி தவிர்ப்புத் திட்டங்களையோ நான் பின்பற்றியதில்லை; பின்பற்றத் தேவையும் இல்லையென்றாலும், நான் அதிகாரபூர்வமாக செலுத்தவேண்டிய வரிகளைச் செலுத்திய பின்னருங்கூட, என்னிடம் பணிபுரியும் வரவேற்புப் பெண் செலுத்தும் மொத்த வரிவிகிதத்தை விடவும் நான் செலுத்திய வரிவிகிதம் குறைவே. குறைந்தபட்ச சராசரி ஊதியம்பெறும் அமெரிக்கர்களைவிட நான் செலுத்தும் வரியின் விகிதம் குறைவாகவே இருக்கிறது." வாரன் பப்பெட் தனது வருமானத்தின் 15 சதவிகிதத்தை வரியாகச் செலுத்துகிறார். அவரிடம் பணிசெய்யும் வரவேற்புப் பெண் 17 வீதம் வரி செலுத்துகிறார்.

புஷ்ஷின் இந்த அதிதீவிர பணக்கார விசுவாசம் அவரையும், அமெரிக்காவையும் அதனால், உலகத்தையும் பெரும் சிக்கலில் ஆழ்த்தியிருக்கிறது. எவ்வளவு பெரிய நிதி நிறுவனம் அல்லது பெரு நிறுவனமாக இருந்தாலும், அதன் பெரும்பாலான வருமானம் சாதாரண பொதுமக்களிடமிருந்துதான் வரவேண்டும். அமெரிக்காவிலும் அப்படித்தான். அமெரிக்காவில் றொனால்ட் றீகன் அதிபராக இருந்ததிலிருந்தே பணக்காரர்களுக்கு வரிச் சலுகை ஆரம்பித்துவிட்டது. அவரின் திட்டத்தின் இன்னொரு முக்கிய அம்சம் பொருளாதாரத்தின் இரு அடிப்படைத் தூண்களான விநியோகம் மற்றும் தேவை ஆகியவற்றில், 'சப்ளை' என்று அழைக்கப்படும் விநியோக முறைக்கு மிக அதிகமான சலுகைகளை அளிக்க ஆரம்பித்தார். அதேசமயம், ஏழைகளுக்கு, நடுத்தர மக்களுக்கு அரசு அளிக்கும் சமூக பாதுகாப்புத் திட்டங்கள் மற்றும் சேவைகள், காப்பீடுகளைக் குறைக்க ஆரம்பித்தார். இதை, அப்படியே பின்பற்றினார் புஷ்.

ஆனால், இவர்களும் அமெரிக்காவின் கொள்கை வகுப்பாளர்களும் கணிக்கத் தவறிய அம்சம்தான் பெரும் பிரச்னைக்குக் காரணமாக இருந்திருக்கிறது. ஏழை மற்றும் நடுத்தர மக்களுக்கு ஆசைகாட்டுவது எளிது. அவர்களும் அதன்படி நடப்பார்கள். ஆனால், அதைப் பின்பற்றி பயணம் செய்யும் இவர்கள், அதைத் தொடர்வதற்கான செலவு கட்டுபடியாகாமல் போனால் அங்கேயே ஸ்தம்பித்துவிடுவார்கள்; அல்லது, தங்களது பழைய வாழ்க்கைக்கே திரும்பிச் செல்வார்கள். ஆனால், அவர்களை அந்தக் கனவுப் பாதைக்கு அழைத்துச்சென்ற பெரு நிறுவனங்கள், அதற்காக செய்த செலவுகளைக்கூட திரும்பப்பெற முடியாது திகைத்துநின்று திவாலாகும். இதுதான் அமெரிக்காவில் நிகழ்ந்தது.

இதன் பின்னணியைச் சுருக்கமாகப் பார்க்கலாம். 2001இல் புஷ் முதன் முதலாக ஆட்சிக்குவந்தார். அப்போது நாட்டில் பொருளாதார தேக்கம் இருந்தது. அதே ஆண்டில்தான் நியூ யோர்க்கின் இரட்டைக் கோபுரம் தாக்கி அழிக்கப்பட்டது. மக்கள் மத்தியில் பொருளாதார பீதி மற்றும் பாதுகாப்புப் பீதி ஆகியவற்றால் பெரும் கலக்கம், அவநம்பிக்கை ஆகியவை தோன்றின. முதலாளித்துவ பாணியில் அதாவது, 'பணம் ஆடம்பரம்தான்; அனைத்து கஷ்டங்களுக்கும் நிவாரணி' என்ற முறையில், புஷ்ஷும் அவரது ஆலோசகர்களும் நிலைமையைச் சரிசெய்ய ஆரம்பித்தனர். அமெரிக்க பெடரல் வங்கி, நாட்டின் பிற வங்கிகளுக்கு வட்டி விகிதத்தை 6.5 சதவீதத்திலிருந்து ஒரே ஆண்டில் 1.75 சதவீதமாக குறைத்தது. இதனால், வங்கியிலிருந்து கடன் பெறுவதும், வங்கிகளுக்குக் கடன் அளிப்பதும் மிகவும் சுலபமாக ஆகிப் போனது. இந்த வட்டி வீதக் குறைப்புக்குப் பின், இதைப் பயன்படுத்தி 2002இல் கணக்குகளில் மோசடிசெய்து சில பெரு நிறுவனங்கள் அதிகமாக சம்பாதித்தன. இதையடுத்து வட்டி விகிதம் மேலும் குறைக்கப்பட்டு ஒரு வீதமாக ஆனது. உலகில் எந்த நாட்டிலும் இல்லாத அளவுக்கு ஒரே ஆண்டில் வட்டி விகிதம் அந்நாட்டு அரசினாலேயே குறைக்கப்பட்டது. இதனைப் பயன்படுத்திக் கொண்டு, வீட்டுக் கடன் அளிக்கும் நிறுவனங்கள் தங்களது சூதாட்டத்தை ஆரம்பித்தன.

உலக பொருளதார வீழ்ச்சியின் ஆரம்பம் மிக ஆடம்பரமாக, சந்தோஷமாகவே இருந்தது. திடீரென்று வீட்டுக் கடன்கள் கூவிக்கூவி விற்கப்பட்டன. விளம்பரங்கள்மூலம் அனைவருக்கும் 'வீடு மோகம்' உருவாக்கப்பட்டது. மிகக்குறைந்த வட்டி; அதைவிட அதிரடியான சலுகைத் திட்டங்கள் ஆகியவற்றால் மக்களின் கவனம் வீட்டின்மேல் திரும்பியது. 2002 இறுதியிலிருந்து அமெரிக்க மாநிலங்கள் பலவற்றில் வீட்டின்

மதிப்புகள் உயரத் தொடங்கின. இதில் முதலீடு செய்வது, வேறு எந்த முதலீட்டையும்விட லாபகரமாகவே இருந்ததால், லட்சக்கணக்கானவர்கள் இதில் ஈர்க்கப்பட்டார்கள். சாதாரண சிறு நிறுவனங்களிலிருந்து அமெரிக்க அரசின் மாபெரும் பெடரல் வங்கிவரை தங்களுக்கான 'பங்கு' கோரி பெரும் போட்டியில் இறங்கினர். இவர்களின் இலக்கு முழுவதும் மிகச் சாதாரண மக்கள். 'நான் அதிக சலுகை தருகிறேன்'; 'இல்லை, இதுதான் உங்களுக்கு லாபம்', 'மிகக் குறைவான தகுதி இருந்தாலே போதும்' என்றெல்லாம் சொல்லப்பட்டன. வலுவான பின்னணியோ, கடனைத் திருப்பிச் செலுத்தும் திறனோ இல்லாதவர்களும் கூட மிக எளிதாக வீட்டுக் கடனைப் பெற்றனர். கடன் பெறுவதற்கு போலி ஆவணங்களை எப்படித் தயார்செய்வது என்பதைக்கூட வாடிக்கையாளர்களுக்குக் கடன் வழங்கும் நிறுவனங்கள் சொல்லிக்கொடுத்தன.

"ஏன் இப்படிச் செய்கிறார்கள்; பைத்தியம் பிடித்துவிட்டதா?" என்று கேட்கத் தோன்றும். கடன் வழங்கிய பெரு நிறுவனங்கள் அந்த 'அபாயத்தை' தாங்கள் நேரடியாக எடுத்துக்கொள்ளவில்லை. இதை, இடைநிலையிலுள்ள மற்றைய நிதி அமைப்புகள்மீது சுமத்தின. இந்த நிறுவனங்கள் 'ஏஜென்சி' போலவே செயல்பட்டன. யாரோ கொடுப்பதை யாருக்கோ வாங்கிக் கொடுத்தால் நடுவில் லாபம் இவர்களுக்கு.

இதைப் பார்த்துக்கொண்டிருந்த அமெரிக்க பங்குச் சந்தை ஜாம்பவான்களான 'வோல் ஸ்றீற்' மேதாவிகள் புது யோசனையைச் செயல்படுத்தினர். கடன் வழங்கும் நிறுவனங்கள், தாங்கள் கொடுத்த கடன்களை முதலீடுசெய்த பணமாகக் கருதி, அதற்கு ஈடாக பங்குப் பத்திரம் வெளியிடலாம். அதனை 'வோல்ஸ்றீற்' பங்குகளாக அங்கீகரிக்கும் என்று தெரிவித்தனர். இந்த பிணை உறுதியை நிதி நிறுவனங்களான 'ஹெட்ஜ் பண்ட்', 'மியூச்சுவல் பண்ட்', தனிநபர் முதலீட்டு நிறுவனங்கள் என்பன போட்டிபோட்டு வாங்கின. அமெரிக்காவில் உள்ள பலபெரும் முதலீட்டு வங்கிகள் இவற்றை மொத்தமாக வாங்கி, கூடுதல் விலையில் மற்றைய நிதி நிறுவனங்களுக்கு விற்றன. இதை, உலகம் முழுவதும் உள்ள பல நிதி நிறுவனங்களுடன் தனிநபர்களும் வாங்கினர். 'அவரே செய்கையில், நான்செய்தால் என்ன?' என்ற இந்தக் கணக்குத்தான் உச்சியில் இருந்து உள்ளங்கால் வரையும் இருந்தது.

இந்த 'ஆட்டம்' நீடிக்கவில்லை; ஏன்? இத்தனை ஆட்டமும் யாரை நம்பி? ஏழை மற்றும் நடுத்தர மக்களை நம்பித்தான். ஏறத்தாள இருபது லட்சம் பேருக்கு, அவர்களது தகுதிக்கு மீறிய கடன்கள் அளிக்கப்பட்டன. கடன் கொடுக்கும்போதே இப்படி நடக்கக் கூடும் என்பது கடன் வழங்கிய அமைப்புகளுக்குத் தெரியும். ஆனால், 'நான் இந்த நபரை விட்டால், எனது போட்டிக்காரன் பிடித்துக்கொள்வான்' என்ற மனப்பாங்குதான் அவர்களை உந்தித் தள்ளியது. அதுமட்டுமன்றி, கடன் வழங்கும் பெரு நிறுவனங்கள், அதை வாங்கும் ஏஜன்ட் நிறுவனங்கள் ஆகிய அனைத்தும் தாம் மற்றையவர்களால் பாதிக்கப்படுகிறோம் என்றே எண்ணின. இதனால், யாரும் எதைப்பற்றியுமே கவலைப்படவில்லை. ஆனால், கடன் வாங்கிய வீட்டுச் சொந்தக்காரர்கள் ஓரிரு தவணைகளின் பின்னர் 'எம்மால் முடியவில்லையே' என்று உட்கார்ந்து கொண்டனர். ஆசைகாட்டி அழைத்து வரப்பட்ட அவர்கள், தங்களது பழைய நிலைக்கு மீண்டும் செல்ல தயாராகவே இருந்தனர்.

இவர்கள் இவ்வாறு செலுத்தமுடியாது தவித்ததற்கும் காரணம் இருக்கிறது. ஆரம்பத்தில் 'குறைந்த வட்டி' என்று தனி நபர்களைத் தங்கள் வலையில் விழவைத்த நிதி நிறுவனங்கள், அந்த வட்டி 'மாறும் வட்டி' என்பதை இலேசாகக் கோடிட்டுக் காட்டின. இந்த 'மாறும் வட்டி' தனது முகத்தைக் காட்டியது. கனவுலகத்தை நம்பிக் களத்தில் இறங்கிய கடனாளிகள் இதனால் திக்குமுக்காடிப்போனார்கள். 2002இல் அரங்கேறத் தொடங்கிய மாயாஜாலக் காட்சியின் நிஜ முகம் 2005இல் அம்பலமாயிற்று. கடனளிக்கும் நிறுவனங்கள் திகைத்துப்போய், கடனாளிகளுக்குப் புதிய சலுகைகளை அறிவித்தன. அதாவது, அவர்கள் அளிக்கவேண்டிய கடன், அதன் பின்னணியான சொத்து ஆகியவற்றை புதிய அடமானம் அதாவது, மறு அடமானம் வைக்கவும், வட்டியை ஓரளவு குறைக்கவும் வகைசெய்தனர்.

ஆனால், நிலைமை அதற்குள் கைநழுவிப் போயிருந்தது. எனவே, சரிவு ஆரம்பித்தது. முதலில் பங்குப் பத்திரங்கள் வெற்றுக் காகிதங்கள் ஆயின. அவற்றை 'வாங்கி விற்ற' நிதி நிறுவனங்கள், மற்றும் பெரு வங்கிகள் பெரும் நஷ்டத்துக்கு உள்ளாயின. இதில் முதலிட்டவர்களைப் பற்றிச் சொல்லவேண்டியதில்லை. எங்கு பார்த்தாலும் நஷ்டம்.. நஷ்டம்.. மேலும் நஷ்டம். வீட்டு மதிப்பு குறைந்துகொண்டே சென்றது. மிகப் பெரிய அளவில் முதலீடு செய்து தொகுப்பு தொடர் வீடுகள், அடுக்கு வீடுகளைக் கட்டிய நிறுவனங்கள் அவற்றை வாங்குவதற்கு ஆட்களின்றித் தத்தளித்




தன. மண்மனைத் தொழில் அதலபாதாளத்தில் வீழ்ந்தது. இதில் வீழ்ந்த ஏகப்பட்ட நிறுவனங்கள் நாளேடுகளில் கதையாகின்றன.

பெரும் அதிர்ச்சிக்குள்ளான ஏ.ஐ.ஜி. நிறுவனத்தைப் பார்த்தால், இதன் சொத்தின் மொத்த மதிப்பு ஒரு ட்ரில்லியன் டொலர்கள். வருட வருமானம் 100 பில்லியன் டொலர்களுக்கு மேலாகும். காப்புறுதி நிறுவனம் ஒரு காப்புறுதியை வழங்குவதற்கு முன்னர், அந்த நபர் அதற்குத் தகுதியானவரா என்பதை உறுதிசெய்தே வழங்கும். ஆனால், இதனைப்பற்றிச் சிந்திக்காமல் ஐ.ஜி.ஏ. நிறுவனம் செய்த காரியம் அதனை வீழ்த்தியது. கடனை திருப்பிச் செலுத்த இயலாதவர்களுக்கு வழங்கும் கடனை sub prime என்பார்கள். இதன் அடிப்படையில் கொடுக்கப் படும் கடன்களுக்கு வங்கிகள் அளிக்கும் 'பொறுப்பு' ஆபத்தை ஏற்படுத்தக்கூடியது. இந்தப் 'பொறுப்புக்கு' காப்புறுதி அளித்தது ஐ.ஜி.ஏ. நிறுவனம். சீட்டுக்கட்டில் கட்டப்பட்ட மாளிகை கீழே வீழ்ந்திடச் சிறு காற்றுப் போதும்! இதுதான் அமெரிக்காவில் நடந்தது.

அமெரிக்காவில் ஏற்பட்ட இந் நெருக்கடியால் நிதி நிறுவனங்கள் கலங்கிப்போயின. இதனால் பணப் புழக்கம் முடங்கி, பொருளாதார மந்தநிலை உருவாயிற்று. புதிய திட்டங்கள், புதிய வேலைவாய்ப்புகள் என்பன உருவாகவில்லை. ஆள் குறைப்பு மேற்கொள்ளப்படலாயிற்று. அமெரிக்காவை, அதன் பணப் புழக்கத்தை, அதிலிருந்து கிடைக்கும் வர்த்தகத்தை, வேலைவாய்ப்பை நம்பி இயங்கிவந்த பல வெளிநாட்டு நிறுவனங்கள் அடிவாங்கத் தொடங்கின. அமெரிக்காவில் மையம்கொண்ட பொருளாதாரப் புயல், கரைகடந்து உலகை உலுக்கியது.

இந்தப் பிரச்னைக்கு தீர்வுகாண்பது தனது தலையாய பணியாக இருக்கும் என்று வாக்களித்த ஒபாமா என்ன செய்யப்போகிறார் என்று உலகமே பார்த்துக்கொண்டிருக்கிறது ■

# அச்சுறுத்தும் மத்திய கிழக்கு வருமானம்

பைசல் சமத் (ஐபிஎஸ் செய்தி)

**வீட்டுப் பணிப் பெண்களுக்கான வேலைவாய்ப்பு 50 வீதத்தால் குறையும்?**



இலங்கையின் வெளிநாட்டுச் செலாவணியை ஈட்டுவதில் முதன்மையிடம் வகிக்கும் மத்திய கிழக்கு நாடுகளில் தொழில் பார்க்கும் தொழிலாளர் அனுப்பும் பணம், உலக நிதி நெருக்கடியின் விளைவாக தடைப்பட்டால், நாட்டின் பொருளாதாரம் மிக மோசமாகப் பாதிப்படையும் என்று ஆய்வாளர்கள் தெரிவிக்கின்றனர்.

மத்திய கிழக்கில் வீழ்ச்சியுறும் எண்ணெய் வருமானம், பல்லாயிரக்கணக்கான இலங்கையர்கள் பணிபுரியும் நிர்மாண துறையையும், கட்டட விற்பனையையும் ஏற்கனவே பாதிப்புறச்செய்திருக்கிறது. டுபாயில் மாத்திரம் குறைந்தது 25 ஆயிரத்திலிருந்து 30 ஆயிரம் வரையிலான இலங்கையர்கள் நிர்மாண வேலைகளில் பணிபுரிகிறார்கள். இவர்கள் தமது வேலைகளை இழக்கவோ அல்லது இவர்களுக்கு வழங்கப்படும் சம்பளங்கள் தாமதமாகவோ அல்லது சம்பளத்தை இவர்கள் முற்றாக இழக்கவுமோ சாத்தியங்கள் பெருமளவில் தென்படுவதாக, இலங்கையில் வெளிநாட்டு வேலைவாய்ப்பு முகவர்கள் தெரிவிக்கிறார்கள்.

வீட்டுப் பணிப்பெண்களுக்கான வேலைவாய்ப்பு ஏற்கனவே 15 - 20 வீதம் வீழ்ச்சியடைந்துவிட்டதாக தெரிவிக்கப்படுகிறது. அடுத்துவரும் மாதங்களில் வேலைகளுக்கான தேவை 50 வீதத்தால் குறையும் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது. இது, இலங்கையில் இயங்கும் வேலைவாய்ப்பு முகவர் நிறுவனங்களிலும் பாதிப்பை ஏற்படுத்துகிறது. மிகப் பெரிய நிறுவனங்களைத் தவிர, ஏனையவற்றை மூடவேண்டிய நிலை நிச்சயமாக ஏற்படும் என்று கூறப்படுகிறது.

மத்திய கிழக்கு நாடுகளில் பணிபுரியும் 10 லட்சத்துக்கும் மேற்பட்ட இலங்கையர்களில் 60 வீதமானோர் வறிய, கிராமப்புறப் பெண்கள். இவர்கள் தமது உழைப்பு முழுமையையும் தமது குடும்பங்களின் தேவைகளுக்காக இலங்கைக்கு அனுப்புகிறார்கள். இப்படி, மத்திய கிழக்கிலிருந்து அனுப்பப்படும் தொகை 2008ஆம் ஆண்டில் 3 பில்லியன் அமெரிக்க டொலர்களை எட்டலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இது, 2007ஆம் ஆண்டு பெற்ற 2.5 பில்லியன் டொலர்களைவிட கூடுதலானது. நாட்டின் வர்த்தகத்தில் துண்டுவிழும் தொகையினது 70 சதவீதத்தை இது ஈடுசெய்கிறது.

இலங்கையின் 20 மில்லியன் சனத்தொகையில், கால்வாசியினர் நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ இந்தப் பணத்தில் தங்கியுள்ளனர். எனவே, இந்த பண வருமானத்தின் வீழ்ச்சி, பொருளாதாரத்தில் ஒரு பாதிப்பை ஏற்படுத்தவேசெய்யும்.

இலங்கையின் ஆடை ஏற்றுமதித் துறையும் வருடமொன்றுக்கு 3 மில்லியன் டொலர்களை கொணர்கிறது. இதில், ஏறத்தாழ அரைவாசித் தொகை துணிகளினதும் உபகரணங்களினதும் இறக்குமதியில் மீள்முதலீடு செய்யப்படுகிறது. ஏற்றுமதிப் பொருள்களான ரப்பர், தேயிலையின் விலை வீழ்ச்சிடைந்தாலும், பிரதான வருமானத்தை அவை ஈட்டுகின்றன.

ஆக, மத்திய கிழக்கு வருமானம் இலங்கையில் ஏற்படுத்தவல்ல இந்த நெருக்கடி இன்னமும் உறுதியாகவில்லை. நிலைமைபற்றி தீர்க்கமாக ஆராய மத்திய கிழக்கு நாடுகளிலுள்ள இலங்கையின் தூதரகங்களுக்கு கோரிக்கை விடுக்கப்பட்டிருக்கிறது.

இதேவேளை, உலக நெருக்கடியிலும், பணவீக்கம் குறைந்து, இலங்கையின் பொருளாதாரம் மேம்படுவதாக மத்திய வங்கி தெரிவித்திருப்பதை 'சண்டே ரைம்ஸ்' பத்திரிகை கேலிசெய்கிறது.

தற்போதைய உலக பொருளாதார நெருக்கடி 12 - 18 மாதங்கள் நீடிக்கலாம் என்று தெரிவித்துள்ள ஆசிய அபிவிருத்தி வங்கி, அங்கத்துவ நாடுகளில் இதன் தாக்கம்பற்றிய மதிப்பீடுகள் மேற்கொள்ளப்பட்டுவருவதாக தெரிவித்துள்ளது. இலங்கை, பிலிப்பைன், நேபாளம் போன்ற நாடுகளில் வெளிநாட்டு உழைப்பு வருமானம் வீழ்ச்சியடைவது சாத்தியமே என்றும் அது தெரிவித்துள்ளது.

தொழில் வாய்ப்பு சந்தையில் ஏற்பட்டுள்ள ஸ்திரமற்றநிலை மாத்திரமன்றி, பிரதான ஏற்றுமதிப் பொருள்களான தேயிலை, ரப்பர் போன்றனவும் உலக சந்தையில் பாரிய விலை வீழ்ச்சியை எதிர்கொள்கின்றன.

தமது ஏற்றுமதி பொருள்களை மலிவானதாக்குவதற்கு ஏதுவாக உள்ளூர் நாணயத்தின் பெறுமதியைக் குறைக்கச் செய்வதற்கு ஏற்றுமதியாளர்கள் அரசுக்கு அழுத்தத்தைக் கொடுக்கிறார்கள். சீனாவும் இந்தியாவும் தமது எற்றுமதியை மலிவானதாக்க ஏற்கனவே உள்ளூர் நாணயத்தின் பெறுமதியைக் குறைத்துள்ளன. இறக்குமதிச் செலவினத்தைக் குறைப்பதற்கு வாய்ப்பாக உள்ளூர் நாணயத்தின் பெறுமதி செயற்கையாக கூட்டப்பட்டுள்ளது.

இலங்கை அரசுக்குள்ள ஒரேயொரு சாதகமான உலக நிலைமை, எண்ணெய் விலை வீழ்ச்சியால் விடுதலைப் புலிகளுக்கு எதிரான யுத்த செலவினம் சற்று குறையலாம் என்பதே. ■

சுதந்திரமாக உங்கள் வாழ்க்கைப் பயணத்தை மேற்கொள்ள
எமது சேவைகள் உங்களுக்கு வழிகாட்டும்!

Personal & Corporate Advice
Retirement planning
Mortgage arrangement service and Financial re-engineering
Life assurance and protection planning
Mortgage Conveyancing
Investment planning
Key event advisory service

## Debt Problems?

call us for **confidential** and **expert** advice



**Free Consultation**
to solve your financial problems

# Mortgage 4US

**Independent Financial Advisers**

**Karthigesu Sivanesan** MBA BSc Eng FPC
Independent Financial Adviser
**Mobile:** 07775 578 552

**Tim Drakes** MSci CEFA CEMAP
Independent Financial Adviser
**Mobile:** 07515 891 295

**020 7386 0924**
**www.mortgage4usltd.com**
6 Barton Road, London W14 9HD

FSA.

Mortgage 4US Ltd (FSA No.478944) is an appointed representative of Unleash Advice Partnership Ltd (FSA No. 473157) which is authorised and regulated by the Financial Service Authority.



ஜி. என். பாலசுப்பிரமணியம் (பாட்டு)
ரி. சௌடையா (வயலின்), பழநி சுப்பிரமணியபிள்ளை (மிருதங்கம்)

## சென்னையில் இசைவிழா

# அன்றும் இன்றும்

## பைரவியில் கேட்டுப் பழகிப்போனதால் சாவேரியில் ரசிக்கமுடியவில்லையே!

**பிங்காட்சன்**

வழக்கம்போலவே இந்த ஆண்டும் சென்னை நகரில் இசைவிழா கோலாகலமாகநடந்துகொண்டு இருக்கிறது. டிசம்பர் 14ஆம் தேதி தொடங்கி ஜனவரி இரண்டாம் தேதிவரை இசைவிழாக் காலமென்று கூறலாமெனினும், சில அமைப்புக்கள் டிசம்பர் முதல் வாரத்திலேயே தமது நிகழ்ச்சிகளைத் தொடங்கிவிடுகின்றன. சில சபாக்கள் பெப்ரவரி மாதம் வரைகூட விழாவை நீட்டித்து, நாட்டிய விழாவாக மாற்றிக் கொள்கின்றன.

சென்னை நகரெங்கும் இசைமணம் (சூடான வடை, தோசை, பஜ்ஜி, பகோடா மணத்துடன்) கமழ்கிறது.

இசைக் கச்சேரி, விளக்க விரிவுரை (lecture demonstration), பண் ஆராய்ச்சி என்று ஒரு நாளில் குறைந்தது எண்பது நிகழ்ச்சிகள்.

வெளிநாட்டுத் தமிழர்கள், வெள்ளைக்காரர்கள், பட்டுப்புடவை மாமிகள், தலைநரைத்த உள்நாட்டு முதியவர்கள் என்று பலர் தென்படுகிறார்கள்.

பள்ளிகள், கல்யாண மண்டபங்கள் உள்பட, பல இடங்களில் கச்சேரிகள் களைகட்டுகின்றன. ஓர் அரங்கிலிருந்து இன்னோர் அரங்குக்குச் செல்ல இலவச பேருந்து வசதிவேறு!

சுமார் 25 ஆண்டுகளுக்கு முன்புவரை, இத்தனை நிகழ்ச்சிகள் - கோலாகல கொண்டாட்டங்கள் இருந்ததில்லை.

சென்னை, சங்கீத வித்வத் சபை எனப்படும் Music Academy, தமிழ் இசைச் சங்கம், இந்தியன் பைன் ஆர்ட்ஸ் சொசைற்றி என்ற மூன்றே சபாக்கள், ஆண்டுக்கு ஒருமுறை இசைவிழா நடத்தின.

மியூக் அக்கடெமியில் நிபுணர் குழு, கூடுதலாக இசை ஆராய்ச்சியில் ஈடுபடுவதும், ஆராய்ச்சிக் கட்டுரைகளை வெளியிடுவதும் வழக்கம்.

தமிழிசைச் சங்கத்தில் பண் ஆராய்ச்சி நடைபெறும்; அவ்வளவுதான்.

பின்னர், இந்த வரிசையில் தியாகராயநகரில் உள்ள கிருஷ்ணகான சபாவும் சேர்ந்துகொண்டது.

இந்த இசைவிழா காலத்தில், விருதுகள் வழங்கிக் கலைஞர்களைக் கௌரவிப்பதும் வழக்கம். மியூசிக் அக்கடெமி, தமிழிசைச் சங்கம் ஆகிய அமைப்புக்களால் வழங்கப்படும் பட்டங்கள் - விருதுகள் மிகவும் பெருமைக்குரியவையாகக் கருதப்பட்டன. மியூக் அக்கடெமியின் 'சங்கீத கலாநிதி' விருதுக்காக ஏங்கிய கலைஞர்கள், அந்த விருதுபெறுவதைப் பெறற்கரிய பேறாகக் கருதினார்கள்.

ஆனால், உயர்தட்டு மக்களுக்காக மட்டுமே உருவானதுபோலத் தோற்றம் அளிக்கும் மியூசிக் அக்கடெமி, பிராமணர்களின் பாசறையாகவே இருந்தது என்றும், மதுரை சோமசுந்தரம் போன்ற ஒப்பற்ற கலைஞர்களைப் புறக்கணித்தது என்றும் பலர் சுட்டிக்காட்டுகிறார்கள். இந்த அமைப்பு எவரையுமே உரிய மரியாதையுடன் நடத்தவில்லை என்பது வெளிப்படையாகவே தெரிந்தது.

'சங்கீத கலாநிதி' விருது வழங்குவதிலும் விருப்பு வெறுப்புகள் விளையாடின என்பார்கள்.

ஒப்பற்ற கலைஞர்களான எம். டி. இராமநாதன், புல்லாங்குழல் மேதை ரி. ஆர். மகாலிங்கம், வீணை வித்தகர் எஸ். பாலசந்தர், இசைமேதை லால்குடி ஜெயராமன், மதுரை சோமசுந்தரம் போன்றோருக்கு ஏன் 'சங்கீத கலாநிதி' விருது வழங்கப்படவில்லை என்பது இன்னமுமே புரியாத புதிர்.

சரி, இன்றைய நிலை என்ன? சங்கீத கலாநிதி விருதைக் கையில் வைத்துக்கொண்டு, விருதுபெற அருகதையுள்ளவர் எங்காவது தென்படுகிறாரா என்று அக்கடெமி தேடவேண்டியிருக்கிறது.

இம்முறை விருதுபெற்ற ஏ. கே. சி. நடராஜன் ஒப்பற்ற கிளாரினட் கலைஞர்; வயதாகிவிட்டது. முன்புபோல, கடினமான அந்த வாத்தியத்தில் அவரால் பரிமளிக்க முடியவில்லை. இந்த நேரத்திலா விருது?

இசைவிழா நிகழ்ச்சிகள் எல்லாமே சலிப்பூட்டும் துவக்க விழாக்களுடன் தொடங்குகின்றன. இசை என்றால் 'என்ன விலை?' என்று கேட்கும் பிரமுகர் எவராவது தலைமைவகித்து, சங்கீத வளர்ச்சிக்குத் தன்னாலான யோசனையைக் கூறுவார். இந்த ஆண்டு ஒரு துவக்க விழாவில் ஒரு பிரமுகர்; "கச்சேரி கேட்க வருபவர்களில் பெரும்பாலானவர்கள் வயதான கிழவர்கள். அவர்களுக்கு 'ப்ளாடர் கொன்றோல்' இல்லை. அதனால்தான், தனி ஆவர்த்தனத்தின்போது எழுந்து சென்றுவிடுகிறார்கள். எனவே, இசைக் கச்சேரிகளில் 'இடைவேளை' வேண்டும்."

இதைக் கேட்ட மிருதங்க வித்வான், "ஏனையா,

நாங்களும்தான் இரண்டரை மணிநேரம் ஓரிடத்தில் உட்கார்ந்து வாசிக்கிறோம்; எங்களுக்கு மட்டும் 'ப்ளாடர் கொன்றோல்' இருக்கவேண்டுமா?" என்றார். (அந்தக் காலத்தில் பாலமுரளி கிருஷ்ணா தனது கச்சேரிகளில் இடைவேளை விடுவார் - 'விஸ்ராந்தி' என்று அறிவித்துவிட்டு.)

மியூசிக் அக்கடெமி நிர்வாகிகள் வரவேற்புரை நிகழ்த்தும்போது ஆங்கிலத்தில்தான் பேசுவார்கள். சில ஆண்டுகளுக்கு முன்னர் ஒருதடவை தட்டுத்தடுமாறி வரவேற்புரையை தமிழில் நிகழ்த்தினார்கள். காரணம், அன்றைய தினம் முதலமைச்சர் கருணாநிதி விழாவுக்கு தலைமைவகித்தார்.

நகரெங்கும் விழா நடத்தும் சபாக்கள் அனைத்துமே இப்பொழுது 'விளக்க விரிவுரை' நிகழ்த்துகின்றன; எவராவது ஒரு கலைஞருக்குப் பட்டமளிக்கின்றன. பட்டங்களைப் பெறுவதற்கான கலைஞர்களைத் தேடிக் கண்டுபிடிக்கின்றன.

புதிய புதிய பெயர்களுடன் விருதுகளையும் தேர்ந்தெடுக்கவேண்டியிருக்கிறது. 'சங்கீத கலா சாரதி', 'சங்கீத கலா நிபுண', 'சங்கீத சூடாமணி', 'சங்கீத கலா சிகாமணி' என்று விருதுகள் சமஸ்கிருதத்திலேயே இருக்கவேண்டியது நியதி! தப்பித் தவறி தமிழில் இருந்துவிடக்கூடாது! எனினும், தமிழிசைச் சங்கம் 'இசைப் பேரறிஞர்' என்ற தமிழ் விருதுதான் அளிக்கிறது.

தொலைக்காட்சி நிறுவனங்களும் இந்த விழாவில் கலந்துகொண்டுவிட்டன. 'மார்கழி மஹோத்சவம்' என்ற பெயரில் ஒரு தொடர்; 'சென்னையில் திருவையாறு' என்று இன்னொரு தொடர். அரங்கம் நிரம்புகிறது. ரி.வியில் முகம் காட்டலாமே!

மதியக் கச்சேரிகளில் பெரும்பாலான அரங்குகளில் மொத்தம் இருபதே பார்வையாளர்கள். எல்லோருமே தலை நரைத்தவர்கள் - மருந்துக்குக்கூட இளைஞர்கள் காணப்படவில்லை.

ஒருவர் அனந்த சயனமாக ஆழ்ந்த நித்திரையில் மூழ்கியிருக்க, இன்னொருவர் கையில் கொண்டுவந்த அன்றைய பத்திரிகையில் மூழ்கியிருந்தார். மேடையில் இளம் கலைஞர் அற்புதமாகப் பாடிக்கொண்டிருந்தார்.

சுதா ரகுநாதன், அருணா சாயிராம், பம்பாய் ஜெயஸ்ரீ, நித்யஸ்ரீ, ரி. எம் கிருஷ்ணா, சஞ்சய் சுப்பிரமணியம் ஆகியோருக்கு மட்டும் கூட்டம் வருகிறது.

செம்மங்குடி, முசிரி, மதுரை மணி ஐயர், ஜி. என். பாலசுப்பிரமணியம், மகாராஜபுரம் விஸ்வநாதையர் போன்றோரின் பாட்டைக் கேட்டபோது ஏற்பட்ட நிறைவு ஏனோ இப்பொழுது அரிதாகிவிட்டது.

ஆண் பாடகர்களில் சஞ்சய் சுப்பிரமணியம், ரி. எம். கிருஷ்ணா முன்னணியில் இருக்கிறார்கள். ரி. எம். கிருஷ்ணாவிடம் குரல்வளம், ஞானம் எல்லாமே இருந்தாலும், சில நேரங்களில் பாட்டு பெரும் இரைச்சலாகக் கேட்கிறது.



சுதா ரகுநாதன்



ரி. எம். கிருஷ்ணா



பம்பாய் ஜெயஸ்ரீ



சஞ்சய் சுப்பிரமணியம்

சஞ்சய் சுப்பிரமணியம் அற்புதமாகப் பாடுகிறார். குரல்வளம் - கற்பனை - பாடாந்தரம் ஆகியவை நிரம்பி வழிகின்றன. ஆனாலும், ஆணவக்காரர் என்று பெயரெடுத்துவிட்டார்.

பெண் பாடகிகளில் எம். எஸ். சுப்புலக்ஷ்மி, டி. கே. பட்டம்மாள், எம். எல். வசந்தகுமாரி என்ற மூவரின் இடத்தை எவராலும் எட்டமுடியவில்லை.

சுதா ரகுநாதன் மிகவும் பிரபலமாகிவிட்டார். இனிய குரல்; ஆனால், இசை இதயத்திலிருந்து அல்லவா வரவேண்டும்!

அருணா சாயிராம் - 'ஹவுஸ் புல்' ரசிகர்கள். பிருந்தா - முக்தா சிஷ்யை. எல்லையற்ற ஞானத்துடன் அவர் பாடிவந்தபோது கேட்பார் இல்லை.

பாணியை மாற்றிக்கொண்டார்; அரங்குகளோ நிரம்பி வழிகின்றன. அதற்கு அவர் கொடுத்த விலை, இன்று 'ஜிமிக்' கலைஞராக மாறிவிட்டார்!

நல்ல எதிர்பார்ப்புடன் தொடங்கிய பல கலைஞர்கள் ஏமாற்றமளிக்கிறார்கள். அன்று, மக்களின் ரசனைப்படி - மரபு மாறாமல் பாடினார்கள். இன்று, இளைஞர்கள்- இதுவரைக்கும் கேட்டிராத புதிய புதிய பாடல்களைப் பாடுவதையே தங்கள் திறமையின் வெளிப்பாடாகக் கருதுகிறார்கள்; ரசிக்கத்தான் முடியவில்லை.

"யாரோ இவர் யாரோ..." என்ற அருணாசலக் கவிராயரின் பாட்டு - பைரவியில் பாடப்பட்டு, அழியாப் புகழ்பெற்றுவிட்டது. அன்று, பாடகி சௌம்யா அந்த ராமநாடகக் கீர்த்தனையை சாவேரி ராகத்தில் பாடினார்.

அருணாசலக் கவிராயர் அந்த ராகத்தில்தான் அந்தப் பாட்டை அமைத்திருந்தாராம்.

இருக்கட்டுமே; வழக்கமான பைரவியில் கேட்டுப் பழகிப்போனதால், சாவேரியில் ரசிக்கமுடியவில்லையே!

பத்திரிகைகளும் இசைவிழா பற்றி எழுதுகின்றன. விமர்சகர்கள் சுப்புடுவையும் கல்கியையும் 'காப்பி'யடித்து எழுதித் தோற்றுக்கொண்டிருக்கிறார்கள். அவர்களுடைய இசையறிவும் எழுத்துத் திறமையும் இவர்களிடம் இல்லை.

ஒரு பிரபலமான வார இதழில் மல்லாடி சகோதரர்கள் பற்றிய விமர்சனம் இது:

"நீங்கள் ஏன் தமிழில் பாடுவதில்லை; தமிழ்ப் பாட்டுக்கள் பாடுவதில்லை?" புளித்துப்போன இந்தக் கேள்வியை விமர்சகர் கேட்கிறார்.

"எமக்குத் தமிழ்ப் பாடல்கள் பாடமில்லை" என்று பதிலளித்த மல்லாடி சகோதரர்களைக் கடுமையாகச் சாடுகிறார் விமர்சகர்.

மல்லாடி சகோதரர்கள் ஆந்திர மாநிலத்தைச் சேர்ந்தவர்கள்; தாய்மொழி தெலுங்கு. அவர்களுக்கு தமிழ் தெரியாது.

- அவர்களிடம் கேட்கவேண்டிய கேள்வியா இது?

பண்டிட் ஜாஸ்ராய், பர்வீன் சுல்தானா ஆகியோர் தமிழ்நாடு வரும்போது, 'நீங்கள் ஏன் தமிழில் பாடுவதில்லை' என்று அவர்களிடம் கேட்கிறோமா? ■



# இசைவிழா: சில தொடக்க விழா விருதுகள்

பிரம்மகான சபா:

'கான பிரம்மம்', 'நாடக பிரம்மம்', 'நாட்டிய பிரம்மம்' விருதுகள், அருணா சாயிராம், பம்பாய் ஞானம், கே. ஜே. சரசா ஆகியோருக்கு.

நல்லி குப்புசாமி செட்டியார், நீதிபதி ஜெகதீசன்





நுங்கம்பாக்கம் கல்சரல் அக்கடெமி:

'நாடக கலா சிரோமணி', 'சங்கீத கலா சிரோமணி', 'நிருத்திய கலா சிரோமணி' விருதுகள்
தொலைக்காட்சி வரதராஜன், நித்தியஸ்ரீ மகாதேவன், ராஜேஸ்வரி சாய்நாத் ஆகியோருக்கு.
நீதிபதி பாஸ்கரன், அமைச்சர் ஜி. கே. வாசன், சுதாராணி ரகுபதி

முத்ரா:

'சிறப்பாற்றல் விருது'
ரி. என். சேஷகோபாலனுக்கு
துணைவேந்தர் இராமச்சந்திரன், திருச்சி சங்கரன்



வலையப்பட்டி நாதாலயா:

'நாதலய சிரோமணி' விருது
சுகுணா புருஷோத்தமன் (பாட்டு), ரி. கே. மூர்த்தி (மிருதங்கம்), ஏ. கே. சி. நடராஜன் (கிளாரினெட்), ஏ. கலியமூர்த்தி (தவில்) ஆகியோருக்கு.



கிருஷ்ணகான சபா:

'ஆச்சார்ய சூடாமணி', 'நிருத்திய சூடாமணி' விருதுகள்.
கிருஷ்ணகுமாரி நரேந்திரன் (பரதநாட்டியம்), ஜயந் கஸ்துவர் (கதக்) ஆகியோருக்கு.
பத்மா சுப்ரமண்யம், சி. வி. சந்திரசேகர்



மைலாப்பூர் பைன் ஆர்ட்ஸ்:

'சங்தீ கலா நிபுண' விருது
சுதா ரகுநாதனுக்கு.
கிருஷ்ணராஜா வானவராயர்



வாணிமஹால்:

'வாணி கலா சுதாகர' விருது
வரதராஜன் (அரங்கம்), ரி. வி. சங்கரநாராயணன் (இசை),
ஸ்ரீமுஷ்ணம் ராஜாராவ் (மிருதங்கம்), ஸ்ரீராம் குமார் (வயலின்),
திவ்யா கஸ்தூரி (நடனம்) ஆகியோருக்கு.
பொள்ளாச்சி மகாலிங்கம்

படங்கள் | 'கலைமாமணி' யோகா



ஸ்ரீ பார்த்தசாரதி சுவாமி சபா:

'சங்கீத கலா சாரத' விருது
நெய்வேலி சந்தானகோபாலனுக்கு.
ஏ. நடராஜன், நல்லி செட்டியார், ஆண்டவன் சுவாமிகள்



# தட்டாட்டம்

ஆயிரத்துத் தொள்ளாயிரத்து தொண்ணூற்று ஒன்பதாம் ஆண்டு 'நன்றிநவிலல்' தினத்தன்று புளோரிடா மாநில மியாமி நகரிலே இரண்டு நிகழ்வுகள் நடந்தன. ஒன்றை உலகம் முழுவதும் அறியும். மற்றையது, மூன்றுபேருக்கு மட்டும்தான் தெரியும். ஆறுவயதுக் கியூபப் பையன் ஏலியன் நகருக்குள்ளே கொண்டுவரப்பட்டபோது, இவனின் நண்பன் விடுமுறையைக் கழிக்க, ஓய்வெடுக்காத இரண்டு வருடங்களுக்குப் பிறகு மியாமியிலிருந்து நியூ ஓர்லியன்ஸ் நகருக்குப் புறப்பட்டுவந்தான்.

இருவரும் சந்தித்து ஐந்து வருடங்கள் இருக்கக்கூடும். இவன் ஹொங்கொங்கிலே இருக்கும்போது, இலங்கையிலிருந்து அமெரிக்கா போனவனை, விமான நிலையத்திலே அவசர அவசரமாக ஒரு நாள் இரவு சந்தித்தபிறகு, இப்போதுதான் சந்திக்கமுடிகின்றது. நண்பனுக்கு மனைவியை அறிமுகப்படுத்தினான் என்றாலும், அது பெயருக்குமட்டும்தான். முன்னமே மூன்று வருடங்களாக, அவளைப்பற்றி நண்பனுக்கும், நண்பனைப் பற்றி அவளுக்கும் விபரமாகச் சொல்லியிருக்கிறான். வந்த அன்றைக்கு இரு பழைய நண்பர்கள் என்ன பேசிக்கொள்வார்கள் என்பதை உங்களுக்கு நான் சொல்லத் தேவையில்லை. ஆனால், அவன் மனைவிக்கு அன்றைக்கு அவன் ஒரு பரிச்சயமில்லாத புது ஆள் மாதிரித் தெரிந்தான். மேற்றோலையுரித்துக் கொண்ட பாம்புபோல - பாதி அவனின் அதியுற்சாக நடத்தையினால், மீதி நண்பனிடமிருந்து அவனைப்பற்றித் தெரிந்துகொண்ட, இதற்குமுன் அவளறியாத சின்னச்சின்ன விடயங்களிலிருந்து... அவன் வானொலியிலே பழைய பாட்டுக்கள் போகும்போது இலயித்திருந்து கூடவே தானும் பாடி, மேசையிலே கைவிரல்களால் தாளம் தட்டக்கூடியவன் என்று அன்றைவரைக்கும் அவளுக்குத் தெரியாது. மூன்றுபேரும் இருந்து சாப்பிட்ட அன்றைய இரவினைத் தவிர மீதி நேரமெல்லாம், அவன் தனியே இருந்து 'வரலாற்று' அலைவரிசையிலே 'மேபிளவர்' கப்பலிலே அமெரிக்காவுக்கு வந்தவர்களைப்பற்றியும் காட்டு வான்கோழியினைப்பற்றியும் நித்திரை வரும்வரைக்கும் பார்த்துக் கொண்டிருந்தான். அவர்கள் எப்போது தூங்கினார்கள் என்று அவளுக்குத் தெரியாது. இடையிடையே பலத்த சிரிப்புச் சத்தங்கள் மட்டும் கொஞ்சம் அவளை அதட்டி அதக்க, திரும்பி மறுபுறம் படுத்துத் தூங்கினாள்.

மறுநாள் காலையிலே, இடையிடையே விக்கல் எடுப்பதுபோல, ஆளையாள் 'அறுத்துக்கொள்ளும்' ஒருசில கணங்களை மட்டும் கண்டுகொள்ளாது விட்டால், நண்பனும் இவனும் கொஞ்சம் நிதானத்துக்கு வந்திருந்தார்கள் என்று அவளுக்குப்பட்டது. தான் கொண்டுவந்த, அமெரிக்க காரோட்டிகள் கூட்டமைப்பொன்று அச்சிட்ட வரைபடத்தை எடுத்துவைத்துக் கொண்டு, "எங்கே போவோம்?" என்று நண்பன் கேட்டான்.

எங்கே போகவேண்டும் என்ற கேள்வி, நியூ ஓர்லியன்ஸ் மாநகரிலே கேட்பது, ஒரு மரியாதைக்கு மட்டும்தான். பிரேஞ்சுச் சதுக்கம், அல்லது மயானங்கள்; அவற்றைவிட்டால், மிகுதிக்காட்சியிடங்களான போன நூற்றாண்டுத் தோட்ட வீடுகள், முதலைச் சதுப்பு நிலங்கள், கேஜன் கிரமங்கள் எல்லாமே ஊருக்கு வெளியே கொஞ்ச நேரம் சவாரி செய்யவேண்டும். மேகமூட்டமான நேரத்திலே சரிப்படாது. 'மார்டி கிரா' கண்காட்சிக் கிராமம் மூடிக்கிடக்கும். மயானங்களின் விசேடமானது, காலமும் நிலத்துக்குமேலே கதவுவைத்து குடும்பம் குடும்பமாய் உடல் புதைக்கும் புதுமை எனச் சொல்லலாம். காப்புறுதிக்காரனுக்கும் வைத்தியசாலைகட்கும் மென்பொருளிலே தரவுத் தளம் அமைத்துக் கொடுக்கும் தொல்லையில்லாத வார இறுதிகளையுங்கூட, போன நூற்றாண்டிலே மஞ்சட்காய்ச்சல், மலேரியா, வயிற்றோட்டத்திலே போனவர்கள் பெயர்ப்பட்டியலைச் சரிபார்த்துக் கொண்டு, நிம்மதியைத் தின்னும் சம்பளமில்லாத சுகாதார வைத்திய பரிசோதகர் தொழில் பார்க்கும் உத்தேசமும் பொறுமையும் நண்பனுக்கு இல்லாததால், பிரேஞ்சு 'குவாட்டர்ஸ்' மட்டுமே போக மிஞ்சியது.

டென்னஸி வில்லியம்ஸின் 'த ஸ்ரிட் கார் நேம்ட் டிஸையர்' நாயகன் வாழ்ந்த களமாக, எலியா காஸனின் திரைப்படத்திலே மார்லன் பிரான்டோவை வைத்துச் சித்தரிக்கப்படும் 'பிரெஞ்சுக் குவாட்டர்ஸ்' பெருமை-சிறுமை வெறும் சொல்லில் அடங்காது. அதற்குக் காரணம், அதன் பிரசித்தமான நூற்றாண்டுகள் பழமைவாய்ந்த 'பேர்பன்' வீதியில் இரவுகளில் நிகழும் வாடிக்கையான வேடிக்கை விநோதங்கள் என்பது நாடறிந்த உண்மை. சாதாரணமான கரையோர முதலையாக வாலை நீட்டிச் சோம்பல் தூக்கத்தில் கிடக்கும் வீதி, இரவுப் பொழுதில், நெருப்புவைத்த அநுமார் வால். போனீர்களோ பற்றிக்கொள்ளும். (எதுவென்று விளக்கமாக இங்கே சொல்ல எனக்கு அநுமதி இல்லை என்று நினைக்கிறேன்.) இப்படி புட்டி, குட்டி,

காபரே, காபரா, ஒருபால் / இருபால், முதலை கேஜன் சான்விட்ஸ், 'போ-போய்' என்று இரவில் காலைச்சூரிய நிழலாய் கைவிரித்துப் பரவும் உலகு, பகலிலே பிரெஞ்சுக்கால உப்பரிகைகள், நடைபாதை ஓவியர்கள், விதி ஜாஸ் கலைஞர்கள், மிஸிஸிப்பி நதிக்கரை நடை, தாரைதப்பட்டை இசையோடும் தெற்கத்திய உணவோடும் ஆற்றுப்படகு உலா, ஐந்து டொலர்களுக்கு இரண்டு எகிப்திய ஆரூட சரிகைச்சட்டை அம்மணிகள், ஒற்றைச்சில் வண்டிக் கழைக் கூத்தாடிகள், 'குதிரைமேல் ஜக்ஸன்' கட்டம், சந்திக்குச் சந்தி வர்ணம் பூசிய வெள்ளிக்கிரக வாசிகள் - செவ்விந்தியர்கள் - சாத்தான்கள் ("அசையமாட்டோம், விழி அமர்த்தமாட்டோம் - அதற்காக விரித்திருக்கும் தொப்பிக் குள்ளே காற்பணமும் சுண்டங்காய்ச் சில்லறையும் இட்டுச் செல்க"), கண்ணை படங்குத் துண்டு மூடிய குதிரைகள் பூட்டிய வண்டில்களும் அவற்றின் டிரகுலா ஆடைச் சாரதிகளும், பேய் வாழும் மாளிகைகள், ஐந்து டொலர் தொடக்கம் மத்திய, மாநில வரிகளும் உள்ளடக்கி, ஆறாயிரத்து முப்பத்தி ரண்டு டொலர் வரைக்குமான நீர் வண்ண / நெய் 'டிகா' ஓவியங்கள் தொங் கும் படுக்கும் கூடங்கள். 'பத்து டொலருக்கு ஒரு கறுப்பு மூக்குத்தி, கொரியன் எழுத்தோவியர், தேவாலயத் துக்கு வாசனைத் திரவியங்கள்' பக்கம்பக்கம் குந்தி யிருக்கும் பிரெஞ்சுச் சந்தை, போய்ச்சேர 'டிராம்' வண்டி என்று விரியும். (என்னை ஆசுவாசப்படுத்திக்கொள்ள மூச்சுவிட் டுக்கொள் கிறேன்) நானே இந்த இடத்தை இதற்கு மேலும் விரித்துச் சொல்வதிலும்விட 'ஏதாவதொரு 'ட்ரூ மன் காப்டே', 'அனே ரைஸ்' நூலை வாசித்துப்பாருங்கள்' என்று கேட்பது உசிதமான காரியம். மிக இலகுவானதும் சரளமானதுமான நடையிலே, நடப்பதை வாசிக்கின்றவர் கண்முன் தோன்ற, உயிர்ப்பூட்டத்து டனே விளக்கமாகச் சொல் லுவார்கள்.

இந்த நகர் வீதிகளிலே, நேற்று கண்டது இன்று மிஞ்சாது; இன்று கொண்டது நாளை தங்காது. அதனால், வார இறுதி நாட்களின் பிரெஞ்சுச் சதுக்கம் இவர்களுக்கு அலுப்பதில்லை. ஒரே மேடையிலே வேறுவேறு ஓரங்கநாடகங்கள் விளிம்பிலே தமக்குட் தொட்டு நடத்திக்கொண்டிருப்பதுபோல... அருகருகே வேறுவேறு பாத்திரப் பண்புகளையும் ஊடாடும் கதைகளையும் காலிக் கொண்டிருக்கும் ஒரு தேயாச் சுரங்கம்... நியூ ஓர்லியன்ஸ் பிரெஞ்சுச் சதுக்கம்.

மூவரும் பிரெஞ்சுச் சதுக்கத்தினைச் சென்றடைந்தபோது காலை பதினொரு மணியிருக்கும். காலையிலே வீட்டிலிருந்தே இலேசாக ஆளுக்கு இரண்டு இனிப்புத் தோசைகள் என்று, பால் தேநீருக்கு முன்னர் உண்டுவிட்டுப் போனதினால், பிற்பகல் இரண்டு மணிவரைக்கும் ஒரு முனையிலிருந்து மற்றொரு முனைக்கு குறுக்காகவும் நெடுக்காகவும் ஒன்றுக்கு மேற்பட்ட தடவை சிறிய சிறிய சந்துகளிலே திரும்பித்திரும்பி அலைந்தார்கள். நண்பன், தன் ஒளியப் பதிவியினாலும் புகைப்படக் கருவியினாலும் பிரெஞ்சு ஆட்சிக்குட்பட்டிருந்தபோது கட்டப்பட்ட கட்டிடங்க ளின் உப்பரிகைகளையும் பூந்தொட்டிகளையும் கைவினைப்பொருள்கள், ஓவியக்கடைகளின் வெளிப்பகுதிகளையும் படம்பிடித்துக்கொண்டிருந்தான். தனக்கு எப்போது கல்யாணம் ஆகக் கூடும் என்று ஒரு 'பலபலவண்ணம் - பளபளவன்னம்' கூரைத்தலைப்பாகை கட்டிய 'வூடு' பெண்மந்திரவாதியிடம் நான்கு டொலர் கொடுத்துக் கேட்டபோது நண்பனுக்குக் கிடைத்த ஆரூடமும், அவனுடைய மூல நட்சத்திரத்தினையும் பெற்றார் பிறப்பையும் ஆதி மூலங்களாகவைத்து அவனின் தாயாருக்கு இலங்கையிலே சொல்லப்பட்ட காண்டக்கூற்றும் முற்றிலும் ஒன்றை யொன்று நிராகரித்ததிலே நண்பனுக்கு மிகுந்த மனவருத்தம். அதைத்தேற்ற, ஒரு பதிவியல் ஓவியரிடம் இருபத்தைந்து டொலர் கொடுத்து, தன்னைப் பத்து நிமிடத்திலே பதித்துக்கொண்டான். அவர் நியூ ஓர்லியன்ஸின் ஜாஸ் இசைஞரோடு சேர்த்து வரையப்பட்ட நீலநாய் ஓவியத்தை மிகவும் சிலாகித்துக் கொண்டு வரைந்து கொடுத்த ஓவியத்திலே, தம் மீசை சிவப்பாகவும் தலைமுடி மஞ்சளாகவும் பண்பின் அடிப்படையிலே தீட்டப்பட்டு, திட்டுத்திட்டாக நிறங்கள் தேங்கிக் குழம்பி இருந்ததிலே அத்துணை மகிழ்ச்சி நண்பனுக்கு இல்லைத்தான் என்றாலும், காசையும் திருப்திக்காக மேலும் சில ஒற்றை டொலர்த் தாள்களையும் வைத்துவிட்டு ஓவியத்தைப் பார்த்துப்பார்த்து திட்டித்திட்டி நடந்தான். இவன் மனைவியிடம் கண்ணடித்துச் சிரித்தான். அவள் 'வாயை மூடிக்கொண்டு பேசாமல் நடவுவங்கள்' என்பதுபோலக் கண்ணால் முறைத்து, வலக்கைச் சுட்டுவிரலாலும் தன் உதடுகளுக்குக் குறுக்கே அழுத்திக் காட்டினாள்.

இந்த நிலையிலேதான் ஜக்ஸன் சந்துக்கும் இருநூற்றாண்டுகாலத் தேவாலயத்துக்கும் அந்தப்புறம் டெகாடூர் வீதியிலே அந்த இரண்டு தட்டொலி ஆட்டக்காரப் பையன்களை இவர்கள் காண நேர்ந்தது. இவனும் இவன் மனைவியும் இரண்டு வருடங்களுக்கு முன்னர் இந்த நகருக்கு வந்தபோது, இப்படியான ஆட்டங்களைக் கொஞ்சநேரம் நின்று பார்த்து, கூட்டத்தோடு கூட்டமாகச் சில்லறையை விசிறிவிட்டுப்போவார்கள். இப்போது நின்றுபார்க்கும் அளவுக்கு ஈடுபாடு இல்லை. ஊரிலே ஊனமுள்ள பிச்சைக்காரர்கள், சில்லறை கிடக்கும் தகரப்பேணியை லயத்துடன் குலுக்கும் ஒலியினை ஒப்பிய ஓசையை மட்டும் கேட்டுக்கொண்டு, சுற்றி - கற்பனை நீள்வளையப் பரிதியொன்றின் மூன்றிலிரு பகுதியிலே - நின்றுபார்க்கும், சிறியதும் பெரியதுமான சுற்றுலாப் பயணிகளின் காலிடைகட்குள்ளாலும் தோள்ப்பட்டைகளுக்கு மேலாலும் தெரியும் ஆட்டத் துணுக்குகளையும் நுணுக்குகளையும் நடையோடு நடையாகப் பொறுக்கிக்கொண்டு பிரெஞ்சுச் சந்தைக்குப் போகின்ற அளவிலேதான் அவர்களின் மனநிலை. இரும்புச் சல்டே பற்றினாலான நகைகளின் புதிய மாதிரியுருக்களும் கொரிய, தூரிகை எழுத்தோவிய நளினமும் 'நீண்ட கழுத்து - தொங்கு காது' ஆபிரிக்க மரப் பெண்சிற்பங்களும், இக் காற்குதிபாதம் தட்டாட்டத்திலும்விட ஈர்ப்பு நிறைந்தவையாகத் தெரிந்தன.

ஆனால், வந்திருக்கும் நண்பனுக்கு இன்றைக்கு ஒருமுறை அப்படியான ஆட்டமொன்றைப் பார்த்துத்தான் ஆக வேண்டும் என்ற விழைவு. இரண்டு கூட்டங்கள் கொஞ்சம் கொஞ்சம் தள்ளித் தள்ளி, ஒன்றோடு ஒன்று கலக்காமலும் கலந்ததும்போலக் கிடந்தன. அவற்றிலே - தேநீரிலே கரண்டியாற் கொட்டிய சீனி கரைவதுபோல - வெளியிருந்து உள்ளே நுழைந்து ஒருவாறு முன் வளைய வரிசையிலே வந்து சேர்ந்தார்கள்.

இரு கறுப்பினச் சிறுவர்கள், ஆளுக்காள் கொஞ்சம் கொஞ்சம் தொலைவிலிருந்து ஆடிக்கொண்டிருந்தார்கள். ஒருவன் ஏறக்குறைய பதினைந்து, பதினாறு வயது விடலைப் பருவத்தோன். மற்றையது, ஆறேழு வயதுப் பாலகன். பாலகனின் முன்னால், ஒரு நீண்ட கறுப்புக் கைக்குட்டை. (அது, தலையிலே நாகரீகம் என்று அந்ரே அகாஸி கட்டிக் கொள்வதுபோன்ற 'பந்தனா' வகைப்பட்ட துணி என்று அவள் சொன்னாள்) மற்றவன் முன்னாலே கிடந்தது, மெக்ஸிக்கன் பாட்டுக் குழுக்கள் பயன்படுத்தும் வகையான தொப்பியாக இருக்கலாம் என்று அவன் எண்ணிக்கொண்டான்.

பாதத்தையும் குதியையும் நிலத்திலே தட்டித் தட்டி ஆடும் ஆட்டத்தை முக மெல்லாம் கறுப்புப் பூசிய வெள்ளை அல் ஜோன்ஸனின் படத்திலும் பிரெட் அஸெயர் படங்களிலும் பார்த்துவிட்டு வந்து, இங்கே அதை எதிர்பார்த்து வரு கின்ற சுற்றுலாப் பயணிகள் திருப்தி யோடு திரும்பிப்போகின்றார்களா என் பது என்னைப்போலவே அவனுக்கும் தெரியாது. சில சந்தர்ப்பங்களிலே, அவ னது சில நண்பர்கள் இந்தவகை நடனத் தில் உள்ள குதி, பெருவிரல் அசைவுகள், கால் மாற்றி ஆடுதல், நிலம் தட்டுகையின் மீடிறன், சுழிப்பு, தூரிகை, துள்ளல், முறிப்பு, பாதமூட்டு சுழல்வு என்பனவற் றினைப்பற்றியும் அவற்றின் இணைப்பு பற்றியும் அவனுக்கு விளக்கிச் சொல்ல முயன்றதுண்டு. ஆனாலும், அவனுக்கு அவை ஏறவில்லை. ஆக, அவனுக்கு, இயல்பினிலே உள்ள அழகுணர்வு மட் டுமே ஆட்டக்காரனது கற்பனை வெளிப்பாட்டிலும் நளினத்தினதும் கண் ணைப் பதியவைத்து, இது தனக்குப் பிடித்திருக்கின்றது / பிடிக்கவில்லை என்று சொல்ல வைத்திருக்கின்றது. அதற்குமேலே, எந்த ஒரு கலையையும் பற்றி தீர்மானமாக நல்லது கெட்டது சொல்ல, அதைப்பற்றிய சொந்தப் பயிற்சி கொஞ்சம் அவசியம் என்று அவ னுக்குத் தோன்றும். அவன் மனைவியின் கருத்து என்னவென்று அவள் வெளிப்ப டையாகச் சொல்வதில்லை. பிடித்தி ருந்தால், அவளின் முகத்திலே ஒரு வெளிச்சம் மினுக்கும்; இல்லாவிட்டால், "நகர்வோமா" என்ற கேள்வி தொக்கும்.

பயிற்சியின் காரணமோ அல்லது இயற்கையிலேயே இருக்கும் திறமையின் காரணமோ, விடலைப் பையனின் ஆட் டத்துடன் மூவரும் மிகவும் ஒன்றிப்போ கக்கூடியதாக இருந்தது. குறிப்பாக, அவன் நிதானமாக இட்ட ஒரு முழுத் தட்டுக்குப் பின்னால், விரைந்து ஒரு சீரான தொடராக குதிப்பும் பெருவிர லின் நில அரைத்தட்டும் என்று விழுந்த கணங்கள், இவனையும் நண்பனையுமே தத்தம் கால்களைத் தட்டவைத்ததுடன், ஓரிருமுறை விரல்களைக்கொண்டு உந்த வும் செய்யத்தள்ளியது. இவனின் மனைவி இதைப்பார்த்துச் சிரித்துக் கொண்டாள். அவள் மட்டுமல்ல, இப் படிச் செய்யும் எந்த நாற்பத்தைந்து வயது மனிதனின் மனைவியும் சிரிக்கத் தான் செய்வாள். அக் காய்ப்பருவப் பையனுடைய சப்பாத்துக்களும் சிறிய வனின் சப்பாத்துக்களைப்போலவே சத்தம் எழுப்புவதற்கு அடிப்படையான அடி லாடங்களைக்கொண்டிருக்க வில்லை. அதற்குப் பதிலாக, இருவருமே குளிர்பான, மதுப் போத்தலின் மூடி களை ஏதோ விதத்திலே தத்தம் தேவைக் கேற்ற வகையிலே உருமாற்றிப் பொருத் திக்கொண்டு ஆடிக்கொண்டிருந்தார் கள். அதனால், அவற்றிலேதும் கழன்று விடும் சமயங்களிலே, நின்று நிதானமாக செருகியிருந்த இடத்திலே பொருத்தி, மீள ஆடவேண்டி இருந்தது. அது, நடனத்திலே அடிக்கடி தொய்வினை ஏற்படுத்திக்கொண்டிருந்தாலும், அந்த நடனம் நளினத்துடன் இவர்களுள்ளே ஓர் உற்சாகத்தை மூன்று மணிநேர நடைச்சோர்வுடன் கூடிய மனநிலைக் குத் தந்தது என்பதிலே ஐயமில்லை. ஆனால், இவன் நண்பனுக்கும் மனைவிக் கும் வெறுப்பைத்தந்தது என்னவென் றால், அந்த இரண்டும் கெட்டான் வயது ஆட்டக்காரனின் பொறுமையின்மை யும் பண வேட்கையுமே.

அந்த ஆட்டக்காரன் தொப்பிக் குள்ளே கணிசமான அளவு சில்லறையும் ஒற்றை ஐந்து டொலர் நோட்டுக்களும் இருந்தாலுங்கூட, கொஞ்சம் தள்ளி ஆடிக்கொண்டிருந்த சிறுவனின் கைக் குட்டையிலே இவனின் வருவாயோடு ஒப்பிட்டு நோக்குகையிலே நிரம்பி வழிந்துகொண்டிருந்தது எனலாம். இது, விடலைக்குப் பொறுக்கவில்லை. எல் லோரும் தன்னுடைய ஆட்டத்தைப் பார்த்துவிட்டு, பணத்தைமட்டும் சிறுவ னுக்குப் போட்டுவிட்டுப் போகின்றார் கள் என்றும், அது நியாயமில்லை என் றும் இடைக்கிடையே - ஆட்டத்திற்கு இடையிலே - நின்று நின்று கத்திக் கொண்டிருந்தான். சிலவேளைகளிலே சிறுவனின் கைக்குட்டையிலே யாரா வது பணம் போட்டுவிட்டுச் சென்றால், அப்படிப் போட்டவர் தன்னுடைய நட னத்தினையே பார்த்துக்கொண்டிருந் தவர் என்றும், ஆனால், பணத்தை மட்டும் சிறுவனுக்குப் போட்டுவிட்டுப் போகின்றார் என்றும் குறைகூறிக் கொண்டு, சிறுவனின் கைக்குட்டையி லிருந்து அந்த டொலர்க் காகிதத்தை எடுக்கவும் முயன்றான். அப்படியான கணங்களிலே சிறுவன் தன்னுடைய ஆடமுயலும் செய்கையை நிறுத்தி விட்டு, தன் கைக்குட்டைக்கு முன்னால் குனிந்து போராடவோ, அழவோ முயற் சித்துக்கொண்டிருந்தான். கூடியிருந் தவர்கள், பெரியவனை ஏசினார்கள் அல் லது, சிறியவனுக்கு மேலும் சில சில்ல றையை வீசினார்கள். பெரியவனின் உள்ளத்தின் ஆத்திரம், அவனது ஆட் டத்தின் துடியிலே தெரிந்தது. இன்னமும் அவனை யாராவது இவ்வாறு சூடேற் றினால் நல்லது என்று இவன் எண்ணிக் கொண்டான்.

விடலை சொல்கின்றதிலும் ஓரளவு நியாயம் இருக்காமல் இல்லை. சிறுவன் ஆடினான் என்பதிலும்விட, ஆட முயற் சித்தான் என்கின்றதே சரியாக இருந்தது. ஓரிரு சந்தர்ப்பங்களிலே விழவும் செய் தான். மக்கள், "ச்தோ! பரிதாபம்" என்றார் கள்; பணத்தைப் போட்டார்கள். பிறகு, சிறுவனின் பரிதாபத்தைப் பார்க்கமுடி யாமல் முகத்தைத் திருப்பி, பெரியவனின் நளினத்திலும் குதிப்பிலும் ஒன்றினார் கள். பேசாமல் திரும்பிப் போனார்கள். அவள் மட்டும் சிறுவனை உற்று உற்றுப் பார்த்து கண்ணைக் கலக்கினாள்... தனக் கொரு குழந்தை இருந்தால், அவனும் இப்படித்தான் நடனமாடலாம் என்று ஒரு நாற்பது வயதுக்காரி கலங்குவது சாதாரண விடயம்தான். கடைசியிலே இரு ஆட்டக்காரர்களும் சோர்ந்து போய், அவரவர்க்குச் சேர்ந்ததை எண் ணிக்கொண்டிருந்தபோது, இவன் காசைப் பெரியவனுக்கே போட்டான். நண்பன், சிறுவனுக்குப் போட்டான். அது, இவனது மனைவிக்குச் சரியென்று பட்டது. இவனுக்கும் விடலைக்கும் முற்றாகப் பிடிக்கவில்லை. ஆட்டம் நின்றதால், பசி தெரிந்தது. திரும்பி நடந் தனர். இவனின் நண்பன் கொடுத்த பணத்திற்கு சிறுவனும் பெரியவனும் அடிபிடி செய்துகொண்டிருப்பது, பின் னாலே கேட்டது. இவன் மனைவியும் நண்பனும் இடைத்தரகம் செய்யத் திரும்பிப் போனார்கள், இவனுக்கு ஆத் திரமாக வந்தது. காலை நிலத்திலே ஓங்கி உதைத்தான்; வலித்தது. மனைவி திரும்பி வந்தபோது, பிரச்னையைத் தீர்க்க, பெரி யவனுக்கு அவள் திரும்ப ஒரு டொலர் கொடுக்கவேண்டியதாயிற்று என்றாள். இப்போது, உதைக்காமலே வலித்தது.

இவனுக்கு பேர்பன் வீதியிலே ஒரு குறிப்பிட்ட கடை, நியூ ஓர்லியன்ஸ் உணவுக்குப் பிரபல்யமானது என்பது தெரியும். பொதுவாக, நண்பர்கள் வந் தால் பிரெஞ்சுச் சதுக்கத்தைச் சுற்றிமு டித்தவுடன் அந்தக் கடைக்கே உண வுக்கு அழைத்துப்போய் அன்றைய சுற் றுலாவை முடிப்பது வழக்கம். திரும்பி வரும்போது, இவன் நண்பனிடம் "சிறிய பையனுக்குப் பணத்தினைக் கொடுத்தி ருக்கக்கூடாது" என்றான். நண்பன் கொஞ்சம் கடுமையாக "ஏன்?" என்று எடுத்தெறிந்து கேட்டான். "நீ ஒருபோ தும் சிறிய பையனின் ஆட்டத்தைப் பார்க்கவில்லை. முழுக்கமுழுக்க பெரிய வனின் உழைப்பிலே விளைந்த அழகான நடனங்களைப் பார்த்துவிட்டு, எப்படி நீ ஒரு கேவலமானவன்போல சிறியவ னுக்குப் பணத்தை விட்டெறிந்துவிட்டு வரலாம்?" - இவன் ஆத்திரமாகவே சொன்னான், "பெரியவனுக்கு நீ கொடுத்தாய்தானே? மற்றவனுக்கு நான் கொடுத்தால் ஆகிற்று; அது நியாயம்

தான்" என்று அவனும் சூடானான். இந்தத் தர்க்கம் நியாயமாக இவனுக்குப் படவில்லை. "நான் உனக்காகப் பார்க்கவில்லை, எனக்காகப் பார்த்தேன், அதற்காக நான் கொடுக்கவேண்டிய கூலியைக் கொடுத்தேன். நீ பார்த்ததற்கும் சேர்த்துத்தான் நான் கொடுத்தேன் என்று நீ நினைப்பது எந்த வகை நியாயப்படுத்தல்?" - எகிறியபோது, ஊர்சுற்றிப்பார்க்க வந்திருந்தவன், "இப்படி நியாயம்-அநியாயம் என்று வகைப்படுத்தினால், சிறுபையன் இந்த வயதிலே ஆடுகின்றான்; எத்தனை தடவை விழுந்தான் என்று பார்த்தாயா? எங்களின் இந்த வயதிலே நாங்கள் எங்களை வாழவைக்க நாங்களே உழைக்கவேண்டிய அவல நிலையிலே இல்லை என்பதை எண்ணிப் பார்க்கும்போது, அவனின் நிலையையும், இயற்கை எங்களை அந்த அளவிலே கொடுத்துவைத்தவர்களாக வைத்திருப்பதையும் எண்ணும் எவனுக்கும், காசைக் கொடுக்காமல் வரமுடியுமா?" அழுத்தமாகக் கூறினான். இவன் மனைவியும் அதை முழுதாக ஆமோதித்தாள். அவளுக்கு எந்தக் குழந்தை ஆடினாலும் எந்த வயோதிபர் அழுதாலும் இதே பதிலைத்தான் சொல்லவரும்.

இவன் நமுட்டுச் சிரிப்பு ஒன்றை உதிர்த்துவிட்டு, செயின்ஸ் லூயிஸ் வீதி - பேர்பன் வீதி முடக்கிலே திரும்பும்போது வினவினான் "அதாவது, சிறு பிள்ளைகள் வேலைசெய்கின்றதை நீ ஆதரிக்கின்றாய், ஊக்குவிக்கின்றாய்; நீ அதைத்தான் சொல்லவருகின்றாய் என்று உன் கருத்தினை நான் அர்த்தப் படுத்திக்கொள்ளலாமா?" நண்பன், கொஞ்சம் அரசியல் இடதுபக்கச் சாய்வுள்ளவன். அண்மையிலே சியாட்டிலிலே நடந்த உலக வர்த்தகம் சம்பந்தப்பட்ட மகாநாட்டினைப்பற்றி மிகவும் கடுமையான மின் அஞ்சல்களை - அதனுடன் சம்பந்தப்படாத, அது என்ன விடயமென்றே தெரியாத - நண்பர்களுக்கும் அனுப்பிக்கொண்டிருக்கிறான் என்பது பொது நண்பர்கள் வட்டாரத்திலே உள்ள குறை. சிறுவருழைப்பு என்பதற்கு கொஞ்சம் எதிரானவன். பாகிஸ்தான், இந்தோனேசியா போன்ற நாடுகளிலே ஆலைகள் வைத்திருக்கும் நைக்கி போன்ற பன்னாட்டு தொழில்நிறுவனங்களின்மீது தீராத கோபம் அவனுக்கு உண்டு என்று இவனுக்குத் தெரியும்.

நண்பன் கொஞ்சம் கலங்கித்தான் போய்விட்டான். பின் சிறிதுநேர யோசனைக்குப் பிறகு, உணவுக் கடையினுள்ளே மாடிப்படியிலே ஏறும்போது மெதுவாகக் கேட்டான்,, "சரி, நான் போட்டது தவறுதான்; ஆனால், இரண்டு விடயங்களை யோசித்துப்பார். சிறியவன் சந்தி முனைகளிலே நின்று சதம், காற்பணம் தா என்று பிச்சை கேட்காமல், கொஞ்சம் தானே உழைத்துச் சம்பாதிக்க முயல்கிறான். எங்கள் நாட்டிலே உள்ளதுபோல, இங்கு அவனை எந்தத் தொழில் நிறுவனமும் அவன் இயலாமையை எண்ணி வஞ்சிக்கவில்லை... அவனின் பெற்றோரின் வஞ்சிப்பு ஏதோ விதத்திலே இருக்கின்றது என்றால்கூட, அந்த உழைக்க முயலும் தன்னம்பிக்கையை ஊக்கப்படுத்த வேண்டாமா? பதினாறு வயதுக்காரன் வீதியிலே இதையே வருங்காலத்திலே தொழிலாக்கொண்டு தன்னைக் குறுக்கக்கூடாது என்று நீ அவனின் உற்சாகத்தை வடிக்கவேண்டும்" என்றான். இவன் மனைவி வேறு போதாக்குறைக்கு, "அந்தச் சிறுவனுக்குக் காசைக் கொடுக்காது, அது பெரிய பையனிடம் பயந்து பயந்து கெஞ்சிநிற்க வைத்துவிட்டு, இங்கே நாங்கள் நிம்மதியாகச் சாப்பிடமுடியுமா?" என்று, தன் பங்குக்கு ஒரு வாதத்தைப் போட்டாள்.



பரிசாரகன் வந்து பட்டியலைக் கொடுத்துவிட்டு, உண்ணவேண்டியதைத் தேர்வுசெய்யும்படி சொல்லிவிட்டுப் போனான். அவனைத் தெரிவு செய்யச் சொல்லிவிட்டு, இவர்கள் இருவரும் தொடர்ந்து வாக்குவாதப்பட்டுக் கொண்டே இருந்தார்கள்.

இவன், "அப்படியானால், பெரியவனின் நடனத்தைப் பார்ப்பதற்காக நாம் அங்கே தரித்திருக்கக்கூடாது" என்று இன்னொரு கோணத்திலே தொடங்கினான். நண்பன், 'கலையும் பரிதாபமும் வேறு வேறு என்றும் இரண்டுக்குமே நாங்கள் அவையவைக்குரிய இடத்தைக் கொடுக்கவேண்டும்' என்ற நிலையிலே வாதாடினான். சாப்பிட்டு முடிந்து பணத்தைக் கொடுத்துவிட்டு, நடந்து வீட்டுக்குப்போக 'டிராம்' வண்டி எடுக்கும் இடம் வரைக்கும் நடந்தபோதும் மூவரும் இதையேபற்றி வாதாடினார்கள்... இவன், பெரிய பையனின் உழைப்பினை மதிக்கவேண்டுமென்றும்; அவனின் உழைப்பு, அருகே நின்றுகொண்டிருந்ததாலும், வயது எழுப்பிய பரிதாபம் காரணமாகவும் சிறுவனுக்குப் போகக்கூடாதென்றும் சொந்த மொழியிலே அடித்துச் சொன்னான். பல வேளைகளிலே அருகாமையிலே வீதியிலே சென்றவர்கள் மூவரையும் திரும்பிப் பார்த்தார்கள். இவனது நண்பனும் மனைவியுமோ, சிறிய பையனின் வயதின் பபரிதாபமும் சொந்தக்காலிலே நிற்க வேண்டுமென்ற உணர்வும் கணக்கிலெடுக்கப்படவேண்டுமென்றும் பெரியவனின் இந்தத் தொழில்மீதான ஈடுபாடு அவனின் எதிர்காலம் கருதிக் குறைக்கப்படவேண்டுமென்றும் வாதாடினார்கள். அவர்கள் பேசியபோது, வீதியிலே தனி ஆவர்த்தனம் வாசித்துக்கொண்டிருந்த சக்ஸபோன் வாத்தியக்காரர், கிற்றார் வாத்தியக்காரர், புல்லாங்குழல் வாசிக்கிறவர், ஏதாவது கடைப்பெயருக்கு விளம்பரம் தூக்கிக்கொண்டிருந்தவர்கள் எல்லோரும் தத்தம் இலயிப்பினைக் கொஞ்ச நேரம் மறந்துவிட்டு மூவரையும் உற்றுப் பார்த்தார்கள்.

கனால் வீதி வந்தபோது, 'டிராம்' வண்டியிலே ஏறுமுன்னர், சிறுநீர் கழித்துவிட்டுப் போவது உசிதமான காரியமாக இவனுக்குப்பட்டது. பக்கத்திலே இருந்த 'மக்டொனால்ட்ஸ்' உணவுச்சாலை வீதியோரமாக பூந்தொட்டிகளுக்கு அருகாமையிலே மேசையொன்றிலே மற்ற இருவரையும் இருக்கச்சொல்லிவிட்டு, உள்ளே சிறுநீர் கழிக்கப்போனான். போகும்போதும் இவன் பெரிய பையனுக்கு ஆதரவாக ஏதோ சொல்லிக் கொண்டுபோக, நண்பன் மாற்றுநிலைப் பாட்டிலிருந்து ஏதோ பதில் கொடுத்தான். சிறுநீர் கழித்துக்கொண்டிருக்கும்போதும், கைகளைக் கழுவிவிட்டு வரும்போதும் நண்பன் சொன்னதற்குப் பதிலடியைத் தனக்குள்ளே தீவிரமாகத் தயாரித்துக்கொண்டிருந்தவன், வந்து உட்காரும்போதே தன் பதிலைச் சொல்லத் தொடங்கினான்.

'சத்தம்போடாதே' என்ற ரீதியிலே சைகைகாட்டிய நண்பனையும் இவன் மனைவியையும் பார்த்து விழித்த இவனுக்கு, கொஞ்சம் தள்ளியிருந்த மேசையினை நண்பன் சுட்டிக்காட்டினான்.

திரும்பிப் பார்த்தபோது, தட்டொலி நடனச் சிறுவனும் பெரியவனும் ஆளாளுக்குச் சேர்ந்த தொகையை, அந்த மேசையிலே மொத்தமாகக் குவித்து எண்ணிக்கொண்டு, 'அப்பிள் பை'யும் 'ஸ்ரோபரி சண்டி'யும் அருந்திக்கொண்டிருப்பது தெரிந்தது. ■



# 'ரெஸ்ட்' ஆட்டத்தில் அழிபடும் எல்லைக்கோடு

**இந்திய, தென்னாபிரிக்க அணிகள் புரிந்த சாதனைகள் நான்காவது 'இன்னிங்ஸ்' அணுகுமுறையை மாற்றுகின்றன**

அரவிந்தன்

மிட்செல் ஜோன்சன் வீசிய பந்தை ஜே. பி. டூமினி 'கவர்' திசையில் அடித்தபோது அந்தப் பந்து எல்லைக் கோட்டைத் தாண்டவில்லை. தென் ஆபிரிக்காவின் புதுமுக ஆட்டக்காரர் டூமினியும் அநுபவம் மிகுந்த ஏ. பி. டிவில்லியர்ஸும் கஷ்டப்பட்டு ஓடி, மூன்று ஓட்டங்கள் எடுத்தார்கள். ஆனால், டிசம்பர் 21இல் அவுஸ்திரேலியாவின் பேர்த் அரங்கில் டூமினி அடித்த அந்த 'ஷொட்' கிரிக்கெட் ஆட்டத்தின் எல்லைக்கோடு ஒன்றைச் சத்தமில்லாமல் அழித்துவிடக்கூடிய ஒன்றாக சரித்திரத்தில் இடம்பெற்றுவிட்டது.

அதற்குக் கிட்டத்தட்ட ஒரு வாரத்துக்கு முன்னர் இந்தியாவின் தென்கோடியில் சென்னையில் சச்சின் ரெண்டுல்கார் இங்கிலாந்து அணியின் 'ஆஃப் ஸ்பின்னர்' க்ரீம் ஸ்வான் வீசிய பந்தை 'ஃபைன் லெக்' திசைக்குத் தட்டிவிட்டு ஓடினார். பந்து எல்லைக் கோட்டைத் தாண்டுவதற்கு முன்பே வெற்றிக்குத் தேவையான ஓட்டங்களையும் தனது 'நூறு ஓட்டங்களை' எட்டுவதற்கான ஓட்டத்தையும் அவர் எடுத்துவிட்டார். எல்லைக் கோட்டைத் தாண்டிச் சென்ற அந்தப் பந்து, கிரிக்கெட் ஆட்டம் சில தடைகளைத் தாண்டி முன்செல்ல உதவியது.

சென்னையில் இந்திய அணியும் (387) பேர்த்தில் தென் ஆபிரிக்க அணியும் (414) கிரிக்கெட் ஆட்ட அரங்கின் அரூப வெளியின் எல்லைக் கோடுகளை மாற்றி அமைத்திருக்கின்றன. ரெஸ்ற் ஆட்ட போட்டிகளில் 'ஓட்டம் தேடும்' விஷயத்தில் இந்த இரு அணிகளும் புரிந்த சாதனைகள் ஓட்டம் தேடலில் முதல் இடத்திலிருக்கும் அணியை அசைத்துவிடவில்லையென்றாலும், இந்த இரு அணிகள் சாதனை புரிந்தவிதம், ரெஸ்ற் போட்டிகளின் நான்காவது இன்னிங்ஸ் குறித்த அணுகுமுறையை மாற்றவல்லது என்பதில் சந்தேகமில்லை.

நான்காவது இன்னிங்ஸில் 350 ஓட்டங்கள் எடுக்கவேண்டும் என்றநிலை வந்தாலே கடைசியாக ஆடும் அணி, ஒன்றில் தோற்கவேண்டும் அல்லது வெற்றி தோல்வியற்ற நிலைக்கு முயலவேண்டும் என்பதே ரெஸ்ற் கிரிக்கெட்டின் பொது

# 'யுவராஜ் - சச்சின்' 'டிவில்லியர்ஸ் - டூமினி' ஜோடிகளின் ஆட்டம் 'ஓட்டம் தேடலில்'


## புதிய சாதனை படைக்காவிட்டாலும் புதிய மாற்றத்தை ஏற்படுத்துகிறது

வான விதி. முதல் இன்னிங்ஸில் 500, 600 என்று பெரும் ஓட்டங்களைக் குவிக்கும் அணிகள்கூட, இரண்டாம் இன்னிங்ஸில் அப்படி ஆடமுடிவதில்லை. காரணம், பெருமளவு ஓட்டங்களை எடுக்க நேரம் கிடைக்காது. அப்படி கிடைத்தாலும், நான்காம், ஐந்தாம் நாள்களில் ஆட்ட மைதானம் துடுப்பாட்டக்காரர்களுக்கு சாதகமாக இருக்காது. சிலசமயம், இந்தியாவின் பல ஆட்ட மைதானங்களில் இருப்பதுபோல, பந்து வீச்சாளர்களுக்கு மிகவும் சாதகமாக இருக்கும். தவிர, இலக்கு என்ற சுமை இல்லாத போது ஓட்டத்தைக் குவிப்பதற்கும், பெரும் இலக்கு என்னும் சுமையுடன் ஓட்டத்தைக் குவிப்பதற்கும் பெரும் வித்தியாசம் இருக்கிறது. எவ்வளவு பெரிய ஜாம்பவான்களைக்கொண்ட அணிகளும் இந்தக் காரணிகளைத் தாண்டி 350 ஓட்டங்களுக்குமேல் எடுத்து வெற்றிபெறுவது சுலபமல்ல. 1948இல் இங்கிலாந்து அணிக்கு எதிராக 404 ஓட்டங்களை எடுத்து அவுஸ்திரேலிய அணி பெற்ற வெற்றியின் சாதனை 27 ஆண்டுகளுக்குப் பின்னர்தான் முறிய டிக்கப்பட்டது. 1975இல் மேற்கிந்திய அணிக்கு எதிராக 406 ஓட்டங்கள் எடுத்து இந்தியா வெற்றி பெற்றது. பின்னர், மேலும் 28 ஆண்டுகள் கழித்து மேற்கிந்திய அணி 2003இல் அவுஸ்திரேலிய அணிக்கு எதிராக 418 ஓட்டங்கள் எடுத்து அந்தச் சாதனையை முறியடித்து, இன்று வரையிலும் முதலிடத்தில் உள்ளது. ஆக, நான்காவது இன்னிங்ஸில் 400 ஓட்டங்கள் எடுப்பதென்பது கிட்டத்தட்ட ஒரு கனவுபோலத்தான்.

இந்தப் பின்னணியில்தான் சமீபத்திய இந்திய, தென் ஆபிரிக்க அணிகள் புரிந்த சாதனைகள் முக்கியத்துவம் பெறுகின்றன. இவை இரண்டும் கிட்டத்தட்ட பத்து நாள் இடைவெளியில் நடந்திருப்பதும், வலுவான பந்துவீச்சைக்கொண்ட அணிகளுக்கு எதிராக நிகழ்த்தப்பட்டிருப்பதும் குறிப்பிடத்தக்கவை. சென்னை, பேர்த் ஆகிய இரு ஆட்ட மைதானங்களுமே ஐந்தாவது நாள் ஆடுவதற்கு சுலபமான மைதானங்கள் அல்ல. அதிலும், கணிக்க முடியாத அளவுக்கு பந்து எகிறியும் தாழ்ந்தும் வந்த சென்னை மைதானத்தில், ஐந்தாம் நாள் ஓட்டம் ஒப்பீட்டளவில் கடினமானது. வி. வி. எஸ். லட்சுமணன் ஆட்டமிழந்த பந்தின் தன்மையே இதற்குச் சான்று.

ஆனால், அந்த மைதானத்தில் ரெண்டுல்காரும் யுவராஜ் சிங்கும் ஆடிய விதத்தைப் பார்க்கையில் வெற்றி மிகவும் சுலபமாகக் கிடைத்ததுபோலத் தோன்றியது. அதுபோலவே, பேர்த்தில் டிவிலியர்ஸும் டூமினியும் ஆடிய ஆட்டம். சென்னையில் நான்காம் நாள் மாலையில் விரேந்திர சேவாகின் அதிரடி ஓட்டமழையால் முளைத்த நம்பிக்கை, ஐந்தாம் நாள் காலையில் ராகுல் ட்ராவிட் ஆட்டமிழக்கும்போது வலுவிழந்தது. பின்னர், கௌதம் காம்பீரும் அதையடுத்து, வி. வி. எஸ். லட்சுமணனும் ஆட்டமிழக்கும்போது மீதியிருந்த நம்பிக்கையும் தேய்ந்தது. சச்சின் ஆடிக்கொண்டிருந்தார். ஆனால், அவர்மட்டும் போதாது. யுவராஜ் சிங் இப்போதுதான் டெஸ்ட் அணிக்குள் மறுபிரவேசம் செய்திருக்கிறார். அவரைவிட்டால், மகேந்திரசிங் தோனியைத்தவிர வேறு துடுப்பாட்டக்காரர்கள் எவருமில்லை. இந்நிலையில், 1999இல் இதே மைதானத்தில் ஆடியதுபோல சச்சின் சிறப்பாகவே ஆடினாலும், மேலும் சுமார் 200 ஓட்டங்களை எடுப்பது - அதுவும், பந்துவீச்சுக்குச் சாதகமான மைதானத்தில் - குதிரைக் கொம்புதான். இந்தச் சூழ்நிலையில்தான் சச்சின் - யுவராஜ் ஆட்டத்தின் முக்கியத்துவத்தைப் புரிந்துகொள்ளமுடியும். இந்த அளவுக்குச் சவாலான மைதானமல்ல என்றாலும், பந்து நன்கு எகிறக்கூடிய பேர்த் மைதானத்தில் வலுவான அவுஸ்திரேலிய பந்து வீச்சை எதிர்கொண்டு ஆடிய தென் ஆபிரிக்க துடுப்பாட்டக்காரரின் சாதனையும் அபாரமானதுதான்.


இந்த இரண்டு 'ஓட்டம் தேடும்' தொடக்க ஆட்டக்காரர்கள் சிறப்பாக ஆடியது வெற்றிக்கு முக்கிய பங்கு வகித்தது. தென் ஆபிரிக்காவில் ஸ்மித்தும் இந்தியாவில் சேவாக் - காம்பீர் ஜோடியும் இட்ட அடித்தளம், இந்த ஓட்டத்தை எடுக்கமுடியும் என்ற நம்பிக்கையை அணியிலுள்ள மற்றையவர்களுக்கு அளித்தது. அதிலும், 68 பந்துகளில் 83 ஓட்டங்கள் எடுத்து இந்தியாவின் வெற்றி வாய்ப்பைச் சாத்தியமாக்கிய சேவாகின் பங்கு பிரமிப்பூட்டக்கூடியது. முதல்



இன்னிங்ஸில் 250 ஓட்டம் எடுக்கச் சிரமப்பட்ட இந்தியா, இரண்டாம் இன்னிங்ஸில் 387 ஓட்டங்களை எடுக்க இயலும் என்று எவருமே எண்ணவில்லை. ஏற்கனவே பந்து தாறுமாறாக எகிறவும், திரும்பவும் ஆரம்பித்துவிட்ட நிலையில், ஆட்டம் வெற்றி தோல்வியின்றி முடிந்தாலே 'பெரிய காரியம்' என்ற நிலையை, அதிரடியாக மாற்றிய சேவாகுக்கு 'ஆட்ட நாயகன்' விருது அளிக்கப்பட்டது பொருத்தமானதே.

1999 ஜனவரியில் பாகிஸ்தான் அணிக்கு எதிரான ஆட்டத்தில் சச்சின் 135 ஓட்டங்கள் எடுத்து, அணியை வெற்றிக்கு மிக அணித்தாக கொணர்ந்தார். ஏழாவது விக்கட்டாக அவர் ஆட்டமிழந்தபோது, 16 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற நிலை (இலக்கு 271). ஆனால், நான்கே ஓட்டங்களில் அடுத்தடுத்து மூன்று விக்கட்டுகள் வீழ்ந்தன. கிட்டத் தட்ட பத்து ஆண்டுகள் கழித்து, கிட்டத்தட்ட அதே போன்றதொரு சூழ்நிலையில் சச்சின் நன்றாக ஆடிக்கொண்டிருந்தபோது, 1999 போட்டியின் நினைவு வராத கிரிக்கெட் ரசிகர்கள் எவருமே இருந்திருக்க முடியாது. "அந்தத் தவறிலிருந்து பாடம் கற்றுக்கொண்டேன்; இந்த முறையும் அப்படி ஆகிவிடக்கூடாது என்பதில் உறுதியாக இருந்தேன்" என்று போட்டி முடிந்த பின்னர் ரெண்டுல்கார் கூறினார். யுவராஜ் சிங் தொடக்கத்தில் சிறிது தடுமாறினாலும் பின்னர் தன் இயல்பான ஆட்டத்தை ஆடி, ரெண்டுல்காருக்கு உறுதுணையாக இருந்தார். உணவு இடைவேளைக்கும் தேநீர் இடைவேளைக்கும் இடையே விக்கட் விழாமல் இருவரும் ஆடியபின்னர் திடீரென்று சூழல் மாறிவிட்டது; இறுக்கம் தளர்ந்துவிட்டது. இந்தியா வெற்றிபெறுமா என்ற கேள்வி சந்தேகத்துக்கு அப்பாற்பட்டதாகி, சச்சின் நூறு ஓட்டங்கள் எடுப்பாரா என்ற கேள்வியே முன்னிலை பெற்றது. ஒரு நல்ல இன்னிங்ஸ் என்பது அதைப் பார்த்துக்கொண்டிருப்பவர்களின் பதற்றத்தைக் குறைத்து, ரசனையைக் கூட்டும். யுவராஜும் சச்சினும் கூட்டணி சேர்ந்த ஒரு மணிநேரத்துள் அப்படிப்பட்ட சூழ்நிலை உருவாகிவிட்டது. அதுபோலவே, டிவிலியர்ஸ் -டுமினி ஜோடியின் சரளமான ஆட்டமும் ஆட்டத்தைக் கொண்டாட்டமாக மாற்றியது.

நாடுகளுக்கு இடையேயான விளையாட்டு என்பது யுத்தத்துக்கு ஒரு மாற்று வடிவம் என்று சொல்லப்படுவதுண்டு. விளையாட்டில் பெறும் வெற்றி தோல்விகளுக்குப் பின்னர் ஏற்படும் அதீதமான உணர்ச்சிகளும், எப்பாடுபட்டாவது வெற்றிபெறவேண்டும் என்ற வெறியும்



முரளிதரன்

இதன் அடையாளங்களாக காட்டப்படுவதும் உண்டு. கையளவேயான சிலர், சில விதிமுறைகளுக்கு உட்பட்டு நடுவர்கள் முன்னிலையில், ஆட்ட மைதானத்தில் போட்டியிட்டுப் பெறும் வெற்றி அல்லது தோல்வி, பலகோடி மக்கள் கொண்ட ஒரு தேசத்தின் பெருமிதத்தின் அல்லது அவமானத்தின் குறியீடாக எப்படி மாறுகிறது என்பது சிந்திக்கத்தக்கது. இதற்குப் பின்னாலுள்ள தேசிய அடையாள உளவியல் கூறுகளும் ஆராயப்படவேண்டியவை.

அதுபோலவே, விளையாட்டில் நிகழ்த்தப்படும் சாதனைகளும் மனித எத்தனங்களின் எல்லைகளை விரிவுபடுத்தும் காரணிகளாக மாறுவதும் கவனிக்கத்தக்கது. ஒரு தனிநபரோ அல்லது அணியோ - எந்த விளையாட்டிலும் - ஒரு சாதனை நிகழ்த்தினால், மற்றையவர்கள் அதைக்கண்டு பிரமிப்பதுடன் நிற்பதில்லை. இந்தச் சாதனையை இவர்(கள்) நிகழ்த்த முடியும் என்றால் ஏன் நாமும் அதைச் செய்யக்கூடாது என்னும் வீராப்பை அது ஏற்படுத்துகிறது. இந்த அணுகுமுறை திறமைகளின் எல்லைகளைத் தொடர்ந்து மாற்றியமைக்கிறது. பழைய சாதனைகள் வரலாறுகளாகிப் புதிய சாதனைகள் புதிய சவால்களை முன்வைத்தபடி, மனித சாத்தியங்களின் எல்லைகளை அதிகரித்து உருவாகின்றன. ஆட்டத்தின் எல்லைகளைத்தாண்டிய வாழ்விலும், ஊக்கமும் தாக்கமும் ஏற்படுத்தக்கூடியவையாக இவை மாறுகின்றன.

மிகக் குறுகிய இடைவெளியில் நிகழ்த்தப்பட்ட இந்த இரு வெற்றிகளும் பெரிய 'ஓட்டம் தேடல்' என்பது குறித்த அச்சத்தை அனைத்து நாடுகளின் அணிகளின் மனங்களிலும் குறைத்திருக்கும். ரெஸ்ற் போட்டியில் இடம்பெறப் போராடிக்கொண்டிருக்கும் யுவராஜும் முதல் போட்டியில் ஆடும் டுமினியும் இவ்வளவு நெருக்கடியான கட்டத்தில் இவ்வளவு இலகுவாக ஆடமுடியும் என்றால், நம்மாலும் முடியும்; முடியவேண்டும் என்ற உறுதி பல துடுப்பாட்டக்காரர்களுக்கும் ஏற்பட்டிருக்கும். கிரிக்கெட்டில் சேவாகோ, முரளிதரனோ செய்யும் சாதனைகளை என்னால் என் துறையில் ஏன் செய்யமுடியாது என்ற எண்ணம், வேறொரு துறையில் இருப்பவருக்கும் ஏற்படக்கூடும். ஒருவரோ அல்லது ஒரு சிலரோ புரியும் சாதனை என்பது ஒட்டுமொத்த மனித முயற்சிகளின் எல்லைக்கோட்டினை விரிவுபடுத்துவதன்றி வேறல்ல. எந்தச் சாதனையும் மனித இனத்தை அடுத்த கட்டத்தை நோக்கி நகர்த்தவல்லது. அறிவியல் முதல் விளையாட்டுவரை அனைத்துத் துறைகளுக்கும் இது பொருந்தும்.

'சாதனை என்பதே முறியடிக்கப்படுவதற்காகத்தான்' என்று சுனில் கவாஸ்கர் ஒருமுறை - அவரது சாதனை ஒன்று முறியடிக்கப்பட்டபோது - சொன்னது நினைவுகூரத்தக்கது. கபில்தேவ் 434 விக்கட்டுகளை எடுத்தபோது கிரிக்கட் உலகம் பிரமித்தது. கர்ட்னி வால்ஷ் அவரைத் தாண்டியபோதும் ஆச்சரியப்பட்டது. ஆனால், க்ளென் மெக்ரா, ஷேன் வாரன், முத்தையா முரளிதரன் ஆகியோர் அநாயாசமாக இந்த எல்லைக் கோட்டை விரிவுபடுத்திவிட்டார்கள். வால்ஷையும் கபிலையும் மெக்ராவையும் விட அதிக விக்கட்டுகளை வீழ்த்திய அனில் கும்ப்ளே மொத்தப் பட்டியலில் மூன்றாம் இடத்தில்தான் இருக்கிறார் என்பதைப் பார்க்கும்போது, சாதனைகள் மனித முயற்சிகளின் எல்லைக்கோட்டினை எந்த அளவுக்கு விரிவுபடுத்தியிருக்கின்றன என்பதைப் புரிந்துகொள்ளலாம்.

இந்தவகையில் பார்த்தால், இந்தியாவும் தென் ஆபிரிக்காவும் செய்துள்ள சாதனைகள், மேலும் இதேபோன்ற சில சாதனைகளுக்கு வழிவகுக்கலாம். நான்காவது இன்னிங்ஸ் குறித்த பயத்தையும் 350 ஓட்டங்களுக்கு மேல் ஓட்டங்களைத் தேடுவது குறித்த மனத் தடைகளையும் போக்கலாம். இன்னும் சொல்லப்போனால், பாதுகாப்பான இலக்கு என்ற ஆசுவாசத்தைத் தகர்த்துவிடலாம். இலக்கு நிர்ணயத்தில் மேலும் எச்சரிக்கையான அணுகுமுறையைக் கொணர்ந்து, வெற்றி தோல்வியற்ற நிலையை எய்துவதற்கான வாய்ப்புகளும் அதிகரிக்கலாம்.

விளைவுகள் இப்படிப் பலவிதமாக இருக்கலாம்; ஆனால், 2008 டிசம்பர் நிகழ்வுகள் ரெஸ்ற் கிரிக்கெட் அணுகப்படும் விதத்தையே மாற்றக்கூடிய திறன் படைத்தவை என்பதில் சந்தேகமில்லை.■

KUMARANS

# Grocers & News Agents

குமரன்ஸ்

லீலா தயாரிப்பு பொருள்களின்
இறக்குமதியாளர்களும் ஏக விநியோகஸ்தர்களும்

லீலா

## Money Transfer Service

(Global Exchange Ltd, Western Union)

**KUMARANS**
142-144 Hoe Street
Walthamstow
London E17 4QR

Tel: 020-8521 4955, 020-8521 4411
Fax: 020-8521 9482
Email: kumaransltd@aol.com



'பொம்மலாட்டம்' - அர்ஜுன், நானா படேகர்

## பொம்மலாட்டம்

எழுத்து, இயக்கம்: பாரதிராஜா
தயாரிப்பு: தெற்கத்திய கலைக்கூடம்
நடிப்பு: நானா படேகர், அர்ஜுன், காஜல் அகர்வால்
இசை: ஹிமேஷ் ரேஷமைஷா



### ஜொலிக்கும் வைரம்

புத்திசாலித்தனம், உணர்ச்சி ஆகிய இரண்டையும் சரி விகிதத்தில் கலந்து ஒரு 'த்ரில்லரை' படைத்துள்ளார் பாரதிராஜா. ஒரு கலைஞனின் வாழ்க்கையில் ஓர் அத்தியாயத்தைச் சொல்கிறது பொம்மலாட்டம்.

இயக்குநர் ராணா, அவர் அறிமுகப்படுத்தும் ஒரு கதாநாயகியைக் கொலை செய்வதாகத் தொடங்கும் படம், அந்த நாயகிகுறித்த சிக்கல்கள், மேலும் இரண்டு கொலைகள் என்று நீள்கிறது. இந்தக் கொலைகளுக்கும் இயக்குநருக்கும் என்ன தொடர்பு என்ற கேள்வியை எழுப்பும் படம், ஸ்தம்பிக்கவைக்கும் திருப்பத்துடன் பல புதிர்களை அவிழ்த்தபடி நிறைவடைகிறது. கொலைகளின் மர்மம் விடுபடும்போது திரைக்கதையின் சில ஓட்டைகளும் அம்பலமாகின்றன.

கதையை நகர்த்திச்செல்லும் விதத்தில் திரைப்பட ஊடகத்தின்மீது பாரதிராஜாவுக்குள்ள ஆளுகை வெளிப்படுகிறது. ராணாவின் ஆளுமையை உணர்த்தும் காட்சிகள் செறிவாகக் காட்சிப்படுத்தப் பட்டிருக்கின்றன. எதிர்பார்க்கமுடியாத ஒரு 'கிளைமாக்ஸை'யும் அதற்கு வந்துசேரும் திரைக்கதையையும் நம்பகத்தன்மையோடு கச்சிதமாக வடிவமைத்திருக்கிறார். அழகம் பெருமாளின் வசனங்கள் படத்துக்குப் பெரிய பலம்.

பாத்திர வார்ப்பை முழுமையாக உள்வாங்கிப் படைப்புத் திறனோடு வெளிப்படுத்தியிருக்கும் நானா படேகரைத்தவிர, வேறு யாரையும் அந்த வேடத்தில் நினைத்துப்பார்க்கவே முடியவில்லை. அர்ஜுன் அமைதியான ஆனால், அழுத்தமான வேடத்தில் கவருகிறார். காஜல் அகர்வால் நிறைவாகச் செய்கிறார். நடிகையாக வரும் ருக்மணி விஜயகுமார் தோற்றத்திலும் நடிப்பிலும் வியக்கவைக்கிறார்.

பொம்மலாட்டம் - சோபையற்ற வணிகச் சரக்குகளுக்கு மத்தியில் ஜொலிக்கும் வைரம்.


---

## பூ

இயக்கம்: சசி
தயாரிப்பு: மோசபேர் நிறுவனம்
நடிப்பு: பார்வதி, ஸ்ரீகாந்
இசை: எஸ். எஸ். குமரன்

### எளிமை அழகு

இலக்கியப் படைப்புகளுக்குத் திரை வடிவம் தருவது சவாலான விஷயம். ச. தமிழ்ச் செல்வனின் 'வெயிலோடு போய்' என்னும் சிறுகதையைப் படமாக்கியி



'பூ' பார்வதி



ருக்கும் சசி, கதையின் ஜீவனைச் சிதைக் காமல் திரைவடிவம் கொடுத்திருக்கிறார்.

தன் மாமன் மகன் தங்கராசுவின்மீது சிறிய வயதிலிருந்தே மாரிக்குக் கொள்ளை ஆசை. அவன் வளர வளர, அவளது காதலும் வளர்கிறது. சூழ்நிலைக் கைதியாகும் தங்கராசு அவள் காதலைப் புறக்கணித்தபோதும், தன் காதலனின் மகிழ்ச்சியே முக்கியம் என்று மாரி நினைக்கிறாள். கடைசியில் அந்த மகிழ்ச்சியும் கைநழுவிப் போகிறது.

பாத்திர வார்ப்பிலும் கதையை இயல்பாக நகர்த்திச் செல்வதிலும் மட்டுமன்றி, மிகச் சிறிய அம்சங்களில்கூட மிகுந்த கவனம் செலுத்தியிருக்கிறார் சசி. பள்ளிக் கூடக் காட்சிகள், சொந்தத் துயரத்தின் பிடியில் மௌனம் காக்கும் மாரி, தங்கராசுவின் நிலைகண்டு வெடித்து அழுவது என்று பல காட்சிகள் மனதில் நிற்கின்றன.

மாரியாக நடித்திருக்கும் பார்வதியின் அழகிய முகத்தில் பளிச்சிடும் காதலும் துருதுருப்பும் கவருகின்றன. சிரிப்பு, சோகம், கோபம், ஆற்றாமை என அத்தனை உணர்வுகளையும் அநாயாசமாக வெளிப்படுத்துகிறார். முக்கியத்துவம் குறைந்த பாத்திரத்தில் நடிக்க ஒப்புக் கொண்ட தைரியத்துக்காகவே ஸ்ரீகாந்



புதுமுகம் எஸ். எஸ். குமரனின் இசையும் பி. ஜி. முத்தையாவின் காமிராவும் படத்துக்கு கூடுதல் பரிமாணங்களைச் சேர்க்கின்றன.

மாரி தூக்குமாட்டிக்கொள்ளும் நாடகம், தேவையற்ற இரண்டு பாடல்கள், தங்கராசுவின் மனைவியின் பாத்திரம் எனச் சில குறைகள் உறுத்தினாலும், கவித்துவமான காட்சிப் படிமங்கள், யதார்த்தமான வசனங்கள், வலுவான பாத்திர வார்ப்புகள், அற்புதமான நடிப்பு ஆகிய அம்சங்கள் 'பூ'வுக்கு நறுமணம் சேர்த்து முக்கியமான படமாக ஆக்குகின்றன.

## அபியும் நானும்

**இயக்கம்: ராதா மோகன்**
**தயாரிப்பு: மோசர்பேர், டூயட் மூவிஸ்**
**நடிப்பு: பிரகாஷ்ராஜ், த்ரிஷா, ஐஸ்வர்யா**
**இசை: வித்யாசாகர்**



அபியும் நானும் - ஐஸ்வர்யா, த்ரிஷா, பிரகாஷ்ராஜ்

### ஓர் அப்பாவின் கதை

ஒரு குழந்தை பிறக்கும்போது ஓர் அப்பாவும் பிறக்கிறார். குழந்தைகள் வளர்கின்றன. ஆனால், சில அப்பாக்கள் வளர்வதில்லை. அப்படிப்பட்ட ஓர் அப்பாவின் கதைதான் 'அபியும் நானும்'. குழந்தை வளர்ந்து, தனித்த இருப்பும் அடையாளமும்கொண்ட ஆளுமையாக வளர்ந்து நிற்கும்போது, அந்த மாற்றத்தை ஜீரணித்துக்கொள்ள முடியாத வலியை இந்த அப்பா எப்படி எதிர்கொண்டு, தாண்டிவருகிறார் என்பதுதான் கதை.

அப்பா - மகள் பாசப் பிணைப்பையும் தந்தையின் உணர்வுகளையும் சொல்லும் காட்சிகளில் சில இயற்கையாக உள்ளன. சில செயற்கையாகவும், வகை மாதிரித் தன்மை கொண்டவை யாகவும் மாறிவிடுகின்றன. உறவின் பல்வேறு சாயைகளையும் பரிமாணங்களையும் பார்க்கமுடியவில்லை. யதார்த்தத்துக்குப் புறம்பான இனிமை தூக்கலாகத் திகட்டுகிறது.


உணர்ச்சிகளின் கொந்தளிப்பை பிரகாஷ்ராஜ் நன்கு வெளிப்படுத்துகிறார். குழந்தையின் பாதுகாப்பு சார்ந்த பதற்றம், பிரிவின் வலி, நெகிழ்ச்சி, அதிர்ச்சிகளை ஏற்றுக்கொண்டு மெல்ல மெல்லப் பக்குவமடையும் பாங்கு எல் லாவற்றையும் நம்பகத்தன்மையுடன் சித்தரிக்கிறார். துருதுருப்பு, அன்பு, உற் சாகம், பொய்க் கோபம், காதல் ஆகிய அனைத்தையும் சின்னச் சின்ன முக பாவனைகளால் அழகாக வெளிப்ப டுத்துகிறார் த்ரிஷா.

புதிய ஒளிப்பதிவாளர் ப்ரீத்தி அற்புதமாகப் படம்பிடித்திருக்கிறார். வித்தியாசாகரின் இசையில் 'வா வா என் தேவதையே..' பாடல் இனிமை.




மனித உறவின் பரிமாணத்தைச் சொல்ல முயன்றிருக்கும் இயக்குநர், ஒற்றைப் பரிமாணத் தன்மையையும் திகட்டும் இனிமையையும் தவிர்த்திருந்தால் இது முக்கியமான படமாக இருந்திருக்கும்.

## கைமாறிய 'எந்திரன்'



ஷங்கர் இயக்கத்தில் ரஜினிகாந் - ஐஸ்வர்யா ராய் நடிக்கும் 'எந்திரன்' படத் தயாரிப்பு உரிமையை ஐங்கரன் நிறுவனத்திடமிருந்து கலாநிதி மாறனின் சன் பிக்சர்ஸ் வாங்கிவிட்டது. சுமார் 165 கோடி ரூபா செலவில் படம் தயாரிக்கப்படும் என்று தெரிகிறது.

சமீபத்தில் பட விநியோக உரிமை, படத் தயாரிப்பு ஆகியவற்றில் இறங்கிய சன் பிக்சர்ஸ், இதுவரை சிறு பட்ஜெட் படங்களை மட்டுமே வாங்கி விநியோகம் செய்துகொண்டிருந்தது. இப்போது, முதன்முறையாக ரஜினி - ஷங்கரின் பிரமாண்டமான படத்தைத் தயாரிக்கவுள்ளது.



படத்தைத் தொடங்கிய ஐங்கரன் நிறுவனம், நிதி நெருக்கடி காரணமாக இவ்வளவு பெரிய படத்தைத் தயாரிக்க முடியாமல் விலகிக்கொண்டிருப்பதாகச் சொல்லப்படுகிறது.

ரஜினிகாந், ஷங்கர், ஐஸ்வர்யா ராய், ஏ. ஆர். ரஹ்மான் ஆகிய பெரும் தலைகளோடு, பொருளாதார ரீதியான வலிமை கொண்ட சன் பிக்சர்ஸ் சேர்ந்திருப்பதால் 'எந்திரன்' இனித் தங்குதடையில்லாமல் முன்னேறும் என்று எதிர்பார்க்கலாம். படம் 2009 இறுதியில் திரைக்கு வரும் என்று சொல்லப்படுகிறது.

## பாரதிராஜாவின் அடுத்த குதிரை



பொம்மலாட்டம் படத்துக்குப் பின்னர் தன் கனவுப் படமான 'குற்றப் பரம்பரை' படத்தை எடுத்துவிடவேண்டும் என்பதில் உறுதியாக இருக்கிறார் பாரதிராஜா. பொம்மலாட்டத்தைத் தயாரிக்க முழுப் பணத்தையும் கொடுத் தவர் இவரது நண்பராம். வெளிநாட்டில் வாழும் இந்தியரான இவர், முதலீடுசெய் ததில் பாதிவந்தாலலே போதும்; மேலும் 20 கோடி தருகிறேன், 'குற்றப் பரம்பரை'யை எடுங்கள் என்று கூறியிருக்கிறாராம்.

கிராமங்களின் வறுமையை இன்னும் பதிவுசெய்யவில்லை என்ற ஏக்கம் தொடர்வதில், 'மதர் இந்தியா' மாதிரி ஒரு படத்தை இயக்கவேண்டும் என்று விரும்புகிறார் பாரதிராஜா.

## 'பேராண்மை'யில் ஹொலிவூட் நடிகர்கள்



இயக்குநர் ஜனநாதனின் 'பேராண்மை' படத்தின் படப்பிடிப்பு நூறாவது நாளைத் தாண்டி வெற்றிகரமாகப் போய்க்கொண்டிருக்கிறது. நிதிநெருக்கடியில் சிக்கியிருக்கும் ஐங்கரன் நிறுவனம், இந்தப் படத்தின் படப்பிடிப்பை மட்டும் எவ்வித இடையூறுமில்லாமல் தொடர்ந்து நடாத்திவருகிறது.

இடையில் ஒருவாரம் அமெரிக்காவுக்கு போய்வந்திருக்கிறார் ஜனா. பேராண்மையில் முக்கியமான பாத்திரத்தில் இரண்டு ஹொலிவூட் நடிகர்கள் நடிக்கிறார்கள். அவர்களைத் தேர்வு செய்யத்தான் இந்தப் பயணம்.

கதாநாயகன் ஜெயம் ரவியோடு ஹொலிவூட் நடிகர் ஒருவர் மோதக்கூடும்.

## ஜோதிகாவுக்கு வந்த அழைப்பு



சோனியா அகர்வால் சின்னத்திரைக்கு வந்ததிலிருந்தே அவரைப்போல குடும்பத் தலைவிகளாகிவிட்ட முன்னாள் கதாநாயகிகளுக்கு வலைவீசத் தயாராகிவருகிறது ஒரு கூட்டம். தினந்தோறும் 75 ஆயிரம் ரூபா சம்பளம் வாங்குகிறார் சோனியா. அதைவிட அதிகமாகக் கொடுக்கத் தயார் என்று சமீபத்தில் இவர்கள் அணுகியது ஜோதிகாவைத்தானாம். திருமணமாகி ஒரு குழந்தையும் பிறந்துவிட்ட நிலையில், நல்ல கதையாக விருந்தால் சினிமாவில் நடிக்கலாம் என்று கூறிவருகிறார் ஜோ. கணவர் சூர்யாவும் சம்மதித்துவிட்டாராம்.

ஆனால், மருமகள் மீண்டும் அரிதாரம் பூசக்கூடாது என்பதில் கறாராக இருக்கிறாராம் சிவகுமார்.

## விஷாலின் புதிய தோரணை



'சத்யம்' படத்தில் ஏற்பட்ட அதிர்ச்சிக்குப் பிறகு சிறிதுநாள்கள் பொறுமையாகவிருந்த விஷால் மீண்டும் களமிறங்குகிறார். அவரது அண்ணன் விக்ரம் கிருஷ்ணா தயாரிக்கும் 'தோரணை' என்னும் படத்தில் நடிக்கிறார். தமிழ், தெலுங்கு ஆகிய இரு மொழிகளில் தயாராகும் இப்படத்தில் விஷாலுக்கு ஜோடியாக ஸ்ரேயா நடிக்கிறார்.

மௌலி, ஷாஜி கைலாஷ், பூபதி பாண்டியன் ஆகியோரிடம் உதவியாளராகப் பணியாற்றிய சபா ஐயப்பன் கதை, திரைக்கதை, வசனம் எழுதி, படத்தை இயக்குகிறார். அழுத்தமான குடும்பக் கதையை 'கொமெடி', 'அக்ஷன்' பின்னணியில் ஜனரஞ்சகமாகக் கூறுகிறோம் என்கிறார் இயக்குநர்.

பிரகாஷ்ராஜ், பாண்டியராஜன், கிஷோர், மனோபாலா, டி. பி. கஜேந்திரன், லிவிங்ஸ்டன், சுமன்ஷெட்டி, மயில்சாமி, பிரமிட் நடராஜன், சீதா, பரவை முனியம்மா உள்பட பலர் நடிக்கிறார்கள். மணிசர்மாவின் இசையில் சினேகன், விவேகா பாடல்களை எழுதுகிறார்கள்.

## விஜயின் ஐம்பதாவது படம்




விஜயின் 50 ஆவது படத்தை பிரபல மலையாள இயக்குநர் சித்திக் இயக்குவார் என்று வந்த செய்திகளில் சின்னத் திருத்தம். இடையில் ஜெயம் ராஜாவிடம் ஒரு கதையைக் கேட்டு அசந்துபோனாராம் விஜய். இதையே தனது பொன் விழாப் படமாக வெளியிட்டால் என்ன என்ற முடிவுக்கு வந்திருக்கிறாராம்.

இதுவரை தெலுங்கு படங்களையே 'ரீமேக்' செய்துவந்த ராஜாவும், முதன்முறையாக தமிழுக்காகப் பிரத்தியேகமாக ஒரு கதையை உருவாக்கியிருக்கிறார். இந்த முதல் கதைக்கு விஜயே உருவம் கொடுக்கும் வாய்ப்பு வந்தால் இன்னும் பெரிய அளவில் இருக்குமே என்றும் நினைக்கிறார். பரபரப்பாக வேலைகள் நடந்துவருகின்றன.

ஒருவேளை விஜய் இல்லாவிட்டாலும், கதைக்கு உயிர் கொடுக்க தம்பி ரவி இருக்கிறார்; அது போதுமே.

## முதலிடம் பெறும் முனைப்பில் சுசி கணேசன்



விக்ரம் - ஸ்ரேயா நடிப்பில் சுசி கணேசன் இயக்கும் 'கந்தசாமி' படத்தின் மலையாள உரிமை இரண்டு கோடிக்கும், தொலைக்காட்சி உரிமை நாலரைக் கோடிக்கும் விற்பனையாகியிருக்கிறது. 2009இல் நான்தான் 'நம்பர் வன்' டைரக்டர் என்கிறார் சுசி கணேசன். இதை, கர்வத்தோடு சொல்வதாக எடுத்துக்கொள்ளக்கூடாது. படத்தை அவ்வளவு பிரமாண்டமாக எடுத்திருக்கிறேன் என்கிறார் இவர்.

'கந்தசாமி' ஐந்து நாடுகளில் படமாக்கப்பட்டிருக்கிறது. ஸ்பானிஷ், இத்தாலி, ஆங்கிலம் ஆகிய மொழிகளில் 'டப்பிங்' செய்யப்படுகிறதாம். இந்த 'கந்தசாமி'யின் வெற்றியை இன்னொரு கந்தசாமிதான் வந்து முறியடிக்கவேண்டும் என்று சவால் விடுகிறார் சுசி.

## நயன்தாராவுக்கும் கோவிலா?



குஷ்பு, நமிதா போன்ற நடிகைகளுக்குக் கோவில்கட்டிய திருச்சி ரசிகர்கள், தற்போது நயன்தாராவுக்கும் கோவில் கட்டத் தீர்மானித்துள்ளனர். கோவில் கட்டும் வேலை விரைவில் தொடங்கும் எனத் தெரிகிறது. இதற்காக, அரவக்குறிச்சி அருகே ஓர் ஏக்கர் நிலம் வாங்கப்பட்டுள்ளதாம்.

கனவுக் கன்னிகளாகக் கொண்டாடப்படும் கவர்ச்சி நடிகைகளுக்குக் கோவில் கட்டிக் கும்பிடும் உளவியல் பற்றி யாராவது ஆராய்ச்சி செய்தால் நன்றாக இருக்கும்.

## 'ஆயிரத்தில் ஒருவன்' தாமதம்: செல்வா விளக்கம்

காதல், காமம், மூர்க்கம் ஆகிய உணர்ச்சிகளின் வெளிப்பாடாக எடுக்கப்பட்ட 'காதல்கொண்டேன்', 'ரெயின்போ காலனி' ஆகிய படங்களுக்குப் பிறகு, கோபம்கொண்ட இளைஞனின் போராட்டத்தைச் சொல்லும் 'புதுப்பேட்டை'யை எடுத்தேன். 'ஆயிரத்தில் ஒருவனி'ல் இவை எதுவுமே இருக்காது என்கிறார் செல்வராகவன்..

இதுமாதிரி ஒரு படம் தயாராக இரண்டு வருடம் ஆவதில் ஆச்சரியம் எதுவுமில்லை என்று சொல்லும் செல்வா, படம் வெளிவந்த பின்னர்தான் தாங்கள் பட்ட கஷ்டத்தின் காரணமும் அருமையும் புரியும் என்கிறார்.

## உலக அழகி பார்வதி


உலக அரங்கம் தொடங்கி, உள்ளூர் வரை அழகிகளாகப் பட்டம் பெற்றவர்கள் சினிமாவில் நடிப்பது புதிது அல்ல. உலக அளவிலான அழகிப் பட்டம் வென்ற ஐஸ்வர்யா ராய், சுஷ்மிதா சென், பிரியாங்கா சோப்ரா ஆகியோர் முதல், சென்னை அழகியாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட த்ரிஷாவரை, பல அழகிகள் சினிமாவுக்கு வந்துள்ளனர். ஆனால், முதன் முறையாக அழகிப் போட்டிகள் திரைக்கு வரவிருக்கின்றன.

இப்படத்தை பம்பாய் ஸ்டேஜ் தியேட்டர்ஸ் நிறுவனத்துடன் இணைந்து, திரைப்புலி டொட் கொம் அன்ட் பிலிம் ரிவி நிறுவனத்தின் கூட்டுத் தயாரிப்பாக உருவாக்குகிறார் பாபு கணேஷ். அழகிப் போட்டிகளில் கலந்துகொண்ட பல பெண்கள் இதில் நடிக்கிறார்கள்.

மகாராஷ்டிரா, ஆந்திரா, தமிழ்நாடு, கேரளா, கர்நாடகா மாநிலத்தைச் சேர்ந்த அழகிகளுடன், உலக அழகிப் பட்டதை வென்ற ஒருவரும் முக்கிய பாத்திரத்தில் நடிக்கிறாராம்.

படத்தில் எது இருக்கிறதோ இல்லையோ, அழகுக்குப் பஞ்சம் இருக்காது.





இலங்கை
இந்திய
மளிகைப் பொருட்கள்
மற்றும்
மரக்கறிகள்
மொத்தமாகவும்
சில்லறையாகவும்
கிடைக்கும்
சிறந்த இடம்
V.T. CASH & CARRY
11-15 Rue Cail, 75010 Paris
Tél: 01 40 05 07 18
M°: La Chapelle / Gare du Nord
எல்லா விதமான
மரக்கறிகளும்
மிக மலிவு விலையில்


BRAND Niru®
Chicken Curry Sauce
BRAND Niru
100% NATURAL
Madras style
Chicken Curry Sauce
Ready to Cook
SAUCE ONLY
Introductory Offer BUY 1 GET 1 FREE
HOME MADE
READY TO COOK
HOT & SPICY
JUST ADD CHICKEN & COOK
Introducing...
READY TO COOK
Introductory Offer
BUY 1
GET 1
FREE
SAUCE
Also available:
KERALA FISH SAUCE
CHICKEN CURRY SAUCE
PEPPER CHICKEN SAUCE
CHETTINAD FISH CURRY SAUCE
MUTTON SAUCE
VEGETABLE BRIYANI GRAVY


Western Jewellers
Jewellers & Gem Merchants
230 Upper Tooting Road
London SW17 7EW
Telephone:
020 8767 3445
Opening Hours:
Monday to Saturday10.00am - 6.30pm
Sunday 11.00am - 5.30pm
Season's Best is "Summer"
Saree's Best is "Silk Emporium Sarees"
SILK EMPORIUM
122 Upper Tooting Road, London SW17 7EN
Tel: 020 8672 1900
WESTERN
Jewellers & Textiles
5 Plaza Parade, 29 - 33 Ealing Road, Wembley, Middlesex HA0 4YA
Tel: 020 8903 0909